உ

பரமபதி துணை.

ஸ்ரீமகாபாரதத்தில்

# பதிமூன்றாம்நாள்

# அபிமன்னன்சண்டை

இஃது

மதுரைமாநகரம் ம-ள-ள-ஸ்ரீ,

சேமசுந்தரம்பிள்ளையவர்கள்குமாரரும்

சங்கீதசாகித்யபரிந விஜய கதாப்பிரசங்கவித்வான்

ம-ள-ள-ஸ்ரீ, மதுரகவி

வைட்டிசுந்தரதாஸரவர்கள்

சகோதரருமாகிய

ம-ள-ள-ஸ்ரீ, மதுரகவி

வீரபத்திரஞானிரவர்களால்

இயற்றாபதை.

மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம்

S. முத்தையபிள்ளையவர்களால்

பூவிருந்தவல்லி

சுந்தரமுதலியாரது

சுந்தரவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

இதன்விலை அணா - ச.

Registered Copy Right.

OFFICE OF ... 13 MAR ... MADRAS

உ

பரமபதிதுணை.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத்தலைவருக்கும் தெரிவிப்பதியாதெனில், மதுரைமாநகரம் ம-ா-ா-ஸ்ரீ, சோமசுந்தரம் பிள்ளையவர்கள் குமாரரும் சங்கீதசாகித்ய பக்தவிஜயகதாப்பிரசங்கவித்வான் ம-ா-ா-ஸ்ரீ, மதுரகவி மீனாட்சிசுந்தர தாஸரவர்கள் சகோதரருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, மதுரகவி வீரபத்திரதாஸரவர்களால், இயற்றிய அபிமன்னன்சண்டையை, மதுரைப்புதுமண்டபம் புக்ஷாப் S. முத்தையபிள்ளையவர்களால் அச்சிட்டு கெவரன்மெண்டில் ரிஜஸ்தர்செய்[illegible] ம்மேற்படி யார் வுத்தரவின்றி ஷை புத்தகத்தை அச்சு[illegible]ம்புபவர்களும் அச்சுக்கூடத்தலைவர்களும் 1887 வது [illegible]-வது ஆக்டின் 20-வது, பிரிவில் 6-வது விதியின்படி மேற்படியாரால் கோரும்நஷ்டத்திற் குத்திரவாதிகளாகவும் பினல்கோர்ட்டாரவர்களை [illegible] ளாகவுமிருப்பார்களென்று யாவரும் [illegible] ர்களாகமேற்படியாரால் ரப்பர் சில் முத்திரையும் வைத்திருக்கிறது.

இப்படிக்கு,

☞ S. முத்தையபிள்ளை.

116562

உ

பரமபதிதுணை.

# சாற்றுக்கவிகள்.

இராமநாதபுரஞ் சமஸ்தானவித்வான் ம-ள-ள-ஸ்ரீ,
துவாத்திரிம்சதவதானி சரவணப்பெருமாட் கவிராயரவர்கள்
சகோதரராகிய ம-ள-ள-ஸ்ரீ,
இலட்சுமணப்பெருமாட் கவிராயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பன்னூ லெலாமுணர்ந்த வீரபத்திரக் கவீஸ் பாலென்னூ ளூற்றும்
முன்னூலா மபிமன்னன் சண்டையைய மானையதாய்மொழிந்தான்பாரி
வின்னூற்கு நிகராகப் பலவனைந்தி முனிவரும்பா மிசைத்த செஞ்சொல்
நன்னூலவர் னூலலவென் றியம்புவரோ விவன்பெருமை நவிலொணா
இதுவுமவர்கள். [தே.

கனம்பொருந்து மபிமன்னன் பதின்மூன்றும் நாட்போரின் கதையை மாவிற், பனுவல்சிறந்த மதிவதனன் வீரபத்ர தாஸனென்போன் பசுந்தேனேபோல், மனக்குணிக்கும் மானேயெனுந் தமிழுரைத்தா னுரைத்தவன்றன் வாய்மை கூற, அனந்தனுநாப் பிழவென்றான் நாமகளும் நாவிலென்றேயறைந்திட் டாளே.

மேற்படியாரவர்கள் குமாரராகிய ம-ள-ள-ஸ்ரீ,
சண்முகசுந்தரக்கவிராயரவர்களியற்றியது.

பன்னுறும் புகழ்படைத்த வபிமன்னன் பதின்மூன்றும் பருவந் தன்னைச்
சொன்னமுற வசைப்புகழும் வீரபத் திரதாஸன் சுருதிப் போலும்
இன்னுரைவித்தாருநிக ரிலையெனவம் மானையதா யிசைத்தான் மிக்கோன்
அன்னவனின் னூலிருக்கப் பாரதத்தை யார்தமென் றகற்றிட் டாரோ.

இராமநாதபுரஞ் சமஸ்தான வித்வான் சோடசாவதானம்
ம-ள-ள-ஸ்ரீ,
வேலாயுதக்கவிராயரவர்கள் குமாரராகிய
ம-ள-ள-ஸ்ரீ,
சீ. சரவணப்பெருமாட்கவிராயரவர்களியற்றியது.

கண்டுகிகரென்பர்சிலர் தேனென்பார்க ள்
கனிரசமென்பர்சருக் கரையீதென்ப ர்
வண்டுறைமாங்கனியிதென்ப ரெம்மனோர்க ள்
மணக்கு தெய்வப்பொற்றிருக்கியமாமறையீதென்ப ர்

அண்டம்நடுங்கவுடுக் குலங்கள்சிந்
வழிமன்னன்செய்தபெரு மமகாயன்பாய்
தண்டமிட்டும்பன்வீர பத்ரதாஸ
சாம்பியவம்மானையெனும் தமிழைத்தா

த த் ன் னே.

ஷை சமஸ்தானவித்வான் ம-௱-௱-ஸ்ரீ
துவாத்திரிம் சதவதானி சரவணப்பெருமாட் கவிராயரவர்கள்
சகோதரராகிய ம-௱-௱-ஸ்ரீ
சோமசுந்தரக்கவிராயரவர்களியற்றியது.

மாமகனா யிமையமுனிவோர் நான்மறையீ தாமென்னவே வழுத்தி வாழ்த்த
நாமகளு வாசமதுர கவிவீர பத்திரன் றுவலோதுங்
கோமகனு மழிமன்னன் சண்டையையம் மானையெனக் கூறக்கேட்ட
பாமகளப் பாமகனுன் பகர்வொரு தெனக்கிதுவொப் பாவென்றனே.

இராமநாதபுரஞ் சமஸ்தானவித்வான் ம-௱-௱-ஸ்ரீ
துவாத்திரிம் சதவதானி சரவணப்பெருமாட் கவிராயரவர்கள்
புத்திரராகிய ம-௱-௱-ஸ்ரீ
முத்துமாணிக்கக்கவிராயரவர்களியற்றியது.

திருவீதி மணிமாட மதுரைவாழுஞ் செந்தமிழ்ச் சொக்கலிங்க நாதா வன்பின், வருவீர பத்திரா வல்லன்பாண்ட வரிக்கார தம்பதிநூல் றொடன்னில், பருவீரம் பொருந்துமழிமனராஜன் பிரபலபவிப்போ ரம் மானை பகர்ந்தான் கற்றோர்; டீ ருவீரப் பாரம்பரங்கம்பாமாகா வியப்பா வில் வியப்பிதெனை விளம்புவாரே.

இதுவுமவர்கள் யமகம்.

தனத்தானத் தானவெனத் திருகட்ன றுறைமதுரைத் தலத்தான் மாவத்
தனத்தானத் தானவோய வீரபத்திரத் தம்பிரான் சாற்றுஞ் செம்மா
தனத்தானத் தானவர்கொண் டாமெழி மன்னருக் தான்பா வேய
தனத்தானத் தாமிதனைச் சொன்புலவ ரின்பாச்சி தனஞ் செய்தாரே.

ஷை சரவணப்பெருமாட்கவிராயரவர்கள் சகோதரராகிய
ம-௱-௱-ஸ்ரீ
சொக்கலிங்கக் கவிராயரவர்கள் குமாரர்
நாகலிங்கக்கவிராயரவர்களியற்றியது.

தார்தாங்கும் புயசயிலன் வீரபத்ர தாஸனொற்றுத் தமய னென்போன்
சீர்தாங்குந் திடதீர னழிமன்ன ராஜனென்றுட் செய்த போரை
ஏர்தாங்கும் புவிமீதி லம்மானைப் பாவாக விசைக்கக் கேட்டு
பார்தாங்குஞ் சேடனும் நான்முகனும் பூவன்மணந்து பயமற்றாரே.

இந்நூலியற்றியவரின் தமயனாகிய சங்கீதசாகித்ய
பக்தவிஜயகதாப்ரசங்கவித்வான் ம-ள-ள ஸ்ரீ,
மதுரகவி மீனாட்சிசுந்தரதாஸரவர்கள்
குமாரர் சோமசுந்தரம்பிள்ளை
யவர்களியற்றியது.

சக்கரஞ்சூழ்புவியதனிற் புகழ்பெற்றோங்குந் தாஸசிகாமணிவீரபத்ரதாஸன், மிக்ககலம்படைத்தவபிமன்னன்போரை விரிதமிழ்மாலையதாய்விளம்பக்கேட்டு, முக்கனியோகற்கண்டோதேனோபாகோ மொழிக்கரும்பின்றீஞ்சாறோவறியோமென்ன, அக்கணத்துள்ளவரும் புவியிலோருமாவலுடனருந்தியது மகிழ்ந்திட்டாரே.

மதுரைத்தாலுகா அனுப்பானடிக்கிராமம்
தமிழுபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ, முத்திருளப்பபிள்ளை
யவர்களியற்றியது.

துன்னியமலர்ப்பூஞ்சோலைசூழ்மெகிலைத் தொழுதியார்நயகத்தடமு ங்
கன்னலங்காடும்பிணையின்காவுங் கவின்மிகுகழனிசூழ்ந்தில கு
மன்னியகீலிமணைமுகிறவழு மணிமலிமாடமும்வயங்குந் [ன்.
தன்னிகரொவ்வாவைகைசூழ்மதுரைத் தலத்தினில்முத்தொழில்புரிவோ

கமலைசேர்மருமப்பூந்துழாய்முகிலுங் கலைமகள்பொருந்துநாவினனு ம்
சமலம்வாழிறருதவனறிந்தவனுந் தேவரும்யாவருமிறைஞ்ச [ன்
விமகான்கினார்செஞ்சடையினன்றனதுவெண்ணில்மெய்யடியரிலொருவ
அமலம்வாழ்வீரபத்திரதாஸ னபிமனன்கதையுரைத்த னே.

இதுவுமவர்கள்.

சாற்றியபோரிதைவெனவே யுலகின்மிக்கோர் தந்தவுரைகொண்டுதனஞ்சயன்சேய்மைந்த, மாற்றலரைப்பாரதத்திற் பதின்மூன்றாநாள் வாட்டியபின்வசுக்கனொடுவெயர்க்குங்காதை, ஆற்றல்தரவெண்டமைய மனமத்தானத்தைநயந்தயனுமனமேழியகன்றான்வின்னனில், கோற்றமமக்கேகினன்முத்தமிழோன்சாமன்னோக்கப்போற்செவிவேண்டிசோற்றின்றுனே

திருநெல்வேலிஜில்லா சாத்தூர்த்தாலூகா சிறுக்குளம்
ம-ா-ா-ஸ்ரீ, க. தாமோதரம்பிள்ளையவர்க
ளியற்றியது.

பாரளந்தும்புகழு மகாபாரதத்தி லபிமன்னனன்பதிமூன்றுநா ட்
போரிலையம்மானையநாப் புகலுகெனமுத்தைய பூமான்சேப் ப
கேசில்கலைவல்லவருமீனாட்சிசுந்தரமா நிபுணன்பின்னோ ன்
வீரபத்திராலிங்கன் விளம்பினானிதன்பெருமை விளம்பொணா தே.

இருவுமவர்கள்.

தேனொழுகமுதென்கோ தித்திக்கும்பாகென்கோ செழுந்தேனென் கோ
தாவளர்முக்கனியென்கோ கன்னலென்கோபாலென்கோ கண்டதென்
பாவலர்கூர்மதுரைநகர் வீரபத்திரனெனும் பருணிசொற்ற [கோ
மாவலவன் வானபிமன் வயத்திசழும்மானையினன் மதுரமா தோ.

மதுரைஜில்லா சிவகங்கைத்தாலூகா பார்த்திபனூர்
தமிழுபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, உலகசுந்தரம்பிள்ளை
யவர்களியற்றியது.

பொன்னாட்டின்மிகுமதுரா புரிவளர்சிங் [illegible] புன்னிருமே ம்
கன்னாட்டுமேலோங்கு மிசைநாட்டுமொழிபுனை வினிக்குந்தேன்போ ற்
சொன்னாட்டும்பாவீரபத்திரவேளபிமனன் செய்தசிதப்போரை த்
தென்னாட்டித்தமிழ்முனியுந்திகைத்திடவம்மானையதாய்ச் செப்பினனே.

இருவுமவர்கள்-வெண்பா.

வாரிதியினைஞ்சுப்பின் வந்தவமிர்தத்தைமுன்னை ம்
வாரியுண்ட விட்டுலவர் மானுவரோ—வீரபத் ர
மாதவமம்மானை வண்டமிழாத் தென்னமு தை
லவருந் துய்புலவோர்க் கே.

மதுரை புதுக்குயவர் பாளையம் ம-ா-ா-ஸ்ரீ,
சின்னசாமிக் கவிராயரவர்க
ளியற்றியது.

மாமதுரைப்பதிசோம சுந்தரமாலின்றகவ மணியாம்வச் த
பாமதுரச்சொலிசாவன் மீனாக்ஷிசுந்தரவிற் பனாக்குப்பின்னே ன
காமதுரைக்குயர்வடிவன் வீரபத்திரக்கவிஞன் கனிந்தவின்ப ப்
பூமதுரையாகுமபி மன்போரம்மானையதாய்ப் புகன்றன்மா தோ.

மதுரைஜில்லா சிவகங்கைத்தாலூகா மார்நாட்டுக்கிராமம்

வாலசிங்கக்கவிராய ரவர்கள்குமாரன் ம-௱-௱-ஸ்ரீ,

தமிழுபாத்தியாயர் வீரபத்திரகவிராயரவர்க

ளியற்றிய - வெண்பா.

கம்பன்புலமைதனைக் கவிட்டான்சொற்கேட்டு க்
கும்பனுமோர் பிடியாய்க் குறுகினன்—கம்புநி ழ
சங்கத்திலேவாணி தலைகவிழ்ந்தாள்வீரபத் ர
சிங்கத்தின்கல்வி தெரிந் து

மதுரைமாநகர் திருப்பதிநாயக்க ரவர்கள்குமாரர்

ம-௱-௱-ஸ்ரீ, இராமகிருஷ்ணதாஸரவர்க

ளியற்றியது.

முத்திதரும்தென்மதுரை வாழ்சோமசுந்தரமா முதில்மிகுந் த
பத்தியுடன்செய்தவத்தால் வந்துதித்தவீரபத்ர பாவலன் மா
சத்தியஞ்சேர்வளர்பிமன் சண்டையையாம்மாணையநாய்ச் சாற்றக்கேட் டு
தத்திமித்தோங்கானமெனத் தில்லைதனில்ச்சங்கரனித்தனஞ்செய்தாரே.

இஃது

மதுரை மீனாக்ஷிசுந்தரேசர்கோவில் தேவஸ்தானம்

குமாஸ்தா ம-௱-௱-ஸ்ரீ, கூ. ந. கந்தசாமிபிள்ளை

யவர்களியற்றிய விருத்தம்.

மண்டலத்திற் கீர்த்திபெற்ற மதுரைவாழு ம்
மாயோக கவிச்சிங்க வரதவென் ன
எண்டிசையோர் புகழ்வீர பத்திரதாஸ ன்
யெதிரேலோங்கு மவிமன்னன் படைப்போர்தன் னை
தொண்டரெலாம் படித்திடவும் மாலையாக த்
தொகுத்ததனை முத்தையா அச்சிலேற் றி
விண்டலமும் மண்டலமும் வியப்புற்றோங் க
விரிக்கின்று னிதனையார் விளம்பவல்லா ர்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 20 | 32 | பெருகி | பெருகு |
| 30 | 7 | முனி | முனே |
| ஷை | 20 | இச் | இங் |
| ஷை | 27 | கனைகல் | கனைகள் |
| 32 | 12 | கொடி | கொடை |
| 35 | 9 | மாய | மாம |
| 36 | 4 | இனிபுகழ் | இனியபுகழ் |
| 33 | 9 | க்தகரித்து | கத்தரித்து |
| 45 | 17 | னெக்கேட்டா | னெனக்கேட்டா |
| ஷை | 22 | வல்வ | வலவ |
| 48 | 4 | மடிமீது | படிமீது |
| ஷை | 16 | பரவி | பாவி |
| 50 | 15 | களறு | கழறு |
| 51 | 12 | ஞாயமல்லாத்த | ஞாயமெல்லாந் |
| 54 | 8 | பிதியாம | பிரியாம |
| ஷை | 16 | ரிவ்வார் | றிவ்வாற் |
| 56 | 31 | இந்திறபுரி | இந்திரபுரி |
| 58 | 13 | மிருங்கிகள் | மிருங்கின் |
| 65 | 34 | பார்களாந் | போர்க்களந் |
| 67 | 1 | வேங்தக | வேந்தர்க |
| 70 | 4 | வாண்மை | லாண்மை |
| 71 | 32 | ரீங்காவே | தீங்கறவே |
| 72 | 8 | நாபகாரி | சம்காரி |
| 79 | 30 | ராத்திபி | ராத்திரி |
| 80 | 9 | மறவாதான்ன் | மறவாதான் |
| ஷை | 19 | மன்பமுற | மின்பமுற |

உ

பரமபதிதுணை.

# அபிமன்னன்சண்டை.

## அம்மானை.

### காப்பு

வெண்பா.

ஸ்ரீராசபிமன்னனுட் செய்தபெரும்போரைப்
பேராரம்மானையதாய்ப் பேசவே—பாரோர்
துதிக்கையுடையான் பருத்ததொந்தியுடையான்
துதிக்கையுடையானே துணை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிலையேந்தும்பொற்கரத்தா னபிமன்னராஜனெனுந் திடதீரன்றன்
அலையேந்தும்வாரிதிரு ழகிலமதிற்செய்தபெரு மமரையாய்ந்து
தலையேந்துமம்மானைச் செந்தமிழாயாம்விரித்துக் கழறத்திச்சார்
மலையேந்துஞ்செந்திருமா லடியைமுடிமேற்சூடி வணங்குவோமே.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்தரலோகத்தவரும் புவியின்வேந்த
ரனைவரும்பார்த்திசயிக்க வமர்புரிந்த
சுந்தரஞ்சேர்வாளபிமன் சரித்திரத்தைச்
சுகமலியம்மானையதாய்ச் சூட்டுதற்கு
மந்தரவில்லுடையான்வெள் விடையான்பாதி
மதிச்சடையானீன்றவெழில் மஞ்ஞைவாகன்
கந்தரஞ்சூழ்குழலணங்கு வள்ளிகேள்வன்
காங்கேயன்திருத்தாளைக் கருதிவாழ்வாம்.

உ

பரமபதிதுணை.

# அபிமன்னன் சண்டை.

## அம்மானை.

### பாயிரம்.

அரசர்தனி லுயர்ந்தோ னபிமன்னபூபால ண
பரவும்புகழுடையான் பதின்மூன்றாம்போர்நாளி ல்
செய்தபெரும்போரைச் சீராரம்மானையதா ய்
வையமதிலடியேன் மகிழ்வாயெடுத்துரைக் க
சீராருந்தென்மதுரைச் சித்திகணேசனெங்கு ம்
பேராருந்தொந்திவயிற் பிள்ளைபதங்காப்பா மே
காமசுந்தரவடிவைக் காய்ந்தானுங் கண்ணிவைத் த
சோமசுந்தரக்கடவுள் துணைபார்த்து வந்தருள்வா ர்
தேனருந்சோலைகள்சூழ் தென்மதுரைமாநகர்வா ழ்
மீனாட்சிசுந்தரிதன் மெல்லியபொற்றாள் துணை யே
கங்கைச்சடைப்பிரான் கவலைதீர்ப்பானா ம்
மங்கைவடிவாயெழுந்த மாலபதத்தைத்தெஞ்சில்வைப்பா ம்
மாமதுரைச் செழிக்க மன்வாழயனாரே வி
நாமாதெனதுடைய நாவில்குடியிருப்பா ள்

### அவையடக்கம்.

திருமதுரைமாநகரில் நிகழ்சோமசுந்தரமா ல்
தருமதுரையிற்றுந் தவத்தாலுதித்தமைந்த ன்
அங்கிதமொய்த்த தமிழ் பணிமால்பதம்மறவா ச்
சங்கீதவித்வசிகா ஸ்ரீராமானுஜ ன
கங்கைகுலதிலகன் கனகமணித்தார ன்
துக்கமிகுமீனாட்சி சுந்தரதாஸற்கிளையோ ன்
சத்திவடிவேலன் சதுர்மாமறைமுதல ர்
பத்திமிகும்வீர பத்திரதாஸனென்பே ர
கற்றவெப்பிரியோர்க்கு மயவனமெருநானெ றி
உற்றபேரன்புடனே யுன்னாக்கவருந்தனதோ ல

மதிப்பாருக்கெட்டாத வயிரமணிக்கல்லிருக்க க்
கதிப்பாகவேபளிங்குக் கல்கொளிகாட்டுதல்போ ல்
மன்னர்புகழு மபிமன்னன்பெரும்போரை க்
கன்னலெனக்கவிசொல் கவிவாணர்தங்கண்முன் னே
அம்மானைப்பாவாக யான்றுணிந்துபாடினதா ல
இம்மானிலத்திநனி லெள்ளவிழைதோற்றிடினு ம்
கருத்திலிருத்தாமலெந்தன் கவியின்பிழையதனை த்
திருத்தியாட்கொள்வீரென்று செப்பினேனம்மா னை

நூல் வரலாறு.

மஞ்சுமஞ்சுங்கொடையார் மருவலரஞ்சும்படையா ச்
அஞ்சுமிரண்டாறிகடக் கப்பாலுந்தன்னர சு
கடத்திவருமகுட ராஜாதிராஜனுங் க
இடத்தீரர்களான ஜெயபஞ்சபாண்டவரு ம்
வாய்ந்தமதியூகன் வணங்காமுடிவாக ன்
ஏந்தல்சுயோதனனு மிருதராத்தார்படையு ம்
பரிவாய்நடத்தியதோர் பன்னிரண்டுநாட்போரு ம்
விரிவாய்த்தெரிந்தவரை விளம்பினேன்யானுங் கு
பதினெட்டுமன்றும்நாள் தனில்ப் பார்த்திபர்கள்செய்போ ரை
அதிபிரியமாகவேயா னருளுவேன்கேளென வே
மாதவத்தினிற்சிறந்த வைசம்பாயனமுனிவ ர்
ஈதருஞ்சாந்தகுண ஜெனமேஜெயரா ஜ
மன்னனைகங்களிக்க மன்னுமுமெலாந்துதிக் க
நன்னயமாகவேதா னவின்றார்காணம்மா னை

போர்வரலாறு.

நாடும்பதின்மூன்றும் நாளிருதயாதியினி ற்
குடும்பழிகாரன் துரியோதனனெழுந் தி
நித்தியகட்டளைய நியமமுடன்முடித்து ப்
பத்தியுடன்றனது படைத்திரளந்தட்சணை மே
பிணாயானமாகவென்றே பேரிகைமுழக்கிவைத்தா ன்
தனைவேந்தன்சொற்படியே சதுரங்கசேனைகளு ம்
மன்னரனைவர்களும் வந்தார்கள்போர்க்கள மே
அன்னசமயமதி லாசான்துரோணரு மே

எப்படியுந்தருமரெனும்வேந்தனாருமின் அ
கைப்பற்றவேணுமென்றே கடுஞ்சினங்கொண்டவரா ய்

துரோணாச்சாரியார் சக்கரயூகம் வகுத்தல்.

உசிதமுடனேபத்ம யூகமதுகட்டவென் றே
இசைந்தசிலைக்குருவு மிதயந்தனில்நினைத் து
கன்னலம்பன் கன்சல்லியனகம்ப ன்
தன்மைமிகுமசுவத் தாமாமுதலோ ரை
மருவேறுதாமரைமா மலரின்நடுவேயிருக்கு ம்
கருணிகையாயமைத்துக் காரணக்ருபாசா ரி
மற்றுமுள்ளவேந்தரையும் வகுத்தகருணிகையை ச்
சுற்றியிருக்குமந்தத் துய்யவிதழாய்நிறுத் தி
சதாயுந்தாயெனவே சாற்றுமகாரத ரை
இதாகிதமாய்ப்புறத்தி லிருக்குமிதழாய்ப்பொருத் தி
உம்பரனைவரும்பார்த் துள்ளங்களிகூ ர
இன்பமுடனேயொவ்வோ ரிதழின்வடிவதுபோ ல்
ஆனைகளோர்வரிசை யசுவங்களோர்வரி சை
சேனைகளோர்வரிசை தோணிகளோர்வரி சை
யாகநிறுத்தியித மாயிரங்கொண்டிலங்கு ம்
கோகனகமலர்போற் குலவுயூகம்வகுத் து
தகமையுடன்றுரியோ தனராஜமன்னவனை ப்
புகல்தாமரைமலரின் பொகுட்டின்நடுவில்வைத் து
வெற்றியுடனமைந்து விளங்குபத்மயூகமதை ச்
சுற்றிலுமேயடர்ந்த சூசிகாயூகங்கட் டி
சூசிகாயூகமதைச் சுற்றிமதிற்சுவர்போ ல்
மாசிலாதோய்குசக்ர வட்டயூகமியற் றி
வாருட்டாசனுமே வானவருங்கொண்டா ட
சேனைபதியான சிலைக்குருதுரோணரு மே
பலமேற்குமாரசுஷசவாம் படைசகிதமத்தியி லே
நிலவுமணித்தேரேறி நின்றுர்காணம்மா னை

திருஷ்டத்துய்மன் மகரயூகம்வகுத்தல்.

இந்தவிதமாக யிவர்களிங்கேயிருக்க த்
தங்கிராயுதன் தருமமகாராஜ ன்

காலைக்கடன்முடித்துக் கல்லைப்பெண்ணாக்கிவைத் த
மாலைக்கருத்திருத்தி வலியதஞ்சேனைமுற்று ம்
பயணப்படும்படியே பண்பேரிகைமுழக் இ
யருணஞ்சேர் தரும ராஜனுந்தம்பியரு ம்
குற்றமறவேயுத்த கோலங்கொள்ளும்பொழு து
வெற்றியிழந்தோடினதோர் வேந்தன் சுயோதனன்று ன்
அன்றிராத்திரிமுழுது மடங்காத்துயரமுற் று
துன்றுஞ்சிலைக்குருவாந் துரோணர்தனைநோக் கி
பஞ்சவர்மீதெப்பொழுதும் பக்ஷமறவா த
வஞ்சகத்தைநெஞ்சகத்தில் வைத்திருக்கின்றீரேயென் று
கோபித்திடும்பொழுது குருவாந்துரோணர்முத ல்
மாபித்தன்சல்லியனு மற்றுமுள்ளராஜர்களு ம்
வணங்காமுடியுடைய மன்னன்முகம்நோக் கி
இணங்காத்தருமரைநா மின்றையப்போர்தனி லே
எந்தவிதத்தாலு மெளிதாகவேஜெயித் து
மந்த்ரத்தோள்வேந்தர்களு மதிக்கும்படியுமக் கு
வெற்றித்தாருட்டுகின்றோம் விசனம்வேண்டாமென வே
உற்றபேரன்புடனே யுரைத்திருக்கின்றார்களென் று
தூதர்சிலர்கள்வந்து சொல்லிபசங்கதி யை
மாதருமர்தான்கேட்டு மாயனுக்குத்தம்பியர்க்கு ம்
அந்தச்சமாசார மனைத்தும்விரித்துரைத்து க்
கந்திருவரும்நடுங்கக் கன்னக்கன்சிவந்தார்ப்பரித் து
வாருட்டையுமறைத்து வந்தார்கள்போர்க்கள மே
சேனாபதியான திருஷ்டத்தாய்மன்றனு ம்
வேலும்வாளும்பிடித்த வீரப்படைகளின ல்
மாலுமதிசயிக்க மகரவ்யூகம்வகுத் து
துணிவாகவே திருஷ்டத்தாய்மன் பொற்றேரே றி
இணையிலாச்சேனைகளி னெதிர்நின்றானம்மா னை
பெரும்புலிபோற்சீறிப் பேரிகைபோலார்ப்பரித் து
இருதாத்தார்பண்டீட்டு மெதிர்த்தாக்கும்வேளைதனி ல்

### அருச்சுனனுக்குஞ் சஞ்சத்தகாளுக்கும்யுத்தம்.

தனஞ்சயனுக்கெதிரே சஞ்சத்தகர்கள்வந் து
கனைகுரற்பரித்தெழுந்து கனல்போல்சீறிசிவத் த

விஜயா நீநேற்றடைந்த வெற்றிதனைப்போ லே
பிசகாமலின்றும்வெற்றி பெறலாமென்றெண்ணா தே
அயிற்கைமுடிவேந்த ரஞ்சப்பொருதிய னை
ஜெயித்தின்றுவெற்றிபெற்றுத் திரும்புவதாகவெண் ணி
வந்திருக்கின்றேனுனக்கு வல்லபங்காணுண்டானா ல்
புத்திமகிழ்ந்தெம்முடனே போராடவாருமென் றே
வலுவிலழைத்தார்கள் வாள்விஜயன்றானதிற் கு
கலிசென்றுதானகைத்துக் கண்கள்பொரிபறக் க
விடவசவுபோற்சீறி வின்சலதம்மேபிவம் த
திடவீரர்தங்களெதிர் சென்றான்காணம்மா னே
பார்த்தன்வருங்குறிப்பைப் பார்த்தந்தப்போர்வீர ர்
வேர்த்தடக்காக்கான மேகமெனவளைந் து
பாணங்களைமழைபோற் பார்த்தன்மீதிற்பொழிந்தா ர்
வேணுந்தக்கதின்புயத்தான் விஜயனதையறிந் து
கணையேகமாய்வீர காண்டீபவில்வளைத் து
மணமேதிடுக்கிடவே வாயுக்கணைமுதலா ம்
நானாவிதக்கணைபோர் நாளிகைக்குள்தாரா க
சோனாமேகம்போலே தொடுத்தெதிராகவின் று
வில்லெடுத்தவைகளையும் வெல்லவந்தோமுன்னையென் று
சொல்லெடுத்தவாய்களையுந் துளைத்தருவியோட வே
செய்தந்தப்போர்வீரர் திரும்பவும்போர்புரி ய
வைவில்லெடுக்காமல் மாட்டியுடல்வாட்டுகையி ல்
ஒருகாலொடிந்தவரு மொருகைமுறிந்தவரு ம்
இருகாலிரண்டுகர மிழந்துகிடப்பவரு ம்
சிரங்களறுந்தவருந் திண்டோள்கிழிந்தவரு ம்
உரங்களழிந்தவரு மோடவழிபார்ப்பவரு ம்
மெய்துளைபட்டவரும் வீரங்குறைந்தவரு ம்
குய்யோமுறையோவெனக் குடல்கள்சரிந்தவரு ம்
மண்டைசிதறிரத்தம் வடிந்துகிடப்பவரு ம்
உண்டைபோலானவரு முடல்பாதியானவரு ம்
அருச்சுனனேயபய மபயமுனக்கென்பவரு ம்
மருட்சியுடனேமதி மயங்கிக்கிடப்பவரு ம்
சிறந்தபுகழ்விஜயன் செலுத்தியபூங்கணையா ல்

இறந்தபடையிவ்வளவென் றெண்ணிமுடியா திவ்வண்ணமு ம்
முப்பார்புகழ் விஜயன் மூன்றுயோசனை தூர த
தப்பாமேனின்றங் கமராடித்தானிருக் க

## துரோணாச்சாரியாருக்கும் திருஷ்டத்துய்ம னுக்கும் யுத்தம்.

இவ்விடத்தினில்சேர்ந்த இருதாத்தார்படையு ஞ்
செவ்வியமேகமெனத் திரண்டார்ப்பரித்தெழுந் து
உகந்தசேனாபதிக ளுக்கிரஞ்செய்தப டி
தகைமையுடன்கலந்து சமராடும்வேளை தனி ல்
தேயமெங்கும்புகழுஞ் சிலைக்குருதுரோணரெதி ர்
தூயகுணதிருஷ்டத் துய்மனிவன்போரெதிர்த் து
சொல்லவொண்ணாக்கணைகள் துரோணர்மீதிற்றொடுக் க
வல்லதுரோணர்கண்டு வரிவில்தனைவளைத் து
அக்கினியாஸ்திரத்தை யவசரமிலாதெடுத் து
முக்கியமாய்த்தொடுத்து முனைகொண்டெதிர்விட ட
கணைகள்தனைமுறித்துக் கணக்கிலாவாளிக ளா
இணையில்த்துரோணர்பின்னு மேவிதிருஷ்டத்தூய்ம ன்
வின்னாணியையறுத்து விரைவாச்சிலகணையா ல்
பொன்னார்துவசமொடு பூண்கவசமுமழித் து
தேகந்தனைத்துளைத்துச் சின்னபின்னப்படுத்த ச்
சோகமுடன்திருஷ்டத் துய்மன்மனம்வருந் தி
சொற்றவருட்புகழ்சேர் துரோணருடனெதிர்த் து
வெற்றியடைந்தவர்கள் மேதினியில்யாருமில் லை
விட்டமர்துரோணர் விஜயனிங்கிலவர்களு ம்
நாட்டிலொரேயிணையாம் நாடியிவரைப்படைத்தோ ர்
மீண்டுமில்லைநாமிவரை வெல்லமாட்டோமென வே
பாண்டவர்சேனைத்தலைவன் பாஞ்சாலன்புத்திரனு ம்
சீர்பெருகுந்தனது சிகரத்தேரைத்திருப்பி ப்
போர்முனைவிட்டோடிப் போனான்காணம்மா ஜை

## தருமராஜன் அபிமன்னனை யனுப்புதல்.

தனுவேதியன்விடுத்த சக்கரவியூகவருந் இ
மண்மிசைத்திரைத்தீரடி வருகுஞ்சேனாபதி யை
தருமமுடிவேந்தன் றன்னருகினிலனுப்பத் து

அருமைத்துணைவேந்தே யஞ்சாதேசென்றமர்த்தி த்
தனதுபடைகளங்கே தட்டழிந்தோடுவதை க்
கனகமுடிவேந்தன் கண்ணினாற்பார்த்தயர்ந் து
மயில்வாகனக்கடவுள் வடிவேல்முருகனைப்போ ல்
ஒயிலாகத்தன்னருகே யுவந்தங்குநிற்குமந் த
அபிமன்னராஜனைப்பார்த் தய்யனேயான்செய்தவ மே
விபுதர்குலமுதலே விற்பனர்கணாயக மே
பற்குனன்பெற்றெடுத்த பாக்கியசிலாக்கிய மே
விற்குருவாகியவர் வித்தையுடனேயின் று
குட்டியிருக்குமந்தச் சொல்லரும்பூகமதை த்
தாட்டிகமாயுடைக்கத் தக்கவர்கள்யாரெனி லோ
உன்றந்தைபோர்விஜய னுனக்குப்பெரியதந் தை
வென்றிபடைத்தகதை வீமனுடனீயொருவ ன்
மூவருக்கொப்பாம்நீங்கள் மூவரேயாகுமந்த த்
தேவர்கள்வந்தாலுஞ் ஜெயிக்கமுடியாதகன ல்
கல்விப்பெருங்கடலே கண்ணேயென்கண்மணி யே
தொல்புவியோர்கொண்டாடுந் தோன்றலேநீவிரைவா ய்
சென்றத்தவரம்படையைச் சின்னபின்னப்படுத் தி
வென்றிபெறுவையென்று விரும்பினேனென்றுரைத்தா ர்
தருமனொடும்பெரிய தந்தையிவையுரைக் க
அருமைத்திருப்புதல்வ னபிமன்னனுங்கேட் டு
பூரித்துத்தேகம் புத்திமிகமகிழ்ந் து
பாரித்ததோளிரண்டும் பனைத்துப்பெரியதந் தை
செவ்வியபொற்றாள்பணிந்து தேவரீர்சீக்கிரமா ய்
ஒவ்விவிடையருளு முரகக்கொடிவேந்த ன்
படைத்திரள்யாவையுமே பஞ்சுபஞ்சாகத்தூற் றி
உடைத்துவெற்றிசூடுகின்றேன் பூகங்கள்மூன்றதையு ம்
தாமசிக்காமல்விடை தந்தருளுமென்றுரைந் து
நேமமுடன்வணங்கி நிற்கின்றபாலக னை
முரசக்கொடியுடைய முதல்வன்கண்ணுற்பார்த் து
அரசர்கள்நாயகமே யப்பனேயின்னமொன் று
பட்சமிகும்வீமனுந்தன் படைத்துணைவனுமிருந் து
முச்சகமுங்கொண்டாட முன்னேபோர்செய்துசெல் ல

பேரரசேசீயுமவன் பின்னேதொடர்ந்துசென்று
தீரமுடனேயந்தச் சிலைக்குருவினல்லமைத்த
பத்மயூகமுதலாம் பகர்யூகமூன்றதையும்
வித்வமணியேநீ விரைவாகவேயுடைத்து
பரிவாகச்சூழ்ந்திடும் பகைவர்பெரும்படையை
உருகுந்தழல்மெழுகா யுடைந்தோடச்சிதைத்து
மற்றுமுள்ளராஜர்களும் வாளவருங்கொண்டாட
வெற்றிபெறுவையென்று விளம்பினரேயல்லாது
வந்தபடைகளுடன் வல்லபமாய்ப்போராடி
சிந்தவவர்களுயிர் ஜெயம்படைத்துநீதிரும்பி
வருவாயெனத்தருமர் வாக்கியஞ்சொல்லவில்லை
திருவாழ்மணிமார்பன் ஜெயவீமன்முன்னுடி
செல்லட்டுமுங்கள்பின்னே சிலமன்னவருடனே
வல்லவனேயானுமிதோ வருகின்றேனென்றுரைத்த
பெரியபிதாமொழியைப் பிள்ளையபிமன்கேட்டு
அரிதாம்சமதுதிறமனைத்துந்தெரிந்திருந்தும்
படைத்துணைகூட்டியந்தப் படைபொருதப்போவெனவே
விடைகொடுத்தாரேயென்று விஜயன்மகன்சோர்ந்து
நின்றனவனிருக்கும் நிதானந்தனையறிந்து
நன்றார்தருமமன்னன் ஞாயஞ்சிலதுரைத்து
மனதைத்திருத்தியந்த வாளபிமன்றனக்குக்
அனியாயவார்த்தைசொல்லிக் கன்னகன்றொகிப்பதங்கு
தந்திரமானதுவுஞ் சமர்செய்துவெற்றிபெறும்
விந்தையுந்தானுரைத்து விடைதந்தாரம்மானே

## அபிமன்னன் தேரிலேறுதல்.

விரைவாய்த்தருமரிடம் விடைவாங்கிவாளபிமன்
தனைவேந்தருமதிக்கத் தட்டிசல்லடம்பூண்டு
கவசமுடன்வீர கண்டாமணியணிந்து
நவமணிமாலையிட்டு ரத்னப்பதக்கமிட்டு
வாகுவலயமிட்டு மகரகுண்டலம்பூண்டு
மோகமதனெனவே முடிமேல்முடிதரித்து
அம்பறாத்தூணிதனை யழகுமுதுகிற்சேர்த்து
செம்பவளக்கையதனிற் சித்திரவிற்பிடித்து

மேகக்கருஞ்சூழ்கருமே லேங்கனவிமணிவர்க ள்
பாதபங்கயம்போற்றி பகலோன்றனைப்போ லே
மன்னராசுகழிக்க மாமணித்தேரே தி
துணிவியதேர்ப்பாகன் சுமித்திரனென்பவ னை
பார்த்தங்கூடார்ந்துநிற்கும் பகைவர்படைக்கெதி ரோ
மூர்க்கம்பமாய்த்தேரை முடுக்கிவிட்டுத்தென லெ
அண்டகடாகமுத லதிரஇரியுமங்கோர் க
மண்டியிட்டார்ப்பரித்து வருத்துமபிமன்றனக் கு
துய்யமன்னித்தேர்ப்பாகன் சுமித்திரனேதுசொல்வா ன
யேனேபார்புகழ்கு மாசர்குலவிளக் கே
பற்பலரும்முறையும் பார்த்துத்தெளிந்தபிரா ன்
விற்பனதுரோணர்புகழ் மேவுகிருபாசா ரி
துன்னனசுவத்தாமா கனகமுடிவேந்த ர்
இன்னும்பலவீரர்செல்லிடத்திலுவஞ்சூழ்ந் து
மேகம்போலார்ப்பரித்து விளங்குமத்தச்சேனைமுன் னே
தாகமுடனேநீர் தனிமையாகப்புகு ந்து
பெரும்போர்புரிந்துவெற்றி பெறுவதப்பிணக்கறு வே
திரும்பிவரவுமக்குச் செயலேதுகாண்மே லு ம்
இறைவர்களேர்ப்படுத்தி யிருக்கும்வியூகத்திலுள் ளே
சென்றவர்களேதுமின்னுந் திரும்பிவருவதுண் டோ
உற்றபுகழோங்குமிந்த வியூகம்வகுத்தவரு ம்
மற்றமுடிமன்னர்களு மடியார்களுநன்கனையர் ல்
மேவுமவர்களைநீர் வென்றுவெல்லவுமக்கு ப்
பூவுலகினீதுவெற்றி பராவலனேயிடைக்கு ம்
வெல்லாவிடிலுமக்கு வெற்றியில்லையானதினு த்
செல்லாதிருப்பதுவே தேர்வேந்தேகண்மையென்று ன்
சாற்றியிதைச்சொல்லுஞ் சாத்தியசங்கதி யை
வீரப்பிரதாப விஜயன்மகன்கேட் டு
வல்லபனேகேள்சுமத்து மரிவிக்கனைவிளைத் து க்
குலவுமக்காணிழுத்துக் குணத்தொனிசெய்வேனென்று ல்
அந்தத்தொனியாலே யடங்கும்புவியுள்ளு ம்
சிந்தாவினிகவரும் தேவர்ராஜர்களு ம்
குலைக்கும்புறமுந்தரு கொடுத்தோடிவாக்கினென்று ம்

இலைத்தம்போர்முகத்திற் கெதிர்நிற்பாருண்டோகா ண
சொல்லவந்தாய்நீயெனக்குத் துரோணர்தனைமிகுந் த
வல்லவிரென்றவர்தன் மகிமைதனைப்புகழ்ந் து
பலமுங்கலமுவிட்டுப் பாணங்களையெறிந் து
நிலைகள்தவறியந்த நிருபர்முறிந்தோட ட
மாட்டுகிறேன்பாவர்களை மதிக்கச்செயவிரு து
காட்டுகிறேன்நேரையினி நடத்தென்றுவானபிமெ ன்
சொன்னமொழியதனைச் சுமித்திரனென்போன்கேட் டு
புன்னகைகொண்டிடலும் பூரித்தகமகிழ்ந் து
துதிசேரும்வானபிமன் தாய்வடியிற்பணிந் து
கதிசேர்குதிரைகளின் கடிவாளங்கைப்பிடித் து
மண்ணுமதிரமுடி மன்னவரெல்லாந்தயங் க
விண்ணுங்கிடுகிடென விடுத்தான்காண்பொற்றே ரை
உறைவாங்கிவாளுருவு மொண்மகுடவேந்தரிட ம்
இறைவாங்கிநோர்புரக்குந் ஜெயசிங்கவானபிமெ ன்
தேவதுந்துமிமுழுங்கத் திசைமன்னருமங்கிங் க
மேவுந்ஜெயபேரி விண்மீனைமுதிர்க் க
பருப்பதங்களுந்தகரப் பகிருளாகிவிட க்
கருப்பங்கலங்கவிண்ணோர் கடலின்புனல்சுவ ற
மங்களவாத்தியங்கள் மண்டலமெலாமுழங் க
சங்கமிகத்தொனிக்கத் தாரைசின்னந்தாவூ த
தருபதேயத்தரசர் சூழ்ந்திருபக்கமு மே
கருமேகம்போல்வருகக் கனமேவகமாகவேபோ ய்
தேரும்புரமெரித்த சிவபெருமான்கைப்பிடித் த
மேருமலைக்கொப்பான வில்லினைத்துரோணரா றி
முந்தநாளில்மாமன் முகமலர்ந்தேகொடுத் த
மந்திரத்தையப்பொழுது மகிழ்ச்சியுடனுச்சரித் து
பகருமொருநொடிக்குள் பலகோடிபாணங்க ளை
புகழ்சேரபிமனுமே பூட்டிவிட்டானம்மா ணை
பூட்டிவிட்டவம்பிற் புறப்படும்புற்றீசலைப்போ ல்
கூட்டப்படையினுட்போய் கொல்லுகொல்லென்றேகொலவே
தருமிந்திரன்மதிக்கச் சமைத்தசக்கரபுகற மே
உருமாறித்தன்னிலைவிட் டோடுந்தேசயலக் கே

கண்டுதுரோணாசாரி கன்றூர்ப்பரித்தெழுந் து
அண்டருலகொடுங்க வபிமன்விடுங்கணை யை
பல்லவயாணமதர்ப் பரிவாகவேபோக் கி
வல்லபமாகவேதான் வாளிமேலாவலைத் து
அரும்போராதுவினைத்தா னக்ரமித்துப்பற்கடித் து
கரும்போவெனமொழிசொல் காளையபிமனு மே
தகைமையுடனேயர்த்த சந்திரபாணம தைத்
மிகுவேகமாய்த்தொடுத்து விற்குருவின்கையிலுந் ம
வில்லுமழிந்திடவே வெல்வெனடிக்குவென் ா
சொல்லுமழிந்துவிடத் தப்பமுடிகிழி டீ
தேருமுறிக்கோடச் சிலைக்குருவென்றபெரு ம்
பேருமழிந்திடவே பின்னப்படுத்தவ னை
ஐயர்துரோணசாரி யழிந்தினிநாமிருந்தா ல்
உய்யோமெனவேயின் னிட்டோடினாரம்மா லை
இவ்வார்துரோணமுனி இளைத்தோடிப்பொரு தி
செவ்வானம்போற்றிரண்டு செருக்குற்றெதிரோடிற்கு ஷ
நால்வகைச்சேனைகளும் ராஜர்பலரும்நடுங் க
மால்மருகன்றன்புகுந்து வளைத்துவில்நிமிர்க்காம க்
மட்டறவேபாண மழையாகவேபொழிந் து
துட்டப்படைகளைதச் சுழல்காற்றின்பஞ்செண வே
தூற்றியவருயிரைச் சூறையிட்டார்ப்பரித் தி
காற்றிசையுங்கீர்த்திபெற்ற நாரதர்செய்துலைவித் த
கலகத்திலுற்றசெட்டன் கதித்தமேருமலை யை
பலமோங்கிடுந்தனது படத்திறுமேலமறைக் க
வாயுவுதேவனர்க மலையைமுறித்தெறிக் த
சாயல்போல்ப்போர்வீரர் தலையைமுறித்தெறிந்தா ன்
பனைடித்தமாமலைகள் பறந்துபோய்நாடுகளி ல
செண்டுபோலவீழ்ந்து தீமைசெய்யுங்காரணத்தா ரி
வாசவனுக்த மலைகளின்ரக்கைகை லா
மாசிலாதோங்குமெழில் வச்சிரவாள்கொண்டறுத் த
மான்மைமையைப்போலேயந்தப் படைமன்னர்நின்றோ லா
மேன்மைமிகுமபிமன் விரைவிலறுத்தெறிந்தா ன்
காரணநாரதர்செய் கலகத்திலுலொருநா ள்

தீரமிகும்விந்தகிரி திகழ்மேருவைமுனைந் து
அந்தரமெங்கும்நின்றுந் தண்டமுகட்டைமுட் டி
இந்திரசூரியர்கள் தனையுந்தடுத்துநிற் க
அகஸ்தியமாமுனிவ ரந்தவிந்தப்பொருட் டை
தகைமைபூடநோக்கித் தமக்குவழிவிடென் று
சொல்லவந்தக்கிரியுந் துரிதமுடன்று மூ
வல்லமாகவந்த மலையுச்சியினமீ து
கலைமாமுனிதானது கையைவைத்தப்பாதலத்து ட்
பலமாகவேயிறுத்திப் படிந்திடச்செய்ததுபோ
நேமிபூகத்தடர்ந்து நிற்கின்றவேர்தர்களி
மாமணித்தேர்களையும் வாசிகளானைதயு
தலத்திற்புகழோங்குஞ் சாரதியாவரையு ம்
நிலத்துட்பதிந்திடவே நிருபனக்குவீழ்த்தினன்கா ன்
வாளமதைத்தொடுத்து வளர்ந்தோங்கியாவருக்கு ந்
தாளேபயம்விளைத்துத் தலத்தைக்கெடுத்துநின் ற
கிரவுஞ்சமென்னுமந்தக் கிரியைவிரண்டுகண்டா ய்
சுரர்களுக்கூடல சிவசுப்ரமண்ணியக்கடவு ள்
துணைத்தசெயல்போலே தோன்றலபிமனென்போ ன்
வளைத்தபெரும்படையை வாளியினுற்றுளைத்தா ன்
அர்ச்சுனன்புட்டியதோ ரக்கினியாஸ்திரமு ன்
கர்ச்சனையோடிந்திரன்றன் காண்டாவனமெரித் த
தன்மைதனைப்போலே சர்ப்பக்கொடிவேந்த ன்
கொண்மைபுரவிகளைக் கொளுத்தினன்வாளமெ ன்
வளையுமொருகுளத்தில் மதகுஞ்சரம்விழுந் தி
புளையுறவேங்கலக்கும் பொழுதிலழியுமந் த
நீலோற்பலமலர்போல் நிருபன்சேயோதனன்ற ன்
மாலோங்கிடும்படைக்குள் வாளிமன்றுவனுந் து
முடித்தயூகங்களந்த மூன்றினையுமேயுடைத் து
துடித்தபெரும்படையைச் சூரையிட்டழித்தா ல்
ஆகாயக்கங்கைதனி லமர்ந்தலவுமீனமு ம்
வாகாருஞ்சூரியனு மதியுந்தேவினமு ம்
விண்டலக்கன்னைவிட்டு விரைவாகவேகழு வி
மண்டலத்திற்குதித்து வந்தவிழுந்ததைப்போ ல்

பதித்தமணிமார்பன் பாம்புக்கொடிவேந்த ன்
கதித்தபடைவீரர் கையிற்பிடித்திருந் த
வேல்வாள்கதைவாங்கு வில்கேடயமீட் டி
வால்சேர்குடைகொடிகள் மணிமகுடம்பொற்கவச ம்
முரசுடமாபேரி முதிர்தாரைகொம்புசின்ன ங்
கருதுமிவைகள்தனைக் காளையபிமனுதிர்த்தா ன்
இக்கப்படியேதா னெதிரிபெரும்படைக ள்
சிக்கப்படைபொருதி செங்குருதியெவ்விடத்து ம்
நதிகள்குளங்கள் நல்லோடைதாமமிக்க ள்
ஏரிகள்கயங்கள் தடாகக்களைப்போ லே
பெருவெழுந்தோடப் பிணக்காடெங்கும்பர வ
மருமன்னர்கண்டொடுங்க வானவர்கள்கொண்டா ட
முருகக்கடவுளைப்போல் முனைந்துபோராடியெதி ர்
வருகின்றபாலகனை வணங்காமுடிவேந்த ன்
பார்த்துமனமெரிந்து பற்கடித்துத்துடித் து
வேர்த்துமுகங்கருகி விழியிற்பொறிசித ற
கடகடவென்றேநகைத்துக் கையோங்கியேயறைந் து
அடடாயிதென்னவித்தை யறியாச்சிறுகுழந் தை
இவன்பூட்டியகணையா லெனனிசாகம்படைக ள்
கவனமிலாதிறந்தால்க் கணக்குண்டோநாம்டே ச
விருதாப்படைகள்தனை விடுத்ததிறுலமக் கு
வருமைச்சிறுமைமிக வந்ததேயென்றயர்ந் து
இடைந்தோடிடும்படையை யிறைவன்தடுத்தழைக் க
அடைந்தோர்ஜெயமெனவே யவர்கள்திரும்பிவந்தா ர்
வந்தபடைகளுடன் வலியகிருபமு னி
சந்தமணித்தாரசுவத் தாமாகிருதவன்ப ன்
கன்னன்முதலான கதித்தபடைகளுட ன்
மன்னன்சுயோதனன்போய் வாளபிமனையெதிர்த்தா ன்
இப்படியாகவேதா னெதிர்த்தெதிராகிற்கு ம்
வெப்பப்படைகள்தனை விஜயன்மகன்பார்த் து
கொல்வேனென்கைக்கணையால்க் குலைப்பேனச்சேனைக ளை
வெல்வேனெனச்சினந்து விரைந்தோடிவந்தான்கா ண்
தேவேந்திரன்களிக்கும் திசைமன்னருமகிழ்க் க

மாவேகமாயோடி வருஞ்சிங்கக்குட்டித னை
மேகமென்வளைந்து வில்வளைத்தானேனத் தி
சேகரமாயெல்லவருஞ் சேர்ந்தோர்முகமா க
வன்னமணித்தேசில்வரும் வாளபிமன்னெதிர்ந் அ
எண்ணவொண்ணாக்கணைக் கொடுத்துத்தொடுத்தவிட் பி
பெருங்காற்றுடன்கலந்த பெருந்தீயைப்போலா க
வரும்போர் விஜயன்மகன் மனமேதிடுக்கிட வே
கொடும்போர்புரிந்தார்கள் கூடியமட்டிலு மே
கடன்வாங்கியும்பார்த்தார் காரியமாகவில் லை
சமைத்தகவமணியாற் றயங்குமங்கத்தேர்ப்பாக ன்
சுமித்திரனென்போன்றனைச் சுழற்றுஞ்செயலாலு ம
மேவுபுகழபிமன் வில்லின்திறத்தாலு ன்
காவலவனன்றன் கைவேகத்தாலுமவ ர்
விடுத்தகணைகள்முற்றும் வெட்டாமையிற்பெய்ந் தீ
இடந்தமழையதுபோலத் தெரிந்தோடிப்போனதல்லா ல்
மகமேருவையடைய வாளபிமன்றன்மீ அ
பகைபோர்கணைபேறும் படவில்லையிந்தவித ம்
எந்தக்கணையவர்க ளெடுத்துத்தொடுக்கவ ரா
அந்தக்கணைகள்தனக் கானபாணங்கள்த னை
அவரவர்கள்தன்மீது லாக்ரமித்துப்பற்[illegible]த்து த்
தன்றுமவேயபிமன் சரங்கொடுத்ததன்றியு மெ
அத்தவறிலொருவருக்கும் வஞ்சனைகள்செய்யாம ல்
உந்தும்படியேதா னெவ்வொருவர்தனக்கு ம்
முன்னொன்றுபாணமனைத் முன்னாகவேதொடுத் அ
செய்வ்வியிரும்பெரியோர் சிறியோரெனுமுறை மை
எண்ணிபவன்பாராம லெய்துங்கணைமழையா ய்
மண்ணில்விறைந்திடவே கிட்டம்பொழுதினி லே
தஞ்சினமேபொங்கவிரதோன்றலபிமன்மேரி ல்
மிஞ்சினபேர்களெல்லாம் வெற்றியிழந்தோடினர்க ன்
இத்தனி நமலர்க ளினைத்தோடிநேர்செய்கை ச்
சித்தைதபிக்கலங்கிச் சிலையாசானபார்த்துயர்ங் அ
கட்டழகனபிமன் கலங்கும்படியெதிர்த் த
மட்டிலாப்பாணங்களை வாரிச்சொரிந்தார்கா ன்

சிலைக்குருவிங்கணையைச் சிலகணையாற்போக்கியவ ர்
மலைக்கும்படியாக வாளபிமனேர்கொடிக்கு ன்
தீக்கணையைத்தானெடுத்துச் செலுத்தியவருடலை த்
தாக்கும்பொழுதிலந்தத் தனுவேதியனவருந் தி
வாடிமதிமயங்கி மறுவார்த்தைபேசாம ல்
ஓடுமவர்க்குறுந்தி யோடினாரம்மா னை
தக்கைதழுறிந்தோடத் தனயனைகவந்தா மா
சிக்கைதவருநதியந்தச் செல்வனபிமனெதி ர்
வர்துழனைந்தெதிர்த்து வாளிபலவாரிவிட்டா ன்
அந்தக்கணைகள்தனை யறுத்துத்தகர்த்தவன்ற ன்
தேரைப்பரியைத் தேர்நடத்துஞ்சாரதி யை
ஓரம்பினாற்போக்கி யொன்பதுபாணமதா ல்
திறலகவைத்தாமாவின் றேகந்தனைத்துளைக் க
உறுதியுக்கந்தவறி யோடினனம்மா னை
கன்னனதையறிந்து காளையெதிர்வந்தெதிர்த் து
அன்னவன்மீதினிலே யளவிலாப்பாணங்க ளை
சொரிந்தானபிமனுடல் துளைத்துருவியோடிட வே
விரிந்தபுகழுடையான் விஜயன்மகனதிக் கு
கன்னன்றொடுத்துவிட்ட கணையைச்சிலகணையா ற்
பின்னப்படுத்தியவன் பதலித்தோடிட வே
உருப்பேதமாகியதோ ரூபர்பூங்கணைதொடுக்க த்
தருப்போற்கொடையதனைத் தருங்கன்னராஜனுமந்த ன்
மதிசிதறிக்கால்பதறி வலியழிந்தேகக்கிதிந் து
உதிரமதைவடித்தே யோடினனம்மா னை
கிருபமுனியுடனே கிருதவன்மனுமுனைந் து
அரியபுகழோங்குமபிமன்னனையெதிர்த் து
சொரிந்தார்கள்பாணமதைச் சோனைமேகம்போ லே
தெரிந்தார்ப்பரித்தவர்கள் தேர்குதிரைசாரதி யை
ஒவ்வோர்கணைகளினா லுயரபிமன்னன்போக் கி
வெவ்வேர்படைவீரர் மேனிதனைத்துளைக் க
கிருபமுனியுமந்தக் கிருதவன்மனுமயர்ந் து
உருகிமனமுளன்றே யோடிவிட்டாரம்மா னை
மாமன்சகுனியவன் மகனுலூகன்முதலா கு

சேமத்தேர்வேந்தர்களுஞ் சிலைவிஜயன்புத்திரன்மு ன்
வந்தவளைந்தெதிர்த்து மாரிபோலம்புதொட்டா ர்
அந்தப்படைத்திரளை யபிமன்னனும்பார்த் து
உக்ரமித்துச்சினங் கொண்டெற்றசகுனிமக ன்
தக்கபுகழுலூகன் தலையையறுத்தெறிந்தா ன்
சகுனியதையறிந்து தரைமீதுவீழ்ந்தெழுந் து
மகனேமகனேயென்று வாடிப்பரதவித் து
மைந்தனிறந்தமன வருத்தத்தினாற்சினந் து
சிந்தினான்பாணமதைச் செய்யவபிமன்மீ து
மாமன்சகுனிதொட்ட வாளிகளோங்கிவர க்
காமனுக்கொப்பானதுள்ளு காளையபிமன்பார்த் து
தடுத்தான்சிலகணையால்ச் சகுனிவிடுங்கணையை த்
தொடுத்தானவன்மார்பைத் துளைத்துருவியோடிட வே
எல்லவர்க்கும்பிள்ளையினி இவனைப்போல்வாய்த்திடு மோ
நல்லவர்க்கல்லோகிடைக்கும் நமக்கேனிக்கேடென வே
நடுங்கிப்பிதிர்கலங்கி நல்லறிவுகுன்றியுட ல்
ஒடுங்கிச்சகுனிமன்னன் மீண்டினனம்மா னை
சகம்புகழுந்துரியோ தனன்நம்பியாம்விகர்ண ன்
பகாருந்துன்முகனும் படைவீரன்சல்லியனு ம்
மலையேதிரண்டதென வந்துவளைந்தார்க ள்
சிலையேந்தும்பொற்கரத்தான் சீரபிமன்றான்பார்த் து
நல்லதய்யாவுங்களுக்கு நாளெதிரியாவே னே
வல்லமைசேருமக்கு வாய்த்தபுகழெதி ரி
எங்கள்பெரியதந்தை யிருக்கின்றானதினா ல்
புங்கவரேயென்மீது போர்க்குவரலா மோ
வந்தவருக்கேதேனு மரியாதைசெய்யாம ல்
புந்திமகிழ்ந்தம்மா போவென்றனுப்புவ தோ
என்றந்தவாளபிம னிசைத்துச்சிலைவளைத் து
ஒன்றுபத்துநூறிலட்ச மொருகோடியாயனந்த ம்
கணைகள்தொடுத்துவிடக் கண்டந்தக்காவலர்க ள்
இணையிவனுக்காரெனப்போ ரிழந்தோடிப்போனார்க ள்
அவர்களோடும்பொழுதி லருகிருந்தசல்லியனு ம்
சவலமதியுடைய தம்பியர்களானவரு ம்

கொல்லவரும்வேங்கைக் குட்டியைப்போற்சீ றி
வல்லபமாய்க்கணையை வாரிப்பொழிந்தார்க ள்
வந்திபத்தையாண்டபிரான் மருகனதையறிந் து
செந்தீக்கணைகள்தனைச் சிலையிற்றொடுத்துவிட் டு
சல்லியன்றேரதனைச் சாரதிகளைப்பரி யை
வில்லைப்பொடிபடுத்தி மேவுமவனுடை ய
தம்பிதலைதனையுந் தண்டிக்கச்சல்லியனு ம்
வெம்பிமதிமயங்கி மெலிந்தோடிப்போனான்கா ண்
சொல்லுமிந்தப்படியே துரியோதனன்படை யை
கொல்லுகொல்லென்றேகுலைத்துக் குவித்துப்பிணக்காடா ய்
கெடிவீரசிங்கமெனுங் கிரீடிதரும்பிம ன்
துடியாய்வருஞ்செயலைத் த்ரோணர்முதலோர்பார்த் து
ஒருவில்லொருதேரு மோர்சாரதியுட னே
ஒருவனிவன்வந்துநம தொருகோடிசேனைக ளை
திக்குத்திசைமாறச் சின்னாபின்னப்படுத் தி
உக்ரசிம்மம்போலே யுலாவுங்குழந்தைத னை
முருகனெனச்சொல்வோமோ முகுந்தனெனச்சொல்வோமோ
பருவமதனிவனைப் பரமனென்றுசொல்வோ மோ
இவனொருவன்செய்திடும்போர் சித்ரகோலாகலவரு ம்
நவமாம்புவிமீது நவின்றோமோயிவன்ற ன்
தந்தையுடன்பெரிய தந்தைமுதலோர்களு மே
விந்தைமலர்த்தாரான் விஜயதரனீன் ற
மகன்வாளபிமனெதிர் வந்தவர்களுஞ்சேர்ந் து
தசமையுடனெதிர்த்துச் சமர்தொடுப்பாரானா ல்
எப்பாடுதான்படுமோ யிந்தப்புவிமூன்று ம்
அப்பாண்டவர்பெருமை யார்தானுரைக்கவல்லா ர்
என்றதுரோணரிசைத்தமொழிகேட்டு க்
கன்றிமனமுருகிக் காவலனுமேதுசொல்வா ன்
ஐயரேசெப்புபுக ழாரியரேயிச்சிறி ய
பையனுயிரையொரு பாணத்திலுற்போக் கி
காரியங்கொள்வோமென் றகவலையில்லாதிவண் மா
வீரியனென்றவனை மேன்மையாகப்பே ச
வந்திரெனச்சினந்தான் வணங்காமுடிவேந்த ன்

அந்தச்சமயமதி லவனுக்கிளையதம் பி
துச்சாதனவேந்தன் துடிதுடித்துப்பற்கடித் து
உச்சாகமாகவேதா னுரைப்பான்கேளனறு வே
இந்தச்சணமே நீரெனக்குவிடையருளு ம்
அந்தச்சிறுபயலை யமனிடத்திற்போக் கி
வருவேனெனச்சினந்து மண்டியிட்டார்ப்பரித் து
கரவேகமாய்நூறு கணைகள்தனைச்சொரிந்தா ன
சொரிந்தகணைவரவைத் துய்யபுகழபிம ன்
தெரிந்தனலாஸ்திரத்தைச் சிலையிற்றொடுத்துவிட் டு
சல்லடைக்கண்ணாகத்துச்சா தனன்மேனியைத்துளைக் க
அல்லலடைந்துருகி யறிவழிந்தோடினன்கா ண்
கன்னமகாராஜன் கண்டுமனம்வெகுண் டு
வன்னச்சிலைவளைத்து மாவேகமாய்க்கணைக ள்
நூறுநூறாயிரமாய் நொடிக்குள்தொடுத்துவி ட
வேறுவேறாகவதை விஜயன்மகன்போக் கி
எரியுப்பகழிமுத விலெறாகவாளியையு ங்
துரிதமுடன்றொடுத்துத் துளைத்தான்கன்னன்மார் பை
அறமேவடிவாகியவதரித்தகீர்த்தியினு ன்
புறமுதுகிட்டோடிப் போனான்காணம்மா லே
தமயனொடுஞ்சயலைத் தம்பிராதனறிந் து
இமயப்புயங்கள் துடித்திதப்பாலுமி சை
எங்கைவாளாமிதனுக் கிரைகொடுக்கின்றேனென வே
சங்கையிலாராதவேன்போன் சரமாரியாய்ப்பொழிந்தா ன்
பொழிந்தவன்கணையைப் பொடித்தூள்படுத்தியி தோ
ஒழிந்தானெனவிரைவி லோர்மாமுகப்பக ழி
என்னுமொருகணையையெடுத்துத்தொடுத்துவிட் டு
மின்னுராதன்சிரசை விரைவிலறுத்தெரிந்தா ன்
ஓங்குமந்தப்படைக ளலர்ந்தசருகைப்போலு ந்
தீங்கிலாவாளபிமன் செந்தீயைப்போலவு மே
காய்ந்துகருக்கிடவே கலங்கிநிலைகுலைந் து
மாய்ந்ததராவுயர்த்தோன் வாம்படைகளப்பொழு து

## வீமன் சொல்லுதல்.

தம்பிவிஜயன்மகன் றன்பத்மயூகத்துட்போ ய்
தம்பிபோலேபறந்து அரியோதனன்படை யை

மாட்டுஞ்செயலதனே மதகுஞ்சரவீ ம
தாட்டிகவானதிந்து தமயனெனுந்தரும ர்
அடியிற்பணிந்தெழுந்திதம் மண்ணுவேநம்முடை ய
குடியைப்புரக்கவந்த குழந்தையபிமன்னனென்போ ன்
னண்டியாகப்புகுந்திங் குராகக்கொடிவேந்த ன்
மண்டும்படையுடனே வலியபோராடவெ து
நல்லதல்லவேயதனல் நாணவனுக்குத்துணையாய் ச்
செல்லும்படியாகச் சிலவருள்வீரொன்றுரைக் க
தருமர்விடையருளச் சர்தமணித்தேர்செலுத் தி
மருமன்னர்கண்டோடுங்க மதர்த்தப்பலவீம ன
சென்றந்தப்போர்வீரர் செயல்மாறிமெய்மறந் து
நின்றநிலைதவிர் நெஞ்சயர்ந்தோடிட வே
செய்யுங்கதாபாணி திறல்வீமன்றனனுட னே
வையம்புகழ்தரும மன்னருமங்கேபுகுந்தா ர்

## வீமசேனன்யுத்தம்.

சீனர்தெலுங்கர் சிங்களர்மாளவர்க க
சோனகர்மாகதர்கள் துளுவர்குருகர்முத ல்
பற்பலவரசர்களெய பதியரசரொல்லவரு ம்
மற்பொருதும்வீமனெதிர் வந்துபோராடினார்க ள்
வீமனதைப்பார்த்து வீரவேசத்துடன் னே
நேமியுகந்தெதிர நீளும்படையழி ய
தாக்குஞ்செயலதனைச் சற்பக்கொடிவேந்த ன்
நோக்கித்தனதுடலம் நொந்துமனமயர்ந் து
வாளிடும்மலைபொடுக்கி மாயுமரவைப்போலு ம்
கானில்வாழ்சிங்கமதைக் கண்டுமறிந்தோடுகின் ற
ஆனைவினைப்போலு மபிமன்னனுல்நம து
சேனைகள்தட்டழிந்து சிதையுஞ்சமயமதி ல்
கடிதாம்நெருப்புடனே கர்ந்துங்கலந்ததைப்போ ல்
கொடும்போர்புரியுமிந்த குழந்தையபிமன்னனுட ன்
வல்லமைசேர்வீமனுமே வந்துகலந்துகொண்டா ர்
வெல்லமுடியாதெனவே வேந்தன்மனங்கலங்கி இ
மாமன்சகுனிதன்னை மன்னனவன்பார்த் து
சேமப்பெருகி சிந்துதேசத்தரசனு மே

தம்பிமாருமசுவத் தாமாமுதலோரு ங
கும்பல்சேர்ந்தோர்முகமாய்க் கூடிமதவீம ன
காளையபிமனைப்போய்க் கலக்காமலேதடுத் து
வேளையறிந்துசமர் விளைப்பீரெனவுரைத்தா ன்
சொல்லிவாய்மூடுமுன்னே துடித்தந்தப்போர்வீர ர்
வில்லிணக்கிநாண்பிகிர்ந்து வீமசேனன்மீ து
அம்பொருவருக்கொருவ ராயிரமாயிரமாய் க்
கும்புகும்பாகத்தொடுத்துக் கொடும்போர்விளைத்தாக்க ள்
வீமனதையறிந்து விற்குனித்துநாணேற் றி
பூமிதோயாமல் பொழியுமழைபோ லே
உரகக்கொடிவேந்த னுக்ரப்பண்டமீ ரி
சரமாரியாய்ப்பொழிந்து தாக்கியந்தப்போர்வீர ர்
தங்கமகுடந்தரித்த தலைகள்தனையறுத் து
பங்கமிலாமேனியிரு பக்கப்படத்துளைத் து
வாகுவலயமிட்ட மணித்தோள்களைத்தறித் து
காகூர்வாளேந்திவந்த கைகள்தனைமுறித் து
வீரகண்டாமணிகள் விளங்குபதந்துணித் து
தேனர்ப்பொடிபடுத்தி தேசிகளையூடறுத் து
எங்கும்பிணக்காடா யெவ்விடத்துஞ்செங்குரு தி
பொங்கிவழிந்தோடப் பொருதுஞ்செயலத னை
தரியோதனனறிந்து துன்பக்கடலாழ்ந் தி
அரியதன்மைத்துனனுஞ் சிந்துதேசமன்ன ன்
செய்யமுகம்நோக்கித் திருமாமதிவத ை
வெய்யபகைவரஞ்சவிற்பிடித்தபோர்வேந் தே
இந்தச்சமயமதி லெனக்கொருதவிசெய்வா ய்
அந்தச்சிறுவனெனு மபிமன்னுடன்வீம ன்
வந்துகலக்காமல் மகாதேவர்முன்புனக்கு த்
தந்தவரத்தையிந்தச் சமயமதில்நினைந் து
வெஞ்சமர்நீபுரிவாய் வீமனுடனெதிர்த் து
நஞ்சரவின்மேற்றுயிலும் நாரணனார்தன்மருக ன்
காளையபிமன்னெதிர்யான் கைக்காரர்சிலருடன்போ ய்
ஆளையடக்கியவ னாவியைப்போக்குகிறே ன
என்சொல்லுறுதிதனை யினிப்பாருமெனவுரைத்தா ன்

நின்சொற்படிமுடிப்பேன் நிருபனேயென்றிறைஞ் சி
சிந்துதேசத்தரசன் சிவபெருமான்முன்கொடுத் த
மந்திரத்தையுச்சரித்து வரிவில்தனைவளைத் து
நாணிபிகிர்ந்திழுத்து நாகாஸ்திரந்தொடுத் து
காணுமந்தப்படையைக் கலக்கினனப்பொழு து
தருமனும்வீமனுமே தங்களாலானமட்டு ம்
அரும்போர்புரிந்தவர்க ளமைத்தவூகத்தினுள் ளே
சென்றரிதாஞ்சமர்செய் செல்வனபிமன்னனுக் கு
நன்றியுடன்றுணையாய் நாமும்போவோமென வே
தண்டதரவீமன் தன்னால்முடிந்தமட்டு ம்
மண்டுமந்தப்படையை மாய்த்துப்பொடிபடுத் தி
சுழல்காற்றெனவளைந்து சுற்றியெங்குந்தான்பார்த்தா ன்
அழற்கண்படைவீர ரவனைவிடாமற்றடுத் து
செய்யசமர்விளைத்தார் சிந்துதேசத்தரச ன்
வையம்புகழ்தரும மன்னன்றேரைபரி யை
சாரதியைத்தனுவைத் தறித்துமுறித்தெறிந் து
வீரப்பிரதாப வீமன்றேரைப்பரி யை
துண்டித்துச்சாரதியைத் துளைத்துவில்லைமுறித்தா ன்
கண்டர்தவீமனுமே கதையைக்கையிற்பிடித் து
சாகரம்போல்வளைந்த தானைகளைப்போக்கியந் த
வூகப்படைகளத னுள்ளேபோய்மைந்தனுக் கு
உதவியாவோமெனவே யொதுக்கிப்பதுங்கிப்பார்த்தா ன்
இதுதான்சமயமென வீசலைப்போல்வளைந் து
எழில்வீமன்றன்மீதி லெண்ணிலாப்பாணத்தை ப்
பொழியுமந்தக்கருணம் பொறிகலங்கிவெம்மதக் து
தாங்கமுடியாமல்த் தக்கபுகழ்வீம ன்
ஓங்குங்கதையுடனே யோடினனம்மா னை
மற்றுமந்தப்பாண்டவர்கள் வாம்படைவீரரெல்லா ம்
வெற்றிச்சமர்விளைத்து மெலிந்தோடிப்போனார்க ள்
தருமமுடிவேந்தன் சரமாரியால்வருந்தி த்
திரும்பிவிட்டாரிந்தவிதஞ் செயித்திரதனன்றுசெய் த
சமர்க்குவமையாதுசொல்வேன் சாகரஞ்சூழ்புவியை ச்
சுமக்கின்றசேடனுமே சொல்லத்துணியா னே

சிந்துதேசத்தரசன் சிந்தியதிக்கணையா ல்
சொர்ந்துமனமயர்ந்து நுணங்கியோடிப்போ ன
பாண்டவசேனைமன்னர் பதைபதைத்துள் ளுரு கி
ஆண்டவனேயிவ்வேளை யருச்சுனராஜனென்போ ன்
வாராமல்ப்போனானே மண்டும்யூகத்திலுள் ளே
சீராரும்வாளபிமன் சென்றொருவன்கவேபோ ர்
புரிபவனுக்குத்துணை யாய்ப் போரும்படைவீர ர்
ஒருவருமில்லையேயி ன நருகியிருந்தார்க ள்
இவர்கள்கெதியிவி யிப்படியாயிருக் க
அவனியெலாம்புகழு ம க்கொடிவேந்த ன்
கன்னன் துரோணர்முதல் னகமுடிதரித் த
மன்னர்சிலருடன் வாளபிமனையெதிர்த் து
சோனைமழைபோலே சரிமுகாஸ்திரந்தொடுத்தா ர்
வானையளாவியெதிர் வருகுமந்தக்கணை யை
அறிந்தந்தவாளபிம னவசரந்தானில்லாம ல்
செறிந்தநாகாஸ்திரத்தாற் சிதைத்துப்பொடித்தவர்க ள்
விருதுக்கொடிகளையும் வீரபட்டங்களையு ம்
அரிதசம்பொற்றேர்களையு மழித்துப்பொடிபடுத் தி
தேகங்களைக்கிழித்துச் சிரங்கள்தலையுருட் டி
சோகமுறவவர்கள் தோள்கள்துணிச்சிதைத் து
கையையறுத்தெறிந்து கவசங்களைக்கிழித் து
மெய்யைத்துளைப்படுத்தி விற்பாணத்தைமுறித்தா ன்
அந்தச்சமயமதி லங்கதேசத்தரச ன்
வந்துமுனைந்தபிமன் மனங்கலங்கவாள்தொட்டா ன்
கன்னனவிடுங்கணையைக் கணைக்கணையினாற்போக் கி
பின்னுங்கணையிரண்டைப் பிரயோகஞ்செய்தெதிர்த் த
அங்கதேசத்தரச னங்கமுநனைந்துளக்க ச்
சங்கையிலாச்சோடமுற்றுத் தட்டுத்தோடிப்போனான்கா ண்
சுகருக்கிணையான துரோணரசுவத்தா மா
மிகுவேகமாகவந்து விஜயன்மகன்மீ து
தாராகணம்போலே தயங்குங்கணைசில தை
சோராமலேதொடுத்தார் தொடுத்தக்கணைகள்த னை
மன்னனபிமனென்போன் மாற்றித்தூற்றிப்பொடித் து

உன்னிதமாகச்சரோ ருகப்பகழியைத்தொடுத்    து
மாட்டுஞ்சமயமதில் மகனுந்தகப்பனு    மே
ஓட்டம்பிடித்தாரிவர்க ளோடுஞ்செயலறிந்    து
துன்முகனென்னுந் தோன்றல்முனைந்துவந்    து
பின்னிடியாஸ்திரத்தை வில்லிற்றொடுத்துவிட்டா    ன்
பொடிக்கணையாயதனைப் பொடித்தந்தவா[illegible]ரபிம    ன்
இடிக்கணையாமிரண்டை இமைப்போதி[illegible]ற்றொடுத்    து
துன்முகன்றன்சிரசைத் துணுக்கென்றறு[illegible]தெரிந்தா    ன்
அன்னசமயமவ னருகிருந்தசல்லியனு    ம்
அவன்பிள்ளையர்னவரி லாதிபராஜ[illegible]    மே
அவனுக்குரியசில வரசருமொன்றுப[illegible]    டி
வந்துவளைத்தார்கள் வாள்விஜயன்பு[illegible]    ளை
அந்தப்படைத்திரளை யபிமன்னனும்பார்த்    து
வேகக்கணைசிலதை வில்லிற்றொடுத்தவர்க    ள்
தேகந்தனைத்துளைத்துச் சிறியமர்புரிந்    த
சல்லியன்புத்திரன்றன் தலையையறுத்தெறிந்    து
வில்லுங்காண்சல்லியனே நீரென்னசொல்லுகிறீ    ர்
என்றவன்பாற்றிரும்பி யிரண்டுவாயுக்கணை    யை
வென்றியுடன்றனது வில்லிற்றொடுத்துவிட்    டு
சல்லியன்றேர்குதிரை சாரதியைப்போக்கடிக்    க
அல்லலுற்றுச்சல்லியனு மறிவழிந்தோடினன்கா    ண்
வல்லபத்தினிற்சிறந்த மகாரதத்தலைவர்வந்    து
செல்வனபிமன்மீது சிலைவளைத்தம்புதொட்டா    ர்
தொட்டவர்கணையைத் தூள்பொடியாகத்தரித்து    த்
திட்டமுடனேநூறு செந்திக்கணைகள்த    னை
ஏவிப்பருவதம்போ லெதிர்த்தமகாரதர்க    ள்
ஆவியைப்போக்கடித்தா னறிவழிந்தோடினர்க    ள்
இவ்விதமாகவேதா னெதிர்த்தபடைத்திர    ளை
அவ்விஜயன்றன்றெடுத்த வபிமன்னபூபால    ன்
பொங்கும்பிணமலைகள் போற்குவித்திடச்சிறைத்    து
அங்குமிங்குமெங்குமே யபிமன்னனுகவேதா    ன்
மங்களமேவுசக்ர வாளநடுவிற்றிகழு    ஞ்
செங்கதிர்ச்செல்வனைப்போற் ஜெயசிங்கவாளபிம    ன்

வயங்குபத்மயூகமதின் மத்தியிலேநிற்பத னை
தயங்கியங்கத் தரியோ தனமேவந்தன்றன்பார்த் து
வெட்கமுற்றன் றடைந்து வேந்தர்கள்குமாரரெனு ங்
தக்கயிளவரசர் சதிராயிரம்பேர கர
இனியதன்பிள்ளையெனு மிலக்கணகுமாரனையு ம்
கனிவாயனுப்பிவைத்தான் கருதுமவர்கள்சென் று
வில்வளைத்துநாணேற்றி வெற்றியபிமன்மீ து
வல்லிடியாஸ்திரமும் வருணாஸ்திரங்களுட ன
வாயுவாஸ்திரங்கமல் வாளிகுபேராஸ்திரமு ம்
பாயுங்கருடாஸ்திரம் பருவதாஸ்திரங்களு மே
சந்திரசூரியாஸ்திரந் தணையாஸ்திரமுருந் ர
இந்திர ஸ்திரங்களுட னியமாஸ்திரங்கொடி ய
நாகாஸ்திரம்விருத்த நாராயணாஸ்திரமு ம்
மேகாஸ்திரமுதலாய் வேகக்கணைகள்த னை
ஏவிக்காண்டாவனத்தை யெரித்துப்புகழ்படைத் த
மாவிஜயன்புத்திரனை மறைத்தார்கள்பூங்கொடியா ல்
அபிமன்னராஜனதை யறிந்துமிகச்சினந் து
குபீலென்றுசித்திரவிற் குனித்துநாணேற்றியங் கு
வளைமிகுமூரக வாளிதனைத்தொடுத் து
இளவரசப்படைகளிடைந்தோடிடப்பொரு தி
காண்டாவனமெரித்தோன் கண்மணியும்வந்தியத் னை
ஆண்டான்மருமகனு மானவபிமன்னனென்போ ன
வான்குலவுசூரியனை மறைத்தோங்கொருதேரு ம்
நான்குகுதிரைகளும் நனிசேரொருதனுசு ம்
நம்புமோர்சாரதியும் நன்றூர்துவசமு மே
அம்பறுத்தூணியொன்று மழியாமல்காப்பாற் றி
திரிபுரசம்மாரி சிவபெருமானைப்போ லே
அரிதாம்பொற்றேர்மீதி லமர்ந்திருக்குமவ்வே ளை
சொல்லருந்தேர்ப்பாகன் சுமுத்திரன்றன்முகத் தை
வல்லமைசேருமபி மன்னன்பார்த்தேதுரைப்பா ன்
சுமித்திரனேநம்மைவந்து சூழ்ந்தபெரும்படைக ள்
தமைத்திரணமாயழித்துச் சன்னபின்னலாடிவிட்டோ ம்
இன்னஞ்சிலபடைக ளிருப்பதனைதயும்நொடிக்கு ள்

சின்னப்படுத்தியினித் திரும்புவோமென்றுரைத்தா ன்
அப்போதுசாரதியு மபிமன்னனைநோக் கி
முப்போதுமன்னர்புகழ் முடிவேந்தன்புத்திர னே
ஐயனேயுன்மகிமை யறிந்திடக்கூடாதசி று
பையனேயானேதேதோ பதறிப்பலவிதமா ய்
சொன்னதினுலெனது சொற்சோர்வையோராம ல்
மன்னிக்கவேண்டுமொரு வார்த்தைசொல்லக்கேளுமை யா
தோன்றுசக்கரயூகஞ் சூசிகாயூகமுத ல்
மூன்றுயூகங்களையு முனையாகவேயுடைத் து
வந்தெதிர்த்தோர்யாவரையும் விறலுடன்சேர்த்துவிட்டீ ர்
இந்தமட்டிலும்போரை யினியேநிறுத்திவந்த ன்
தந்தையிருக்குமிடம் தன்னாடிப்போவது வே
எந்தையேயுத்தமங்கா ணின்னமொருவார்த் தைக
உமக்குதவியாகவேவர் துற்றபுகழ்தரும ன்
சமர்க்கிளையாவீமன் றம்பியிருவர்முத ல்
பந்துவர்க்கவீரரையும் படைத்துணைவேந்தரையு ஞ்
சிந்துதேசத்தரசன் சின்னபின்னப்படுத் தி
உள்ளேநுழைந்துவர வொட்டாமலேதடுத் து
வள்ளேறுபோலேயிருக்கும் வன்மையினாலினிமே ல்
நாமுமவர்களுக்கு நற்றுணையாகவேபோ ய்
தாமமணிமார்பன் சயிந்தவனோடெதிர்த் து
வெற்றிபெறுவதுவே மேன்மையெனவுரைத்தா ன்
உற்றபேரன்புடனே யுரைத்ததன்சாரதியி ன்
வார்த்தைதனைக்கேட்டு வாளபிமன்றனிசார் து
சீர்த்தியுடன்றேரைச் செலுத்தென்றுரைத்தான்கா ண்
சொன்னமொழிகேட்டுச் சுமித்திரனென்போன்களித் து
வன்னமணித்தேரை மன்னுவின்னுருந்தரணிங் க
செலுத்தினன்வெற்றிபெற்றுச் செல்வன்வருஞ்சிறப் பை
தலத்திற்புகழோங்குந் தருமர்முதலோர்பார்த் து
சந்தோஷங்கொண்டிருந்தார் சற்பக்கொடிவேந்த ன்
அந்தோபெருமலையி லெய்ப்பட்டராஜசிங்க ம்
திரும்பியேபோடுதுகாண் தேசத்தரசர்க ளே
விரும்பியவனைத்தொடர்ந்து விடாமல்மடக்குமெ ன

வல்லமையோங்குசில மன்னவர்களுந்தானு ந்
செல்வனபிமன்னனெதிர் சென்றுமதித்தெதிர்த்தா ன்
பின்னேதொடர்ந்துவந்த பெரும்படைவீரர்களை த்
தன்னேரிலாவிஜயன் றந்தவபிமன்பார்த் து
விடவரவுபோற்சீறி வில்வளைத்துநாணேற்றி த்
திடமுடனேமுட்கணையைச் சிலையிற்றொடுத்துவிட் டு
வந்தபடைமுறிய மலைபோற்பிணங்குவி ய
எந்தவிடங்களிலு மேரிபோற்செங்குரு தி
பொங்கிவழிந்தோடப் போக்கினன்சேனைகளை த்
துங்கவரவக்கொடியோன் துரியோதனன்பார்த் து
துன்பக்கடலாழ்ந்திச் சோம்பிமுகங்கரு கி
முன்[illegible]போய்ப்போராடி முறிபட்டிளைத்தவன் த
ஜெகம்வந்தர்புத்திரர்கள் சிலபேருடன்றன தி
மகனுமிலக்கணகு மாரனையுமேசேர்த் து
போவென்றனுப்பினன்காண் பொங்கியவர்கள்வந் து
தேவேந்திரன்பேரன் சேயபிமனையெதிர்த்தா ர்
எதிர்த்தயிளவரச னொருமந்தவர்படை யை
மதர்த்தடலவிஜயன் மகனவன்பார்த் து
வந்ததுகாலன்றிரத்த மசகப்படையென வே
வெந்தணலாஸ்திரத்தை வில்லிற்றொடுத்துவி ட
ஒருகாலொடிந்தொருகா லுடனொடிப்போனவரு ந்
சருகாகவேகருகிச் சதைந்துகிடப்பவரு ம
கையிரண்டையுந்தோற்றுக் களைத்துக்கிடப்பவரு ம்
மெய்யிரண்டுதுண்டாகி விண்ணுலகஞ்சேர்ந்தவரு ம்
மேனிதுளைபட்டுடைந்து மெலிந்துகிடப்பவரு ம்
மாளிகைதிந்தவித பார்த்தார்சிலபேர்க ள்
அந்தச்சமயமதி லரவக்கொடிவேந்த ன்
மைந்தனிலக்கண குமாரன்முன்னேவெதிர்த்தா ன்

## இலக்கணகுமாரன்வரத்து.

பாருலகெலாம்புகழும் பார்த்தன்மகனதிர் ந்
வாருமிலக்கண குமாரசிகாமணி யே
அடியேன்வில்லின்றிறத்தை யறிவோமெனநினைத் தோ

படிமீதுசேர்செலுத்தி படபடப்பாகவந்தி ர்
சமயமறிந்திளைத்துத் தவித்தோடிப்போகாம ல்
அமராடும்பார்ப்போமென் றபிமன்னனுமுரைக் க
வல்லரவக்கொடியோன் மகனனவன்கேட் டு
நல்லதுகாணுமைபொரு நாழிகைக்குள்ளா க
பொன்னுலகமேற்றுகிறேன் பொறுமைபொறுமென்றுரைத்து
மின்னுஞ்சிலைவளைத்து விடுத்தான்சிலகணை யை
விடுத்தவவன்கணைகள் விரைந்தோடியேவரு க
அடுத்தவரையாதரிக்கு மபிமன்னனைத்தடுத் து
இந்திராஸ்திரமெடுத்தவ் விலக்கணகுமாரனை யே
சிந்தித்துவிட்டவன்றன் தேகந்தனைத்துளைத் து
எழில்வீரகண்டையணிந் திலங்குங்காலைத்தறித் து
செழியகரங்களையுந் திணடோளையுமறுத் து
களங்கமிலாததங்கக் கவசந்தனைக்கிழித் து
விண்குஞ்சிரமுமற்று விழத்தாக்கியபொழு து
மதிபாழுகமிலங்க வல்லிலக்கணகுமர ன
சதிராகவிவடிவிற் சாய்ந்தான்காணம்மா னை
இலக்கணகுமாரனென்போ னிறந்ததோர்சங்கதியை த்
தலைக்கழுடன்கேட்டுத் துரியோதனவேந்த ன்
மண்ணில்விழுந்திதழுந்து வாயிலறைந்துகொண் டு
கண்ணீர்திரளையோடக் கலங்கிமதிமயங் கி
அன்பழுந்துரனவனைத் துரோணர்முதலோர்பார்த் து
தென்புசிலதுரைத்துத் தேற்றினர்ப்பொழு து
மின்னுமுடிவேந்தன் வெகுண்டவர்களைப்பார்த் து
என்னுயிருக்கொப்பாக விலங்குமரசர்க ளே
மேவுமனேகமுடிவேந்தர்குமாரனையு ம்
காவலவினனனுங் கண்மணியாம்மைந்தனையு ம்
கொன்றுஜெயம்படைத்த குழந்தையபிமன்ன னை
இன்றிந்தப்போர்க்களத்தி லிமைப்பொழுதுக்குள்வதைத் து
பழிக்குப்பழிமுடித்துப் பாரில்நமதுபுக ழ்
செழிக்கும்படியுதவி செய்யாமற்போவிரென்று ல்
அச்சமில்லாதமம தராசாக்கினைவேண்டே ன்
இச்சணமேயானுயிரின் திறக்கத்துணிந்திடுவே ன்

என்றந்தமன்னவன் குனிசைத்தமொழியைக்கேட் டு
கன்றிமனமுருகிக் காவலர்களோதுசொல்வார் ர்
மண்டலமெங்கணடிசையும் வணங்கும்வணங்காமுடியா ய்
மண்டலத்திராஜாக்கள் மைந்தர்களையுமனா து
பாலனையுங்கொன்றுவெற்றி படைத்தவிஜயகா ன்
பாலனையும்படியோர் பாணத்தினும்போக் கி
வெற்றித்தார்சூட்டுகின்றோம் விசனம்வேண்டாமென வே
சுற்றியிருந்தவர்கள் சொல்லியுபசரித் து
எழுகடல்களுமன் றேகமாய்ச்சேருதல்போ ற்
சூழுமத்தப்படைகள் சூழ்ந்தோர்முகமா க
பற்குணன்மெய்ம்மகிழ்ந்த பாலனெதிர்வந்தெதிர்த் து
விற்குனித்துநாணேற்றி வெற்றிச்சமர்விளைத் து
மாயமானுகவந்த மாரீசன்ராகவ னை
மாயமாக்கொண்டுசென்ற வன்மைதனைப்போ லே
பத்மவியூகம்நடுவாம் பழையவிடம்வளையி ற்
சத்தியவானபிமன் றனைக்கொண்டுசென்றார்க ள்
அஞ்சாதவீரசிங்க மபிமன்னராஜகு மா
மஞ்சாருஞ்செஞ்ஞிலையை வளைத்துநாணேற்றியட ர்
அக்ஷயபாணத்துணி பாணங்கள்விடுக்கவகை ய்
பக்ஷனைந்துசெய்தும்பின்னும் பருப்பதவளவிதொட் டு
வந்தபடைவீரர்களை வாளினால்மறைத் து
அந்தக்கரணமுதல் ஐம்புலனுமேகலங் கி
தயங்கிச்செயல்குலைந்து தன்னிலைவிட்டயர்ந் து
மயங்கும்படியாக வாட்டுமந்தத்தருண ம்
தலைநெரிந்தார்கள்சிலர் தாள்கொடிந்தார்கள்சில ர்
நிலைகுலைந்தார்கள்சிலர் நெஞ்சழிந்தார்கள்சில ர்
தேருடைந்தார்கள்சிலர் சிரமிழந்தார்கள்சில ர்
மார்புடைந்தார்கள்சிலர் வாளிழந்தார்கள்சில ர்
வில்லிழந்தார்கள்சிலர் வேலிழந்தார்கள்சில ர்
சொல்லழிந்தார்கள்சிலர் தோளிழந்தார்கள்சில ர்
மகதேசத்தரசன் மாய்ந்தான்காண் கேகயனு ம்
தகைமையிழந்திறந்தார் சகுனியின்பிள்ளைகளு ம்
ஐம்பதுபேர்தம்பியரு மம்பட்டுவானவரு ம்

வப்பிஷிறந்தார்கள் வலியதிருபமு ளி
தேரைப்பரியைச் சிலேயைப்பரிகொடுத்து ப்
போரைக்கருதாமல்ப் புறங்கொடுத்தோடிவிட்டார ர்
துச்சாதனனுமவன் துணைவரும்மைத்துனரு ம்
அச்சமிலாமலேவந் தபிமன்னனையெதிர்த் து
போர்முனையைவிட்டோடிப் போனார்களிந்தவித ம்
பார்முனிவேந்தரெலாம் படைமுறிந்தோடுவ தை
துரியோதனன்பார்த்துத் துன்பக்கடலாழ்ந் தி
கருகிமுகஞ்சுழித்துக் கன்னனைப்பார்த்தேதுரைப்பா ன்
அண்ணுவேகேளுமிவ னரியாச்சிறுகுழந் தை
எண்ணுமல்செய்திடும்போ ரெளிதாமென்றெண்ணுதீ ர்
பாம்புசிறிதானாலும் பருத்ததடியா லே
வீம்பொடுங்கவேயடிக்க வேண்டுங்காண்மன்னவ னே
அரவுசிறிதானு லதின்விஷமுஞ்சிறி தோ
விரைதருமாலகால விஷப்பாம்பின்றன்வயிற்றி ல்
கொடுமையுடன்பிறந்த குட்டிப்பாம்பாகுமிதை க்
கொடியசம்மட்டியது கொண்டடிக்கவேணுமை யா
இன்றிவன்செய்திடும்போ ரெளிதல்லவேயிதுவு ம்
அன்றியிதுவரையி லருச்சுனராஜனுக் கு
இத்தச்சமாசார மெட்டியிருக்குமை யோ
அந்தப்பெரும்புலியு மபிமன்னுடனேவந் து
சேர்ந்துகொள்வானுமானால்த் தீர்ந்ததுநம்சேனைமுற்று ம்
சார்ந்தயிருவரையுந் தான்ஜெயிப்பார்யாருமில் லே
ஆகையினாலிவனை யதிசீக்கிரமா க
வாகைமலர்த்தார்வேந்தே வதைசெய்திடுவையென்று ன்
மன்னனுரைத்தபடி வாளபிமனையெதிர்த்து க்
கன்னமகாராஜன் கணைகல்சிலதொடுத்தா ன்
அந்தக்கணைகள்தனை யபிமன்னன்போக்கி ப்
பந்திபந்தியாய்நூறு பாணங்களைத்தா வி
கன்னமன்னன்மேற்குதிரை கைவில்லையுந்தறித்தா ன்
பின்னமடைந்துகர்ணன் பிதற்றியேயோடுவ தை
துச்சாதனவேந்தன் துரிதமுடனேபார்த் து
அச்சமயம்பொற்றேரொன் றவனுக்குத்தந்தான்கா ண்

தந்தவவன்தேரில்த் தானகன்னனுமே
வந்துமறுபடியும் வாளபிமனையெதிர்த்
பரசிராமரிடமுன் படித்தவித்தையா வையு
உரமாகவேசெலுத்தி யுத்தஞ்செய்யும்பொழு
விஜயன்மகன்பார்த்து வேகக்கணையில
இசைந்ததன்செஞ்சிலையி லெடுத்துத்தொடுத்துவிட்
அருங்கொடைக்கன்னமன்னன் வளழகுதேரைப்பரி
மருவுதேர்ச்சாரதியை வரிவில்லையுந்துணிக்
பின்னமடைந்தோடிப் பிழைத்தான்காணிந்தவித
மன்னனபிமனெதிர் வந்துபலதூ
போராடிச்சிரழிந்து புறமுதுகிட்டிளைத்து
தாரகிந்திணைபுயத்தான் தானகன்னனோடிவந்
துங்கமறைக்கொடியோன் துரோணர்முதலோ
அங்கதேசத்தரச னன்புடன்பார்த்துரைப்பா
வெஞ்சமர்வேந்தர்களே விஜயன்மகனிவ
வஞ்சகத்தாலினிநாம வதைசெய்யவேணுமல்லா
எதிர்நின்றுபோராடி யிவனைஜெயித்துவரு
அதிவீரசூரரிங்கே யாருமில்லையிதறி
அனைவருநீங்கள் யாவருமிங்கேசேர்ந்
வானவர்கோனீன்றெடுத்த மதலைமதலையின்ற
முன்பாகநின்றவனை முனைந்துபோர்செய்வீரக
பின்பாகயான்மேவிப் பெரும்போர்புரியுமக்
காளையபிமனென்போன் கைவில்லைப்போக்கியொ
ராளிகைக்குள்ளாக நானவனைக்கொல்லுகிறே

{ அபிமன்னன் தேர் குதிரை வில் சாரதி
இவைகளைத் துண்டித்தல். }

என்றானவன்கருத்துக் கிசைந்தந்தப்போர்வீர
குன்றாப்புகழ்படைத்த குழந்தையபிமன்னனெதி
வந்துசமர்விளைத்து வாளிபலவாரிவிட்டா
சுந்தரத்தார்மார்பன் தோன்றலபிமன்பார்த்
கனன்றார்ப்பரித்தெழுந்து கண்கள்பொறிசித
அனலாஸ்திரஞ்சிலதா லவர்கள்களைப்போக்

தி து மே து தை டு யக ம் வை த் து ரா ளா னை ப் ம் து து ன் ன் த ரு ன்
ந் ர் ர் து ற கி

வச்சிரவாளிதொட்டு வாட்டிப்புறங்காட் டி
மெச்சுமந்தப்படைகள் மெலிந்துகலிந்தோ ட
வாணிந்திரனகளிக்க வானோரதிசயிக் க
பானுவும்பார்த்தொடுங்கப் படைமன்னருமநடுங் க
மேருமலைதகர விண்மீனினமுதி ர
யருப்புரியா வரும்போராருபுரிக் து
லுன்றொழிபவிப்படையை யொழித்துவிடவேனு ம்
என்றந்தவாம்படைமீ தெண்ணமனதச்செலுக் தி
அப்பாலிப்பால்திரும்பி யபிமன்னன்பாராம ல்
அப்பாரரசருட னமராடும்வேளைதனி ல்
தென்புருவலைத்தொதுங்கித் திருடனைப்போலவதுங்கி ப்
பின்புறத்திலேயிருந்த பெருங்கொடிக்கர்ணமன்ன ன
இதுவேசமயமென வெண்ணியுடல்நடுங் க
மெதுவாகவேதமது வில்வளைத்துநாணமாட் டி
முல்லைக்கணைதொடுத்து முனைவீரனுமபிம ன்
வில்லையொடித்தான்கர்ண் விரைவாயவனதிரி ல்
நின்றபடைவீரர் நிலைமணித்தேரு ந்
துன்றுதேர்ச்சக்கரமுந் துரகதங்களோர்நான்கு ம்
சாரதிசுமித்திரனுஞ் சதைந்துழுநிந்தழி ய
வீரக்கணைகள்தொட்டு வீழ்த்தினராம்மா னை
வீரகாண்டபஜெய விஜயன்மகனபிம ன்
சாரதிதேர்குதிரை தனிவில்லையுமிழந் து
வையமதில்மாருதி மானமில்லாக்கர்ணமன்ன ன்
செய்தகெடுதியென்று தெரிந்தக்காளபிம ன்
மணிமாமகுடமின்ன மகரகுண்டலஞ்சொலிக் க
அணிசேர்புயமோங்க வக்ஷதைப்பொட்டிலங் க
சிறுநகைகொண்டிலங்கச் சிறந்தமதிவதன ம்
அறுகம்புல்லைப்போன்ற வழகுமீசையடிக் க
ஆலகாலவிஷம்போ லார்ப்பரித்துத்தானிரைந் து
மேலண்டமுங்கிழிய விம்பியோர்மூச்சுவிட் டு
அரைதனிற்கட்டியவா ளாயுதத்தைத்தானுரு வி
விரைவாகக்கைப்பிடித்து விறலிதென்றேசுழன் று
சினவானைப்பாயுஞ் சிங்கக்குட்டியைப்போ ல்

புனலாழிசூழுமிந்த[illegible] பூமிமீதிற்பாய்ந் து
இன்றையப்போர்த[illegible]ல்லா மிறப்பதுண்மையாகுமென் று
வன்திறல்வாளபிமன் [illegible]தித்துமிகக்களித் து
கைதனிற்கேடயமுந் [illegible]த்தவாளுமிலங் க
வையத்தரசரெல்[illegible]ழுந்தோ ட
மண்டியிட்டார்ப்பரி[illegible] வாள்விஜயனின்றமைந்த ன்
ஒண்டியாயல்விட்டி[illegible]லாவினன்காணம்மா னை
சாற்றுமிந்தப்படியே கடந்தேர்முதல்யாவு ந்
தோற்றந்தளாபிமன் சோம்பிநிற்குஞ்செய லை
வண்டன்சுயோதனன்றன் வாம்படைவீரரெலா ங்
கண்டினிமேல்நமக்குக் கவலையென்பதொன்றுமில் லை
செல்லாதிவனுடைய சிலம்பங்கம்பாவினிமே ல்
வல்லமைவீரர்களே வாரும்வாருங்களென் று
கடலின்பெருக்கமெனக் கலந்துமனமகிழ்ந் து
இடவாளபிமனெதிர் சென்றெதிர்த்தாரப்பொழு து
ஊர்துரோணாந்த வபிமன்னனைப்பார்த் து
வையம்புகழுமிந்த வாள்விஜயன்புத்திர னை
எப்படியாம்ஜெயிப்போ மென்றேங்கியுள்ளுடைந் து
முப்படியும்புகழு முனையபிமன்றன்மீ து
தேவதாஸ்திரமெடுத்துச் சிலையிற்றொடுத்துவிட்டா ர்
மாவல்லவனதனை வச்சிரவாள்கொண்டறுத் து
சொல்லரும்கீர்த்திபெற்ற துரோணர்தேரிற்பாய்ந் து
வில்லையவர்தேரை வேகக்குதிரைக ளை
சாரதியையும்போக்கித் தகைசேர்ந்தப்படை யை
வீரவாளாயுதத்தால் வெட்டித்துணிந்தாங்கா ன்
வல்லதுரோணர்பின்று மணித்தேரிலேறிவந் து
வில்வளைத்துநாணேற்றி விஜயன்மகனபிம ன்
புரதகனக்கடவுள் போலநிற்பவன்மீ து
புரதகனஸ்திரத்தைப் பூட்டிவிட்டாரப்பாண ம்
வாசாமகோசரமாய் வருகுஞ்செயலத னை
ராஜாதிராஜர்தொழும் ராஜவிஜயன்மக ன்
கண்டந்தவாளிகளைக் கண்டதுண்டமாய்த்தறித் து
அண்டமுகடிடிய வஞ்சுடகிரிசித ற

பாய்ந்துசிலைக்குருதேர் பரிசாரதியிவைகள்
மாய்ந்தழியும்படியே மாட்டியேயோட்டிவிட்டான்
மற்றுமொருதேரில் வலியதுரோணமுனி
வெற்றியுடனேறி விரைந்தோடிவந்திருந்தார்
இப்படியாகவேதா னெழில்சேர்துரோணமுனி
செப்பும்பலதடவை திரும்பித்திரும்பிவந்தார்
வந்தசிலைக்குருவை வாளபிமன்பார்த்[illegible]ரப்பான்
விந்தைதமனுநூ லுணர்ந்த விற்குருவேதியரே
உமக்குத்தெரிந்திருக்கு முபாயமிதுதானே
சமர்க்கிளைத்தோடுவதுந் தானேவருவதுவும்
இந்தப்படியேநீ ரின்னமெத்தனைதடவை
வந்துசமர்தொடுப்பீர் மறுவேளையில்லாமல்
வெட்கமுமக்கிலையோ விற்றுவிட்டீரோவதனை
மக்கள்தனிலுமைப்போல் மானமதையிழந்து
உயிர்வைத்திருப்பவர்க ளொருவருமிங்கிலையே
தயிரியசாலியென்று சண்டைக்கேன்வந்தீர்காண்
இந்தப்படிகளத்தி லெத்தனைபேரோமடிந்தார்
அந்தப்படிநீரு மையோபெரியவரே
மடிந்திடக்கூடாதா வணங்காமுடியுடைய
குடிகேடன்தேர்குதிரை கொடும்போர்புரிபடைகள்
எதுக்குபாக்கியின்ன மிருக்குததையுந்நொடிப்
போதுக்குள்த்தீர்த்துவிட்டுப் போவோமெனவோவந்தீர்
தனுவேதத்திற்சிறந்த சற்குருநீர்தானே
அனைவருங்கொண்டாடு மருச்சுனராஜனென்போன்
சற்குருவேயும்மிடத்திற் குணுதனுவேதங்
கற்பனையாகவேதான் கற்றறிந்தானென்றுரைத்தி
சினந்தூச்சிலைக்குருதன் தேர்குதிரையைத்துணித்தான்
வினைப்பயனீதெனவே வெறுங்கையுடனேடி
பின்னுமொருதேரிலந்தப் பெரியவரேறிவந்து
மன்னுஞ்சிறுகுழந்தை வாளபிமன்றன்மீது
பண்ணவர்களுமதிக்கப் பகலோன்கணைதொடுத்துக்
கண்ணன்மருமகன்றன் கைவாளைப்போக்கிவிட்டார்
அடுத்துநின்றகர்ணனந்த வபிமன்னன்றன்மீது

கிடத்தவாயுக்கணையைச் சிலையிற்றொடுத்துவிட் டு
கற்காலப்பிளந்துவந்த கன்னன்மருமகன்கை ப்
பொற்கேடயமதனைப் போக்கிவிட்டானம்மா னே

{ அபிமன்னன் எதிசக்கரமந்திரத்தை யுச்சரித்து யுத்தஞ்செய்தல். }

உறங்கைக்வாள்கேடயமா றுபயமிரண்டிந்தோற் று
வெறுங்கையுடனேநிற்கும் விஜயன்மகன்மீ து
எல்லவருஞ்சேர்ந்தங் கெதிர்த்துச்சிலைவளைத்து ச்
சொல்லொணுவாளிகளைச் சொரிந்தார்காப்பொழு து
அடங்காதவீரசிம்ம மபிமன்னராஜனென்போ ன
படக்காட்டரவினிற்கண படமாலெனுமாய ன்
சக்ராஞ்சூழ்புவியிற் றனக்குபதேசித்தயெ தி
சக்ரமந்திரத்தைச் சந்தியிலுச்சரித் து
வற்றாப்பரித்தாகிற்கும் வலியபோர்வீரரெலா ரு
செந்தாமரைமலர்கள் திகழ்போர்மடுப்போலு ம்
அருந்துதியோங்குமந்த வபிமன்னராஜது ரா
பொருந்துமந்தமாமடுவிற் புகுந்துகலக்குமின் ற
மதகுஞ்சரம்போலும் வணங்காமுடிவேந்த ன்
புதுமைப்படையினுள்ளே புகுந்துகலக்கும்பொழு
மாண்டதனேகங்கோடி மதயானைகள்வானை த்
தாண்டும்பரிகளெலாஞ் சதைந்துமடிந்ததுகா ண
படைவேந்தர்கள்கோடி படையிழந்துகொண்டார்க ள்
உடைந்ததனேகங்கோடி யுயர்மாமணித்தேர்க ள்
இனித்தாளோமென் றசம சிறந்தோடினார்கள்சில ர்
அனியாயமாயிதனை யாரிடஞ்சொல்வோமென வே
கலங்கினின்றார்கள்சிலர் கைகுவித்தார்கள்சில ர்
பலங்குறைந்தார்களிந்தப் படியாகவேயபிம ன்
கூட்டப்படைகளெலாங் கொசுகாய்ப்பறந்தோ ட
வாட்டுஞ்செயலதனை வலியதுரோணமு னி
கன்னன்முதல்யாவர்களுங் கண்டுமதிமயங் கி
என்னமாயாவினிமே லிவனைஜெயிப்போமென் றே
உலைவாய்மெழுகதுபோ லுடைந்துமனமிடைந் து

சிலைவிஜயனீன்றெடுத்த செல்வனபிமன்னனெதி ர்
கந்துவனைத்தெதிர்த்து மலைமீதுபெய்மழைபோ ம்
லொத்தமல்வாளிகளைக் கும்புகும்பாகத்தொடுத் து
இனிபுகழ்விஜய னீன்றவபிமன்னனந்த ட்
புனிதன்கைச்சக்கரத்தைப் போக்கிவிட்டானம்மா லோ
போர்ச்சிங்கமாம்விஜயன் புத்திரன்கையிலும் ற
தேர்ச்சக்கரத்தையுமே சிதைத்தவுடனபிம ன
சத்ருக்கலங்காமல்த் தயிரியமும்நீங்காம ல்
வெற்றிமிகுங்கைதனிலே வெங்கதையைத்தானேந் இ
காரிடிபோலார்ப்பரித்துக் கனீரென்றுதானைகைத் த
பாரிடிந்துவீழ்ந்தொடுங்கும் படியாகவேதா வி
மண்டலங்கோணம் வட்டமொதுங்கல்பதுங்க ல்
விண்டாவல்மேவலெனும் வியன்சாகசங்காட் டி
மறிபாட்டுக்கூட்டமதில் வந்துபுகும்புலிபோ ற்
செறிந்தபடையினுள்ளே இடவாளபிமனென்போ ன
புகுந்தங்கவருயிரைப் போக்குந்தருணமதி ல்
மிகுந்தகோபத்துடனே வெற்றியசுவத்தா மா
விரைந்தோடிவந்தபிமன் மீதெண்ணிலாக்கணைக ன்
சொரிந்தானந்தக்கணையைத் தூற்றிப்பொடிபடுத் இ
[illegible]த்தாமாவின் றேர்குதிரைசாரதி யை
மறுவிலாக்கதையால் மாட்டியுடல்வாட்டிவிட் டு
சகாயஞ்செய்வோர்களின்றித் தனக்குநேரிட்ட[illegible]கு ம்
அகாலசமயமதை யருச்சுனராஜனுக் கு
தெரிவிக்கவேணுமென்று சிந்தைதனிலெண்ணித் து
அரியபுகழோர்க்கு மபிமன்னராஜசிங்க ம்
வெண்சங்கத்தையெடுத்து விண்ணுமண்ணுமதிர ட்
பண்புடனேவாயில்வைத்துப் பம்பாமென்றூதினன்கா ன்
சஞ்சத்தகாருடனே சமராடுங்காண்டீப ன்
மிஞ்சுமணித்தேரின் மீதிருக்குஞ்சாரதியா ம்
மாயனதையறிந்து வாரபிமன்சங்கத்தொ னி
தேயமெங்கும்புகழுஞ் சிலைவிஜயன்றன்காதி ல்
விழாமல்மறைத்துவிட வேணுமென்றெண்ணி து
துழாய்மாலிகோபாலனன் சொன்னதுயுகவும்பால ன்

பக்கமிருந்தமது பாஞ்சன்னியசங்கமதை ப்
புத்திமகிழ்ந்தெடுத்துப் பொம்பொம்மென்றூதினன்கா ண
சங்கமெடுத்தூதித் தக்கபுகழபிம ன்
சங்கத்தொனியதனைத் தாமோதரன்மறைக் க
காண்டீபனச்சமயங் கண்ணன் முகம்நோக் கி
ஆண்டவனேயிவ்விடத்தில் யாதோரதிசயமு ம்
இல்லாதிருக்கயினி லெம்பெருமானேதாங்க ள்
சல்லாபமாகவேதான் சங்குமுழக்கியதோ ர்
காரணமென்னவென்று காண்டீபன்றான்கேட்க் க
வாரணத்தையாண்டபிரான் வாள்விஜயனைப்பார்த் து
விஜயகாண்டீபஜெய வேந்தர்குலமுத லே
புஜபல்வீரனேநின் போர்த்திறமையைப்பார்த் து
தன்னையறியாமலிரு சந்தோஷமுண்டாகி த்
தன்னைமறந்தினிதாய்ச் சங்குமுழக்கிவிட்டே ன்
என்றந்தமாயவனு மிசைத்துமணித்தே ரை
வென்றியெதிரிகளின் மீதிற்செலுத்துதல்போ ல்
கடகடவென்றேமின்னுஞ் சத்துருக்கப்பா ற்
திடத்தோதனைக்கொண்டு சென்றார்காணம்மா னே

## அபிமன்னனுக்கும் துச்சனிக்கும்யுத்தம்.

இந்தப்படியேதானிவர்களிங்கேயிருக்க க்
கந்தமலர்த்தாரான் கானையபிமன்னன்போ ன்
சதிராய்முழக்கியதன் சங்குத்தொனிதனக்கு ப்
பதிலாகவேமாயன் பாஞ்சன்னியசங்கம தை
மூவுலகுக்காணதிர முழக்கியசங்கொலி யை
ஆவலுடனேகேட் டார்களும்மாமனும்வி ண்
தருவிந்திரன்மதலை கர்த்தயருச்சுனனும் ம்
வருகின்றானென்றபிமன் மனதுமகிழ்ந்ததி க
தயிரியமுண்டாகிச் சதுரக்கொடிவேந்த ன
வயப்படைவீரர்களை மாய்த்துசாய்க்கும்பொழு து
துரியோதனன்பார்த்துச் சோம்பிமுகங்கரு கி
சரிசரியேயினிநாம் தலையெடுக்கப்போமதில் லை
சிரிப்போர்க்கிடமாகச் செய்துவிட்டோமென்றூரு கி
கருப்பாம்பெரும்நெருப்பைக் கட்டியிருந்தாள்வயிற்றி ல்

எவ்விதந்திரத்தா லிவனைசெயிப்பதென் ரு
அவ்விடத்தைவிட்டகன்றே யப்பாலேபோயிருந் து
அங்கதேசாதிபனு மாசான்துரோணரு மே
தங்கள்தங்கள்கருத்தாற் றுன்யோசித்தேங்கினார்க ள்
அச்சமயத்திலந்த வபிமன்னனுக்கெதி ரே
துச்சனியென்போனதிக துரிதமுடனேவந் து
வரிவில்தனைவளைத்து வாளபிமன்றன்மீ து
பிரமசரமுதலாம் பேதக்கணைகள்த னை
பூட்டிவிட்டானதனைப் பொடிபொடியாக்கத்தரித்து த்
தாட்டிகனான துச்சா தனன்மகன் றுச்சனிமு ன்
குடுகுடெனவேயோடி குன்றத்தேரிற்பாய்ந் து
கடுகடுப்பாயபிமன் கைக்கதையினாற்றுக் கி
அச்சாணியாப்பாணி யற்புதவஞ்சூரா ணி
உச்சிதச்சக்கரமு முடைந்துசிதறிட வே
கொடிஞ்சிகுடைகொடிகள் குந்தாக்கால்பொற்சிகர ங்
இடங்கொண்டிலவுபரி தேர்ச்சாரதிமுதலா ம்
துச்சனிபொற்கவசந் துவசமணிமுடியு ம்
அச்சழிந்திச்சகமீ தழியும்படியடித்தா ன்
தேர்பரிசாரதிசெஞ் சிலைமுதல்யாவையு மே
போர்விஜயனீன்றெடுத்த புத்திரன்போக்கினி ட
கண்டத்துச்சனியுங் கதையைக்கையிற்பிடித் து
வண்டர்தமையொடுக்கும் வாளபிமனையெதிர்த் து
தேட்டமுடன்முனைந்த சிரபிமனேவா டா
காட்டடாநின்சமர்த்தைக் கசடாவெனவுரைத் து
படபடத்துத்துடித்துப் பல்லைக்கடித்துருமி த்
திடவாளபிமனெதிர் சென்றெதிர்த்தானப்பொழு து
உகாந்தகாலாக்கினிபோ லோங்கியபிமனு மே
மகாபலதுச்சனிமுன் வந்தெதிர்த்தானிந்தவித ம்
அரியோதனன்றம்பி துச்சாதனன்மகனு ம்
அரியதருமர்தம்பி யருச்சுனன்றன்மகனு ம்
அண்டச்சுவரிடிய வஷ்டநாகஞ்சிதை ய
மண்டலமெண்டிசையு மயங்கிப்பிதிர்கலங் க
சந்திரசூரியர்கள் தன்னிலைவிட்டுப்பெய ர

அந்தவந்தரங்குலுங்க வண்டரும்பயங்கொதுக் க
உரகன்முடியொடுங்க வுடுவினமெலாமுதி ர
திரைகடலேழுங்கலங்கத் திக்குத்திகைமா ற
காலுடன்கால்கள்பின்னக் கைகளுடன்கைசே ர
மேலுடன்மேலுரச விறுவிறெனவேசமுன் று
ஒருவர்தனையொருவ ரோங்குகதையாலடிக் க
ஒருவரடித்திடும்போதொருவரதைத்தடுக் க
மகுடமுடிசிதற வாகுவலயமுதிர த்
தகைசேரும்வீரகண்டை சப்தஞ்செவிபுடைக் க
மலையும்பருவதமும் வந்துபொருதியபோ ஸ்
நிலைகள்தவறாமல் நிறுபரிருவர்களு ம்
ஒருமுகூர்த்தம்வரையி லுயுத்தஞ்செய்யும்பொழு அ
மருவுயர்துச்சனிதன் மணித்தோளொடிந்திடவு ம்
குடல்கள்சரிந்திடவுங் கூர்நரம்பற்றிடவு ம்
மொடுமெடெனவென்பனைத்து முறிந்திடவுமேயபிம ன்
கதையாலடித்தான்காண கனைத்துமனபிளைத் து
பதைபதைத்துள்ளுருகிப் பட்டமரம்போல்விழுந்தா ன்
விழுந்தவனெழுந்து விஜயன்மகன்றேக ம்
அழுந்தும்படிகதையா லடித்தான்காணிச்சவித ம்
ஒருவர்க்கொருவ ருயர்தாழ்விலாதெதிர்த் து
இருவர்தேகங்களுமே யிளம்பஞ்சபோலக்கசங் க
சாற்றுங்கதாயுத்த சாஸ்திரத்தின்படி யே
தோற்றல்கெலித்தலின்றித் தோன்றவிருவர்களு ம்
மலையாமல்போர்புரிந்து வருகுஞ்சமயமதி ல்
அலையேந்தும்வாரிதிசூழ வணிமுடிவேந்தர்களு ம்
தேவர்முதல்யாவர்களுஞ் சிலைவிஜயன்புத்திரன்செ ய்
மேவுஞ்சமர்த்திறத்தின் விந்தையதனைப்பார்த் து
துதித்துப்புகழ்ந்தார்கள் தோன்றலபிமன்னவ னை
கதித்தபருந்துகளுங் கழுகுப்சாதினமு ம்
தங்கள்வயிர்நிறையத் தருமாமிசங்கொடுத் த
மங்களஞ்சேருமந்த வாளபிமனைக்கரு தி
மண்டும்ரணகளத்தில் மணப்பந்தலிட்டினிதாய் க்
கொண்டாடியானந்தக் கூத்தாடிப்பாடினதா ம்

சிரங்களுமட்ட இனித்தகவந்தமெல்லா ம்
உரங்கொண்டெழும்பிவிளைபோ லெபாங்கியிருந்ததுகா ண்
ஆயுதங்களின்வேக மடங்காமலேயெழும் பி
லையுவிண்மண்டலம்போய் வந்துவிழுந்ததுகா ண
உதிரவெள்ளம்பெருகி யோடியிலுழ்மி ப்
பதிவேந்தருங்கோடி படைவீரருமடிந்தா ர்
ஆங்கிரத்தச்சுழியா லனைகங்கரிபரிக ள
செவ்வியதேர்களுமே சிதைந்துமடிந்ததுகா ண்
இப்படியாகவேதா னிலங்குமந்தப்போர்க்களத்தி ல்
எப்படியும்போர்புரமக்க விருவருங்கைகலந் த
மல்லிகைப்பூப்போன்ற வலியதேகங்கள்நொந் து
புல்லியாத்தம் புடைப்பட்டோமெப்படியா ய்
போர்புரிந்தார்களந்தப் பொழுதிலபிமன்பி கு
வீர்கொண்டுதுச்சளிதன் மீதோரடியடித்தா ன்
அந்தக்கதையாலயா லங்கமதுசதைக் கு
வந்துபோலேதிரளப் பார்புகழ்துச்சளித ன
உயிர்விண்ணுலகுசேற வுடல்மண்ணுலகில்வி ழ
அயர்ந்துதன்னைத்தான்மறந்தே படுக்கிவிட்டானம்மா னை

## அபிமன்னன்வதை.

துச்சளிவிழுந்ததின் னிருவருமகருமவாளுமது ம்
மெச்சுபுகழபிமன்மெய்சோர்ந்துகைசேர்ந் து
மதிமயங்கித்தயங்கிவாடி நிற்குமப்பொழு து
ஒதுங்கிப்பதுங்கியங்கே யுற்றசெயிந்திரத ன்
கொரதண்டமெனுமோர் திறல்சேர்கதாயுதத்தா ல்
மகரமச்சம்போன்ற வபிமன்னனைக்கொண்றுன்கா ண
தாகவிடாயாலே தண்ணீர்குடிப்பதற்கு ச்
சோகமுடனேயொரு சுனைப்பெண்டியாயிறய் சி
வனைக்மோசத்தால்வூழ்த்தி மயங்கிநிற்கும்பாலைதனை த்
தகைகைமேசேர்வேடர்பலர் தடித்துவளைத்துகின் று
கொண்டுசெய்திவெதைப்போலக் குருவைநாயகனி யை
வில்விலாத்தினைத்தை மேவலர்கள்சிங்கே றை
மருந்மாத்தைகயந்து மாயன்மருமகனை க்

கருணுஞ்ஜெயவிஜய காண்டீபன்புத்திர னை
வானவர்கோனிந்திரற்கு வாய்த்தபௌத்திரனை த்
தேனலர்மாலையணி தேசத்தரசர்க ளை
முடித்துக்கருவறுத்த மும்மதகுஞ்சரத் தை
அடுத்தவரையாதரிக்கு மபிமன்னனென்பவ னை
பைம்பொன்மணித்தேரேறிப் பதினாயிரமரச ர்
கும்புரும்பாகக்கூடிக் கொடுங்கைக்கதையாலு ம்
பாலாயெறியீட்டி பகர்வல்லயத்தாலு ம்
வேலாயுதத்தாலும் வெகுநூல்தூரத்திலின் று
மன்னர்முறைகடந்து மனுநீதியைத்தவ றி
மன்னர்புகழுமபி மன்னவனைக்கொன்றார்க ள்
சொல்லுமித்தனைபேருஞ் சூழ்ந்துகொலைபுரி ய
வில்லுக்கருச்சுனன்றேர் வேந்தன்றிருப்புதல்வ ன்
சிவந்தவிழியிரண்டுந் திருமாமதிமுகமு ம்
நவமணிகளாளிழைத்த ரத்னத்திருமுடியு ம்
கதித்தசிறுநகையுங் கமலகுண்டலக்காது ம்
பதித்தமணிவீரப் பட்டம்நெற்றியிற்சொலிக் க
புடவிபுகழபிமன் பூமிபிராட்டியின்ற ன்
மடிமேற்றுயில்பவன்போல் மடிந்தான்காணம்மா னை
துரியோதனவேந்துந் இளைவன்துச்சாதனனு ம்
அரியபுகழோங்கு மரசர்பலபேரு ம்
விண்ணைவிட்டுத்தானழுவி விழுந்தமதிதனைப்போ ல்
மண்ணிற்கிடக்குமந்த வாளபிமனைப்பார்த் து
மாயாவிநோதனனு மாயன்மருகனிவ ன்
வாயுவையுள்ளடக்கி மௌனஞ்சாதித்திருப்பா ன்
நாடியவனிடத்தில் நாம்போவோமாகிலவ ன்
மூடியகண்ணைத்திறந்து மூர்ச்சைதெளிந்தெழுந் து
பின்னும்நாமெல்லவரும் பிழைக்கவொட்டாமலவ ன்
மனனும்புவியில்நமை வதைத்துவிடுவானென்ன வே
இருநாளிகைவரையிலிருந்தஅபிமன்னவன்ற ன்
அருகினிற்செல்லாமலப்பாலிருந்தார்க ள்

### சேனைமுதலிய ராஜாக்கள் சொல்லுதல்.

புகலக்குருச்சேத்திர பூமிதனிலிருக்கு ம்
மகுடமுடிவேந்தரெலாம் வாளபிமன்றனிறந் து

நிலத்திற்கிடப்பதனை நினைத்துநினைத்துருகி க்
கலக்குற்றுப்புலம்பிக் கண்ணீர்சொரிந்தழு து
சருவலோகங்களையுந் தனதுளப்பத்தில்வைத் து
கருணாநிதியெனவே காத்துரக்ஷிக்குமந் த
மாயனபிமனுக்கு மாமனெனவிருந்து ம்
நேயகாலகேய நிவாதகவசர்க ளை
செருத்துப்பகையொழித்துந் தேவேந்திரன்றனக் கு
மகத்துவமாகவேதான் மகுடமுடிசூட் டி
வைத்தஜெயநரனும் வாள்விஜயகாண்டீப ன்
சத்தியவானபிமன் றந்தையெனவிருந்து ம்
தேவரெலாம்வணங்கத் தேவியிந்திராணியுட ன்
மேவுமமலவிந்திர விமானமதிலிருந் து
சதுர்வேதமோதிடவைவந் தருநீழலிலுந்தே வ
பதியையாளிந்திரனும் பாட்டனுக்கிடைத்து ம்
தருமஞ்ஜெயமாகுஞ் சத்தியமேநித்தியமெனு ந்
தருமன்வீமன்பெரிய தந்தையெனவிருந்து ம்
நகுலன்சகாதேவ ராஜரிருவர்களு ம்
தகமையபிமன்சிறிய தந்தையெனவிருந்து ம்
ஒருகோடிராஜபுத்திர ருயிர்க்குதவியாயிருந்து ம்
அரும்புகழோங்குமிந்த வபிமன்னராஜனென்போ ன்
மணமாலைமேவுபுய மண்ணிற்புகழவிந் த
ரணகளத்திலேமடிய ஞாயமோவென்றுரு கு ம்
பேருலகோர்கொண்டாடும் பிரமகுலத்திற்பிறந்து ம்
தேருமனுமுறைமை தெரிந்தவராயிருந்து ம்
விற்குருவாமெனவே மேலாம்புகழ்படைத்து ம்
உற்பவமாகுமதி யூகமதிற்சிறந்து ம்
ஞாயமதைத்தவறி நன்னீதியக்கடந் து
தூயவாஞனவிந்த துரோணமுனியுட னே
கோடையரசர்கள்ளுமே கொடியனசயிந்தவனு ம்
படைவேந்தராங்கொடிய பாவியர்களுஞ்சேர்ந் து
அறியாச்சிறுகுழந்தை யபிமன்னனென்பவ னை
மறைவாகவேயிருந்து வதைசெய்தகாரணத்தா ல்
மெய்யுடனேமுனைந்து வெற்றிபெறுவதற்கு ப்

பொய்யெனுமோரெதிரி புறப்பட்டுவந்துவிட்டான்
நீதியைவெல்லவென்ற நீதியுதித்துவிட்டான்
ஆதலால்நாமினிமீ தரசாகவிங்குத்துறந்த
சிறந்தகாடேகதியாய்ச் செல்வதேதன்மையல்ல
இறந்துவிடுவதுவே யினிமேன்மையென்பாரும்
நந்தல்சேடன்கலங்க நடத்திவந்தவாளபிமன்
சந்திரமணித்தேருடையத் தக்கதோவென்பாரும்
எண்ணிலாவாம்படையை யீடழித்தவோர்குழந்தை
மண்ணிலுதவியின்றி மடிந்ததையோவென்பாரும்
ஒருதேரழிந்தபின்மற் றொருதேரப்போதிருக்கல்
மருவேறும்வாளபிமன் மடிவானோவென்பாரும்
இளமைப்பருவமதற் கிசைந்ததிருவுருவம்
களங்கமில்லாதாய்ந்து கற்றகல்வித்திறமும்
எதிர்த்தோரைச்சங்கரிக்கு மியல்பாமுதலான
அதிஷ்டமெழுதிலைவீறுயுளதிகமாக
அலர்ந்தமலர்த்தாரா னபிமன்னராஜனுக்கு
மலர்வேதனன்றெழுத மறந்தானோவென்பாரும்
ஆனைகளெத்தனைகோடி யசுவங்களெத்தனைகோடி
சேனைகளெத்தனைகோடி தேர்தானெத்தனைகோடி
கொடிகளெத்தனைகோடி குடைகளெத்தனைகோடி
வடிவாளெத்தனைகோடி வரிவில்லெத்தனைகோடி
பழுதிலாக்கீர்த்திபெற்ற பாலனிவன்கையாலே
அழிந்துமுறிந்துமுயி ரடங்கினதாமென்பாரும்
எத்தனையோதடவை யித்தத்துரோணர்தனை
உத்தமனுமபிம னோட்டிவிட்டானென்பாரும்
ஒருவர்க்கொருவர் முனைந்துயுத்தம்புரிவதென
இருகுலத்துளேமுறைமை யேற்பட்டிருக்கவதைக்
கடந்திந்தப்பாலகனைக் கணக்கிலாப்போர்வேந்தர்
அடர்ந்துநின்றேவதைத்த தவியாயமென்பாரும்
சவ்வியசாசிமகன் றனையபிமனைக்குறித்து
இவ்விதமாயவர்க ளேங்கினர்காணம்மானை
எற்றபுகழபிம னிறந்ததிறவாததுமே
தோற்றுமலஞ்சிவெகு தூரம்விலகினின்ற

சற்பக்கொடியோனுந் தம்பி துச்சாதனனு ம்
பற்பலவேந்தர்களும் பாலனிறந்தானென வே
சந்தேகங்கள் தீர்ந்து சகலபுவிவேந்தர்களு ம்
வந்தேகமாய்க்கூடி வாளபிமனைப்பார்த் து
செத்தானபிமனென்று ஜெயித்தோஞ்ஜெயித்தோமென க்
கைத்தாளங்கள்போட்டுக் களித்திருந்தாரம்மா ணை

## தருமராஜன் புலம்பல்.

இந்தவிதமிவிட மிவர்கள்மகிழ்ந்திருக் க
சிந்துதேசத்தரசன் செயித்திரதன்கைக்கதையா ல்
அருமைத்திருப்புதல்வ னபிமன்னராஜனென்போ ன்
மரணமானனெனவே வந்தசிலதூதுவரா ல்
ஞானம்பொறுமை நல்லொழுக்கமுமேன் மை
தானுந்தவழுமுயர் தருமமகாராஜ ன்
காதில்காரசமதைக்காய்ச்சியேவிட்டதைப்போல் த்
தீதுறவேகேட்டுத் தெய்வமேயென்றல றி
பூமிதனில்வீழ்ந்து புரண்டுருண்டேயெழுந் து
மாமதகுஞ்சரமே மன்னரணிபூஷண மே
என்னுடலேயென்னுயிரோ யென்னிருகண்ணின்மணி யே
தன்னிகரிலாப்புகழ்சேர் தனஞ்சயன்பாக்கிய மே
ஐயாவபிமன்னு வழகுமதிவத னு
பொய்யாதவாசகனே புத்திசிகாமணி யே
பாரிலுனைக்கொண்டிந்தப் பகைவர்தமைப்போக் கி
தாரணியையாள்வோமென்று தயிரியமாகவேதா ன்
எண்ணியிருந்தேனென் னெண்ணத்தில்வாய்தனி லே
மண்ணையள்ளிப்போட்டுவிட்டு மடிந்தாயேகண்மணி யே
தேக்கிருக்குந்தார்மார்பன் சிலைவிஜயன்றானிருக் க
காணிருக்கமல்விமன் நகுலசகதேவ ன்
எனுமிருவர்களு மிருக்கவுலகளந்தோ ன
நன்னயமாகவென்றும் நமதுபட்சமிருக் க
ஆர்க்குமடங்காத வருமைத்திருமுத லே
போர்க்களத்தில்மடியப் பொருந்துமோவுத்தம னே
சொல்லெலாமமுதரசஞ் சொரிகின்றவாசக னே
கல்லெலாமாணிக்கக் கல்லாமோவெள்ப தூபோ ல

எத்தனைகோடி பிள்ளை யிருந்தாலுஞ்சீர்சிறந் த
உத்தமனேயென்னபல னெக்குநிகராவர்க ளோ
பகைவர்தமைப்போக்கிப் பார்புகழத்தங்களுக் கு
மகுடமுடிசூட்டி வைக்கின்றேனென்றசொன் ன
சொல்லுமறந்தாயோ துரையேயிறையேயெ ன்
செல்வமேபஞ்சவர்கள் தேடுந்திரவிய மே
உன்றந்தைசெய்த வுத்தரவின்படி யே
என்றனைநீகாத்திங் கிருந்தவுனைநோக் கி
நீபோய்ப்பொருதிவெற்றி நிலைநாட்டுவாயென வே
மாபாவியானுரைத்த வார்த்தைதனைமீறும ல்
அப்பனேநீபோ யவர்களமைத்திருக் க
செப்பரும்யூகங்களனைத்தச் சின்னாபின்னப்படுத் தி
மற்றுமெதிர்த்தவரை வானுலகேற்றிவிட் டு
வெற்றியடைந்தவுந்தன் வீரப்பிரதாபம னைத
ஐயாவெளியிட லாகாதென்றெண்ணியோ நீ
மெய்யாகவேயிறந்து விண்ணுலகத்தைச்சேர்ந்தா ய்
மைந்தனபிமன்னன் மடிந்தானெக்கேட்டா ல்
உந்துபுகழ்விஜய னுயிர்வைத்திருப்பா னோ
ஐயோநானென்னசெய்வே னபிமன்னுவென்றுரு கி
பொய்யறியாத்தருமன் புலம்பினான்காணம்மா னே

### வீமன் நகுலன் சகாதேவன் இவர்கள்புலம்பல்.

நலஞ்சேர்கதைவீம னகுலன் சகாதேவ ன்
வல்லரக்கழவர்களும் வாளபிமன்றனிறந் த
செய்திதனைக்கேட்டுத் திடுக்கிட்டுக்கீழ் வீழ்ந் து
மெய்பதறிக்கதறி விண்ணெனுங்கவேயழு து
எம்மாசேயெம்முதலே யெம்மாருயிர்த்துணை யே
மும்மண்டலத்தாரு முடிதாழ்பதம்புய னே
சற்குணனேநீபெரிய தந்தைதருமமன்ன ன்
சொற்கடவாமலேபோய்த் துரோணரமைத்திருந் த
சக்ராயூகமுடன் றகுந்தசிகாயூக ம்
செய்க்குயிரண்டதையும் வித்தகனேநீயுடைத் து
மருவுபத்மயூகமதின் மத்தியிலேநீயிருந் து

அரும்போரதுபுரியு மந்தச்சமயமதி ல்
யாவுமுனக்குதவி யாகவந்துசேர்வோமென் று
தானைத்தவாம்படையைச் சதைந்துவரும்பொழு து
சிந்துதேசத்தரசன் செய்ததவத்தாலீச ன்
தந்தவரத்தின்செயலால்ச் சமர்தொடுத்தென்னுடை ய
மதியைமயக்கியென்னை வகைமோசஞ்செய்ததிரு ல்
கிரியேகுணக்கடலே நின்னிடத்தில்யான்வரு க
மார்க்கமில்லாமலேயோ வந்துவிட்டேன்றிரும் பி
பார்க்குள்நீயிந்தப் படிமாள்வாயென்றெமக் கு
முன்னேதெரிந்திருந்தால் மும்மூர்த்தியுமுனைங் து
என்னோடெதிர்த்தாலு மெளிதிலவரைப்போக் கி
விற்குருவாலமைந்த வெற்றியூகங்களு மே
அற்பமாகச்சிதைந்தே யழியும்படிசிதைத் து
உள்ளேநுழைந்துவந்தங் குனக்குதவியாவே னே
தெள்ளமுதேபாகேயென் செல்வத்திரவிய மே
மைந்தனபிமன்னன் மாண்டானெனக்கேட் ட
எந்தனிருசெவிக ளின்னமொருவர்வந் து
மன்றல்மிகுந்தார்மார்பன் மறுபடியும்பிழைத்தா ன்
என்றுரைக்கக்கேட்கா தோவென்னிருகண்மணி யே
மண்ணும்விண்ணுமுள்ளளவு மறையாதகீர்த்திபெற் ற
புண்ணியனேயென்றுருகிப் புலம்பினர்காணம்மா னை
விரைசேரும்வாளபிமன் வீரமேவீரமென் று
இருதரத்தார்படையு மிசைந்துப்புலம்பினர்க ள்
மதியாலுயரபிமன் மாண்டதையாய்ந்துருகி க்
கதிரோன்குடதிசையைக் கண்டுமறைந்தான்கா ண்
அந்தச்சமயத்தி லரவக்கொடிவேந்த ன்
சிந்துதேசத்தரசன் செயித்திரதன்றனைக் கு
எதிர்போய்த்தழுவியும்மா லின்றிங்குயாம்பிழைத்தோ ம்
ததியறிந்தெங்களுக்குத் தக்கவுதவிசெய்தீ ர்
என்றவனைப்பலவா றினிதாகவேபுகழ்ந் தா
தன்றனையனாதுச்சா தனன்பிள்ளையுந்தன து
மதலையிலக்கணகு மாரன்முதலா னை
பதிவேந்தர்புத்திரர்கள் பதினாயிரம்பேரு ம்

மாய்ந்தகவலேதனை மனதிலிருத்தாம ல்
ஆய்ந்தமதிநுக ஹரிமன்னன்றுனிநா த
மகிழ்ச்சியினுற்றனது மணித்தோள்பூரித்திடவு ம்
புகழ்ச்சிமிகுந்தேகம் பூரித்திடவுமங் ந
விற்குருவானவரும் விரிந்தபுகழ்க்கர்ணனு மே
மற்பலவேந்தர்களும் படைவீரரும்நெருங் க
மங்களவாத்தியங்கள் வானோர்செவிபுடைக் க
பொங்கமுடன்பாசறைக்குப் போய்ச்சேர்ந்தானம்மா னே
தடக்கடல்சூழ்புவியாள் தருமருந்தம்பியரு ம்
படைவேந்தருந்தமது பாசறைபோய்ச்சேர்ந் து
வரைபோன்றதிண்புயத்தான் வாளரிமனைக்குறுந்த க்
கரைந்துகரைந்துருகிக் கலங்கிஞரப்பொழு து
விராடபுரத்தைப்புரக்கும் வேந்தன்முதலா ன
தாரதலமன்னர்களுஞ்சந்திரனைச்சூழ்ந்திருக்கு ம்
தாராகணம்போலே தருமர்தனைச்சூழ்ந் து
சிராயுபகரித்துத் தேற்றியுந்தேறும ல்

## வேதவியாசர்வந்து தருமரைத்தேற்றுதல்.

கவலையடைந்துமனங் கலங்குமந்தச்சமய ம்
சிவந்தசடைமுடியுஞ் செங்காவிப்பட்டுடையு ம்
காலிற்பாதக்குறடுங் கதிரைமறைக்குங்குடையு ம்
சாலமரவுரியுந் தண்டுகமண்டலமு ம்
செப்புருங்குண்டலமுந் திருநீற்றின்ரேகைகளு ம்
முப்புரிநூல்வடமு முன்மார்பிணிற்றிக ழ
வேதவியாசமுனி விரைவிலவிடம்வந்தா ர்
மாதவமாமுனிவர்வேர்வையவரதிந் று
எதிர்பேரயழைத்துவந்தங் கிசையாசனத்திருத்தி ப்
புதியமலர்தூவிப் போற்றிநின்றார்கள்நிற்கு ம்
மன்னர்தமையாசீர் வதித்துக்கிருபையுட ன்
தன்னேருமேகிநிற்குமந்தத் தருமர்தனைநோக் கி
முரசக்கொடிவேந்தே முக்கோட்டமேதுமக் கு
விரைவிலுரையுமென வியாசமுனிகேள்க் க
வேந்தகுலமுதலே வேர்தாந்தப்பொக்கிஷ மே

மாதவமாமணியே மன்னரணிபூஷணை மே
அடியேனுயிர்க்குதவி யானவபிமன்னனென்போ ன்
மடிந்தானெனவுரைக்கும் வார்த்தைதமுடியுமுன் னே
சோர்ந்தான்மடிமீது சூழ்ந்தங்கிருந்தவர்க ள்
தேர்வேந்தனையெடுத்துத் தெளிவித்தார்சோபம தை
மற்றுங்கவலையுறு மாதருமமன்னவ னே
நற்றவவியாசமுனி காதன்பார்த்தேதுரைப்பா ர்
சொல்லாலுயர்தரும துரையேயிறையோ ர்
எல்லாந்தெரிந்திருந்து மேதுமறியாதவர்போ ல்
கன்றிமனமுருகிக் கவலைப்படலா மோ
அன்றெழுதாம்வேதனதை யழித்தெழுதத்தக்கதுன் டோ
ஆறுமுகன்பிள்ளை யபிமன்னராஜனென்போ ன்
வானாட்டாருமதிக்க வணங்காமுடிவேந்த ன்
நால்வகைச்சேனையெனும் நஞ்சைநிலமத னை
வேல்வாளுக்கையுடனே விற்கலப்பைகொண்டுழு து
உயிராம்விதைபரவி யுதிரமெனுந்நீர்பாய்ச் சி
சயவாகங்காரக் களையகளைந்தெடுத் து
வெற்றிப்பயிர்விளைத்து வெம்பிணப்போரேற் றி
மற்றேமனுக்குமேல் வாரங்கொடுத்துமக் கு
நீங்காதகீர்த்தியெனும் நிலவாரத்தைக்கொடுத்து த்
தூங்காமல்தூக்குமந்தச் சொர்க்கபதமடைந் து
அண்டமழிந்தாலு மழியாதகீர்த்தித னை
மண்டலம்போற்றுமுங்கள் வாளபிமன்றான்படைத்தா ன்
அபிமன்னன்பெற்றபுகழ் யார்பெற்றார்பூவுலகி ல்
தபோபலத்தாலுயர்ந்த தருமமுடிவேந் தே
மலர்வாழயன்படைப்பில் மடியாமல்யாரிருந்தா ர்
தலமேழும்போற்றுசிபி சக்கிரவர்த்தியேன்மடிந்தா ன்
மனுவிறந்தார்மாந்தாதார் மாந்தினார்கயனிறந்தா ன்
புனிதவெஞ்சிலைராமன் பொன்றினார்ப்பரிசு ன்
மாய்ந்தான்திலீபனொடு மருத்துமன்பகீரதனு ம்
வேய்ந்தபுகழ்பரத வேந்தனுந்துஞ்சிவிட்டா ன்
காஞ்சினுரென்றவர்கள் ஆறப்பட்டாரல து
எஞ்சினுரிவ்வுலகத் தில்லைமுடிவேந் தே

ஆண்டாண்டுதோரு மழுதுபுரண்டாலு ம்
மாண்டாரினிப்பிழைத்து வருவாரோவென்பதுபோ ல்
போனவுயிர்மீளப் போரதில்லைநீர்வீணி ல்
ஏனுவலிக்க விசைத்துப்புலம்புகின்றீ ர்
படிமீதினிவிசனப் படவேண்டாமென்றுரைத் து
விடைபெற்றுச்சென்றார்காண் வேதமுனிசென்றதின்பி ன்
மைத்துனனென்னுமெந்த மாயவனுந்தனக் கு
மெய்த்துணைவனை விஜயப்பெருமானு ம்
இனிவருவாரேயவர்க் கென்னசொல்வோமென்றுரு கி
இனியபுகழ்தருமனிருந்தான்காணம்மா லை

{அருச்சுனராஜன் சஞ்சத்தகாளுடன் சண்டை
செய்து திரும்புதல்.}

வஞ்சமறியாத்தரும மன்னவனிவ்வாறிருக் க
சஞ்சத்தகாளுடனே சமராடிப்போர்விஜய ன்
துன்றுமணிமுடியான் துரியோதனன்படையை த்
தென்றிசைக்கேத்திவிட்டு ஜெயசங்கந்தான்முழக் கி
போர்க்களத்தினில்நடந்த புதுமையின்னதென்றறி யா
கீர்த்திப்பிரதாப கிரீடியெனும்விஜய ன்
தாங்களிருந்தவிடந் தன்னைவிட்டுப்பெயர்ந் து
பாங்குலவுந்தமது பாசறைக்குப்போவதற் கு
தேரைத்திருப்புமெனச் சிலைவிஜயன்றானுரைக் க
காரையளந்தகண்ணன் கழித்தகருப்பமுக ர்
மேலைவனனைசிந்து மேவுந்தனல்வானமிம ன்
சேவினுடுங்கிணைத் தெரிந்திந்தப்போர்விஜய ன்
மன்னும்புகழபிமன் மாண்டானெனக்கேட்டா ல்
தன்னுயிரையெண்ணுமல்ச் சாகத்துணிந்திடுவா ன்
புத்திரசோபமித்தப் புவியிற்பெரிதகனு ல்
இத்தருணத்தினியா மிதற்கோருபாயமி னி
செய்திடவேணுமென்று தேவேந்திரனையர்த ப்
பையரவினிற்றுயிலும் பச்சைமால்நெஞ்சிலெண் ணி
தேரைமெதுவாகச் செலுத்திவரும்பொழு து
சீரைப்படைத்தபிரான் தேவேந்திரனுந் து
மிகுந்தவயதுடைய விர்த்தப்பிராமணன்போ ற்

தருந்தவேடம்பூண்டு தனஞ்சயனுமாயவனு ம்
வருகும்வழிக்கருகே வளர் தீக்குழியமைத் து
பெருங்குரலிட்டழுது பிரகாரம்போலவேதா ன்
சுடர்விசுதீக்குழியைச் சுற்றிவருகும்போ து
நெடுமாலதையறிந்து நிருபன்விஜயனுக் கு
தெரியும்படிகாட்டித் தீயேதுகாணிவிட ம்
எரிகின்றதீக்குழியை யெவனோவொருமறையோ ன்
வலமாகச்சுற்றியதோ வருகின்றான்பாருமென் று
நலமாகவேமாயன் சொல்லவிஜயன்பார்த் து
என்னவிபரீதமென்றறிவோமென்றவர்க ள்
அன்னமறையவன்பா லணுகியிகத்தாழ்ந் து
மாதவசிரேஷ்டரேநீர் வசிக்கும்நகரமே து
பேதமறச்சொல்லுமுங்கள் பேரென்னதங்களுக் கு
நேரிட்டதுன்பமென்ன நீரிந்தத்தீயில்விழ க்
காரணமென்னவதைக் களறுமெனவேயந் த
வேதியன்றன்கரத்தை விஜயனுமாலும்பிடித் து
போதமுடன்கேள்கப் பொய்வேடமாமறையோ ன்
பின்னுந்தேம்பித்தேம்பிப் பெருமூச்சுவிட்டழு து
நன்னிலைமைநீங்காத ராஜாதிராஜர்க ளே
அழுவாரழுவதுவு மவரவர்துக்கத்தையெண்ணி ச்
சுழுவாகிபிறர்கள் துக்கமதற்காகவல் ல
சோதித்துவிட்டதுகாண் தொல்புவியிற்றெய்வமென் னை
ஆதலாலென்விதியை யநுபவிக்கின்றேனையா ன்
நான்பாவிசெய்துகொண்ட நற்றீவினையேயென்னை த்
தான்மோசஞ்செய்ததுகாண் தளர்ந்தவயதுதனி ல்
ஆதரவில்லாத வரும்பாவியாகிவிட்டே ன்
பாதையிற்போகுமுங்கள் பாட்டைவினிப்பாரு ம்
என்னுடையகையைவிடு மென்றந்தமாமறையோ ன்
முன்னமழுததிலுமொன்றுபங்குதானழுதா ன்
கண்ணன்ஜெயவிஜய காண்டீபனும்பார்த் து
மண்ணில்விழுந்தழுகு மாமறையோனைத்தேற் றி
சங்கதியைச்சொல்லுமென்றே தாழ்ந்திவர்பின்னுங்கேள்க் க
துக்கமறையந்தணனுஞ் சொல்லுவான்புண்ணிய ரே

மாநிலத்திலென்னுடைய வயிற்றெரிச்சலானவி தை
ஏனையாகேள்க்கின்றீ ரினிநீங்கள்கேள்ப்பதறு ல்
ஆவதென்னவுங்களா லடைகின்றலாபமென் ன
மாவலரேயென்குறைகைய மாற்றவுங்களாலா மோ
நயந்துபொன்பொருள்கேட்டால் நல்கியுதவிசெய்வா ர்
உயிர்கொடுத்துக்காப்பவர்க ளொருவருமில்லையை யா
என்றைக்கிருந்தாலு மிறந்துபோகின்றவுயி ர்
இன்றைக்கிறப்பதினு லென்னகெடுதியதி ல்
காதுக்கினிதாகக் காவலர்களேபே சி
ஏதுக்குமாபாவி யென்னைத்தடுக்கிறீர்க ள்
என்றந்தமாமறையோ னிசைத்தமொழியைக்கேட் டு
நன்றுகாணீருரைத்த ஞாயமல்லாஞ்சரி யே
ஆனாலும்யாங்களுஞ்சற் றறிந்துகொள்ளும்படியாய் த்
தானனவேதியரே சங்கதியைநீருரைத்தா ல்
எங்களாலானமட்டு மிந்தத்தருணமதில் த்
தங்கள்துயரகலத் தக்கவுதவிசெய்வோ ம்
வேண்டாங்காண்சந்தேகம் விளம்புமென்னக்கேட் ட
காண்டவனைக்கமலக் கண்ணனைப்பார்த்தம்மறையோ ன்
உத்தமவித்தகரே யுங்களைப்பார்க்கும்பொழு து
சத்துருக்களால்மிகவுஞ் சங்கடங்கள்பட்டலைந் து
வேசாறுகத்திரும்பும் வேந்தரைப்போற்றேனுதுகா ண்
ராஜாதிராஜர்களே ரணக்களத்தில்நீங்கள்பட் ட
அவதியுடனேயென் னவதியையுங்கேள்க்கிறீர்க ள்
புவனமதிற்சொல்லாமற் போனாலுமல்லதல் ல
ஆனாலுஞ்சொல்லுகிறே னரும்பாவியென்கதை யை
தேனனும்வாசகரே செவிகொடுத்துக்கேட்டருள்வீ ர்
ஐயாவேயிந்திரபுரி யக்கிராரமதனிலுப் பு
எய்பாகண்டலவைய னென்றுசொல்வாரென்பெய ரை
பொல்லாதபாவிநான் பூலோகத்திற்பிறந் து
எல்லாக்கலைகளையு மேம்படக்கற்றறிந் து
வாழ்ந்துவருநாளில் மகப்பேறிலாக்குறையா ல்
தாழ்ந்துதெய்வச்செயலால் சற்புத்திரனொருவ ன்
பிறந்தானவன்றனையான் பெருமையுடன்வளர்த் து

சிறந்தவிவாகமுமே செய்துவைத்துயானிருந்தே ன்
மன்னியிருபத்தைந்து வயதுவரையிருந் து
என்னைமறந்தென்மகன்று னிறந்துவிட்டதால்யானு ம்
இறக்கத்துணிந்துவந்தே னித்தீயில்வீழ்ந்தென வே
மறைக்கிளவன்றுனுரைத்து மண்மீதிற்சோர்ந்தான்கா ண்
சோர்ந்தமறையவனைத் தூயவிருவர்களு ஞ்
சேர்ந்தங்கெடுத்தணைத்துத் தேற்றியுபசரித் து
சதுர்மறைவேதியரே தவத்தில்மிகுத்தவ ரே
பதியுலகிவிட்டதெல்லாம் பயிராசப்போரதில் லை
இலைகள்பழுக்காதிருந்தா லெமனுக்குவேலையென் று
அலைகடல்சூழ்புவியி லழியாமல்யாரிருந்தா ர்
இறந்தோருடனிறந்தா ரெங்குமில்லைவேதிய ரே
பிறந்தோரெலாம்புவியிற் பின்னுமிறவாதிருந்தா ல்
பூமகள்தாங்குவளோ பொறுப்பாளோசேடனவ ன்
மாமறையவரேயுன்றன் மனையாட்டியும்நீரு ம்
பிள்ளையனேகமின்னம் பெற்றெடுப்பீரானதிரு ற்
சள்ளைத்தீயில்விழுந்து சாகவேண்டாமென வே
பலவிதசாந்திகளாற் பார்ப்பானைத்தேற்றினர்க ள்
நலமறையோனவர்சொல் ஞாயமதைக்கேட் டு
தயிரியஞ்சொல்லவந்தீர் சரிதான்காண்வேந்தர்க ளே
வயிற்றின்நோயின்வருத்தம் வந்தவர்க்கல்லோதெரியு ம்
மற்றவர்க்கேன்தெரியும் வையமதிற்பிறர்க்கு ச்
சற்றுங்கலங்காமற் தயிரியஞ்சொல்வார்யாரு ம்
தனக்குநேரிட்டதென்றால் தான்றெரியுங்காண்வருத்த ம்
வனக்குஞ்சரம்போன்ற மகராஜர்கள்நீங்க ள்
செல்வஞ்சொல்லுக்குச் சிறிதுமஞ்சாதென வே
சொல்வதுபோலெனக்குச் சொல்லவந்தீர் ஞாயமை யோ
சொல்லுமுங்கட்கிந்தவிதந் துயர்வந்ததானாலும் ச்
செல்வர்களேயுங்களுக்குத் தெரியுமேயல்லா து
இப்போதுதோற்றுதென்வருத்தமுங்களுக்கு த்
தப்பாதசொல்லுடைய தரைவேந்தரேயென வே
வேதியனிவ்வாறுரைக்க விந்தையுடன்கேட் ட
தீதிலாவாள்விஜயன் திருமாலிருவருக்கு ள்

விஜயதரன்நகைத்து வேதியரேயெங்களுக் கு
இசைந்ததுயரிதுபோ லெத்தனைதான்வந்தாலு ம
மண்மீதுனைப்போலே மடியத்துணியோங்கா ன
உண்மையெனவுரைத்தா னோங்கும்புகழ்விஜய ன்
விஜயனுரைத்தசொல்லை வேதியனுந்தான்கேட் டு
புஜபலவீரனேயுன் புத்திரர்க்குள்யாரேனு ம்
இனியொருகாலமதி லிறந்துபோனாலதற்கு க்
கனிவாகச்சற்றுமனங் கலங்காதிருப்பீ ரா
சுருக்காகவேயெமக்குச் சொல்லுமெனக்கேள்க் க
ஒருக்காலுந்துன்பமுறே னும்மைப்போலென்றுரைத்தா ன்
இச்சொல்லெதார்த்தமென்று லெனக்குக்கைபோடுமெ ன
மெச்சுபுகழ்மறையோன் வினவுமந்தத்தருண ம்
தனஞ்சயன்றனிதுவே சத்தியமாமென்றுரைத்து க்
கனவேகமாகவேதான் கைபோடப்போம்பொழு து
மாயனதையறிந்து வாள்விஜயாயென்னபுத் தி
தேயத்திப்போதுயாம் செய்துவரும்யுத்தமீதி ல்
சாவாராரோபிழைப்பார் தானாரோநாமறியோ ங்
தேவாதிதேவர்களுந் தெரிந்துசொல்லமாட்டார்க ள்
இலையும்பழுப்பு மெவருக்குமுண்டதனால் ச்
சிலைவிஜயாயோசித்துச் செய்யென்றுதான்தடுத்தா ர்
என்னகெடுதிகள்வந் தெய்திடினும்நானினிமே ம்
சொன்னசொற்றப்பேன்காண் சுவாமியெனவுரைத் து
கையறைந்தக்கினியைக் காண்டீபன்றனவித் து
ஐயர்தனக்குவிடை யருளியனுப்பிவைத் து
தாங்களிருவர்களுந் தடத்தேரின்மீதே றி
ஓங்கும்புகழ்விஜய னுயிரினிலுமினி ய
ஆயுதமானதெல்லா மவிழ்த்தந்தத்தேரில்வைத் து
மாயனும்பற்குணனும் வருகுஞ்சமயமதி ல்
வென்றாலுந்தோற்றாலு மேகமுழக்கம்போ லே
குன்றாத்தவமுனிவர் கூறுமாசீர்வச ன
சந்தடியோசைமிகத் தழைத்தநம்பாசனற்றயி ற்
சந்தடியில்லாமற் றருமறையந்தணர்க ள்
வேதாகமப்பழக்க விசாரணைகளில்லாமல் த்

தீதாரிருள்விளக்குந் தீபங்களில்லாம ல்
குடிபோனவீடதுபோற் கும்மென்றிருப்பதென் ன
நெடியமாலேயெமக்கு நிகழ்த்துமென்விஜய ன்
வினவும்பொழுதிலந்த வெண்ணெயுண்டசெவ்வாய ன்
தனஞ்சயனேயெனக்குஞ் சந்தேகமாகவேதா ன
இருக்கின்றதல்லாம லின்றுதயாதிமுத ல்
அருக்கன்குடைதிசைபோ யடையும்வரையிலியா ன்
உன்னைப்பிரியாம லுன்னுடனேயிக்கிருந் த
என்னைக்கேட்டாலெனக்கிங் கென்னதெரியுமை யா
எல்லாம்போய்ப்பார்ப்போம்நா மினிவாருங்காணென வே
நல்லோர்வாழ்பாசறையை நாடிவருகும்பொழு து
வாள்விஜயன்றனக்கு வணமடிப்பதுமிட து
தோள்துடிப்பதுமிக்வுஞ் சோம்பலுண்டாவதுவு ம்
சித்தம்பேதிப்பதுவுந் தேரில்வருகும்போ தே
நித்திரைகொள்வதுவும் நிணப்புலால்நாறுவதுவு ம்
துற்சகுனங்களிவ்வார் தோற்றுவதைத்தானதிந் து
பற்குணவேந்தனந்தப் பரந்தாமனைநோக் கி
அணங்காகிக்கங்கையணி யரனார்துயரகற் றி
வணங்காதகஞ்சனெனு மாமன்றனைப்போக் கி
தஞ்சமெனுமெய்யடியார் தம்மைப்புரக்கவந் த
செஞ்சொல்மறைமுடிவே செங்கண்மாலச்சுத ரே
சகுனபேதங்கள்மிகத் தானெமக்குத்தோற்றுவதா ல்
வகைமோசந்தானேதோ வந்திருக்கவேண்டுமெங் கே
காரணமின்னதென்று கண்டறியக்கூடவில் லை
தேரைவிரைவாகச் செலுத்துமெனவுரைக் க
மாமின்வளர்மார்பன் வைகுந்தநாட்டிறைவ ன்
பூமியதிர்ந்திடவே பொற்றேரதைநடத் த

## {அருச்சுனராசன் தன்மகன்அபிமன்னன்இறந்ததைக் குறித்துப் புலம்பல்.}

அந்தந்தனைத்தருபா சறைக்குச்சமீபமதா ய்
வந்தந்தப்போர்விஜயன் மணித்தேரைவிட்டிறங் கி
காசினியாள்வேந்தர்களுங் கவிவாணரும்நிறைந் த

ராஜமணிமண்டபத்தை நாடியங்கேபுகுந் து
பகாரும்வேந்தர்களும் படைவீரரானவரு ந்
சகலருங்கூடியிர்தச் சபையில்நிறைந்திருக் க
என்னுயிருக்கொப்பான வெனதுதிருப்புதல்வ ன்
மன்னும்புகழ்சிறந்த வாளபிமன்றனொருவ ன்
இல்லாதிருப்பதென்ன வெனக்கரியச்சொல்லுமெ ன
வல்லாண்மையிற்சிறந்த வாள்விஜயன்றான்கேள்க் க
சித்திரப்பாவையைப்போற் சிலைவிஜயனுக்கும று
உத்தரஞ்சொல்லாம லொடுங்கிப்பிதிர்கலய் இ
சூழமந்தச்சபையோர் தூக்கித்திருப்பத னை
வாளுருவிவென்றகண்ணூர் மடனார்வடிவழக ன்
தகைமைமிகும்விஜயன் றான்பார்த்தநம்முடை ய
மகனைவாளபிமன் மடிந்தானெனத்தெரிந் து
அடியற்றுவீழ்மரம்போ லலறிமனம்பத றி
படிமீதுவீழ்ந்துருண்டு பட்டமரம்போற்கிடந் து
மறுபடியுந்தானெழுந்து வாயிலறைந்துகொண் டு
அறிவழிந்தாவிகுன்றி யையோவெனக்கத றி
முகத்திலறைந்துபின்னு முட்டிவிழுந்தெழுந் து
மகனேமகனேயென் வாழ்வேவாழ்நாளுற வே
வித்தைகளஞ்சியமே வேந்தர்குலநாயக மே
புத்திசிகாமணியே பூலோகத்திந்திர னே
கட்டிக்கரும்பேயென் கண்ணேயரும்பொரு ளே
மட்டிலாக்கீர்த்திபெற்ற மாணிக்கரத்தின மே
தெள்ளமுதேபாகேயான் செய்ததவப்பல னே
பிள்ளைக்கலிதீர்க்கப் பிறந்தகுணக்கட லே
உத்தமப்பேரேயென் னுயிரேவுயிர்த்துணை யே
புத்திரபாக்கியமே பொன்னேமரகத மே
அப்பாவபிமன்னு வரசர்தொழுங்குழ ஓ
இப்பாரில்நீயென்னைவிட் டிறந்ததுமெய்தா ஓ
நீமடிந்துபோனதிது நிசமானுல்நான்பா வி
பூமிதனிலிருக்கப் பொருந்துமோவுத்தம னே
உன்னைப்பறிகொடுத்திவ் வுலகமதில்நானிருந்தா ல்
என்னைப்போல்பாதகர்க ளெங்குமில்லையகத்தி ல்

ஐயோமகனேயென் னருமைத்திரவிய மே
பொய்யோவுனையானும் போற்றிவளர்த்ததெல்லா ம்
உன்பலத்திலேயிந்த வுலகாள்வோமென்றிருந் த
என்பலத்தைகொள்ளையிட்டிங் கிறந்தாயேகண்மணி யே
உன்றந்தையாகியவென் னுறவினிமேற்போதுமென் று
என்றந்தையோடுகலந் திருக்கவென்றுசென்று யோ
என்னைமறந்தய்யாநீ யிறந்துவிட்டபோதிலும்நா ன்
உன்னைமறப்பேனோ வுயிர்வைத்திருப்பே னே
மாபாவிநானெனக்கு மகனாகநீபிறந் து
பூபாலருமதிக்கப் போர்த்திறமையிற்சிறந் து
மைந்தனேநீவாழ்ந்த வாழ்க்கையுமுன்வல்லபமு ம்
இந்தமட்டிலுந்தானோ யிதற்கோவிப்பாடுபட்டே ன்
அரவானையெட்டாநா ளமர்க்களத்திலேகொடுத்து க்
கரவாளபிமனேயென் கண்ணேநவமணி யே
புண்ணியனேஇன்றையப் போரிலுனையுந்தோற் று
மண்ணுலகோர்தான்பழிக்க மாபாவிநானினியே ல்
இருப்பதிலென்னபல னிறப்பதேநிட்சயங்கா ண்
மருப்படியுந்திண்புயனே மங்களகுணாகர னே
பூலோகவாழ்க்கையிது பொய்யென்றுநீவெறுத் து
மேலோகவாழ்க்கைதனை விரும்பியேசென்று யோ
பொன்னுலகைநீநாடிப் போகும்பொழுதினி லே
என்னுடையதந்தையெனு மிந்திராஜனு மே
பெருமைமிகும்நமது பேரன்வருவதினா ல்
அருமையுடனெதிர்சென் றழைத்துவாருங்களென் று
தேவர்களுக்குத்திரவு செய்தாராசெய்தப டி
ஆவலுடனவன் றழைத்தந்தத்தேவர்சென் று
உரிமையுடனேயுனக் குபசாரஞ்செய்தா ரா
அரியதவமேயென் னரசேயென்னாரமு தே
வாட்டங்கண்ணுர்தனக்கு வாய்த்தமகனேயுன து
பட்டணந்தேவேந்திரன் பண்ணவர்களைவிடுத் து
என்பேரனுக்கினிநம் மிந்திரபுரியின்வளத் தை
அன்பாகவேகாட்டி யழைத்துவாருங்களொன் று
சொல்லியனுப்பினதோர் சொற்போலத்தேவரு னே

மெல்லினமாயனழைத்து மேவியுன்கண்களிக் க
தேவர்திருக்கோவில்களுந் தேவசிங்காசனமு ம்
மேவுமரம்பையின்னுர் வீதிப்பெருக்கங்களு ம்
அயிராவதமுமுய ரசகாயகங்கைகையையு ங்
கபவேறியோங்கிநிற்குங் கற்பகக்காவையு மே
இந்திரவிமானமுட னிரண்டுநிதிகளையு ம்
மைந்தனேயுன்றனக்கு மகிழ்ச்சியுடன்காட்டின ரா
நீயவைகளைப்பார்த்து நெஞ்சங்களித்தா யா
சேயனேபஞ்சவர்கள் தேடும்பொருளேயு னை
அந்தமிகுந்தவெள்ளை யானையின்மீதேற் றி
இந்திரகோலமுனக் கின்பமுடன்காட்டினா ரா
என்றந்தைவந்திங் கிருந்தனரேயப்போ அ
வென்றிமிகுமவர்க்கு விடுதியிருந்ததெங் கே
நேருங்காலகேய நிவாதகவசர்களை ப்
போரில்ஜெயித்துவெற்றி பூண்டவிடமெதுகா ண்
பகருமவர்கள்வளர் பதியெங்கேசொல்லுமென் று
மகனேநீகேட்டாயா வானவர்கள்காட்டின ரா
அடர்ந்தசமர்க்களஞ்சென் றமராடிவெற்றிபெற் று
உடல்நொந்தருச்சுனன்று னுதவுமகனபிம ன
கமதருமைப்பேரன் நம்பால்வந்தானென வே
அமரர்தனைவிடுத்தங் கழைத்துவரவுரைத் து
பாலகனேயுனது பாட்டியாமிந்திரா ணி
சேலமுடனுனக்குத் தேவாமுதூட் டி
வாயாறப்பேசியடா மகனேயுனதுடை ய
ஆயாசத்தைப்போக்கி யன்புபாராட்டின ளா
மருவேறுமார்பனே நீ வருவதவர்களுக்கு த்
தெரியாதிருந்தனரா தெரிந்துமுனையவர்க ள்
மறியாதிருந்தனரா மறிந்தார்களாவுனைத்தா ன்
மறியாதவனுமருள் மாமறையும்பொய்த்தாலு ம்
சொன்னசொற்பொய்யாத துரையேமுறைதவ று
மன்னர்முதலேயொரு வாக்கியஞ்சொல்லெனக் கு
முத்தேமரகதமே முக்கனியேசற்கா யே
முத்தேவர்வந்தாலும் முனைந்துவெல்லும்வல்லவ னே

என்னுட்டேயென்மகனே யென்றந்தக்காண்டீப
தன்னைமறந்தருதி தன்சொற்றமா
வாய்தனில்வந்ததெல்லாம் வசனித்துத்தான்புலம்பி
பேய்போற்பரதவித்துப் பெருங்குரலிட்டழு
தன்னைச்சூழ்ந்தங்கிருக்குந் தரைவேந்தரைப்பார்த்
மன்னர்களேயென்னருமை மகன்வாளபிமனென்போ
போர்க்களத்திலிம்மடிந்துப் போகும்படிவிடுத்
னக்கமிலாநீங்களுங்க ளுயிர்க்குறுதியைத்தே
வந்துவிட்டீர்களல்லோ மகாயோக்கியர்நீங்க
இந்தஞாலப்புவியிற் றேசயிலேந்தானு
உங்களுக்கொப்பார்வா ரொருவருங்கிட்டார்க
பொங்குங்கடலொலிபோற் போர்வேந்தர்கள்நீங்க
எல்லவருமிருந்தெங் கென்பிள்ளையைக்காக்
வல்லபர்தானிலையோ.மன்னர்களேயுங்களுக்
சரிதானினிநீங்கள் தானுதருமருக்கு
பரவுங்கட லுலகிற் படைத்துணைவராயிருந்
சாதிக்கப்போறீர்கள் தயிரியசாலியென்
சோதிக்கனகமுடி துலங்கரதமே
விற்பாணமுமெடுத்து வெட்கமின்றிவந்தீ
பொற்பார்புவியிலென்ன போர்புரியப்போறீர்க
என்னைநிரேகிற்காம வேந்துங்களப்பா
மன்னவர்களேயெனவே வாள்விஜயன்றனக்கினைத்
தனைநிராகரிக்குந் தமயனும்வீமன்முத
மன்னரனைவரையும் வாள்விஜயன்றன்பார்த்
என்றனுயிர்க்குயிரா யெழிலபிமனெனவனே
கொன்றவனுரெனக்குக் கூறும்விரைவிலென்
அந்தரமும்புவியு மதிரும்படியா
இந்திரன்தன்புதல்வ னிரைந்தவர்களைக்கேள்க்
மறுமொழிசொல்வதற்கு வாயிலாலுமையர்போ
அறிவழிந்தர்க்கமின்றி யயர்ந்துநின்றார்கள
தருமபிரானதிந்த தன்றம்பிகேள்ப்பதற்கு
துரிதமுடனேவதிற் சொல்லாமல்காமிருந்தா
நீங்குமங்கெய்துமெனச் சிந்தைதனில்நினைந்

ன்திப்தூதூன்தூடீள்ம்ள்ள்ககுப்தூறுறிரேள்லேதூஸ்தூக்தூககஸ்தைத்ஸ்தூ

ஓங்கும்புகழ்தரும னுடன்றனைவனைப்பார்த் ஆ
கஞ்சனைக்கொன்றவனுங் காண்டீபனேநீயு ஞ்
சஞ்சத்தகாருடனே சமராடப்போனபின் பு
விற்குருவாலமைத்த வெற்றியூகங்களதை ப்
பற்குணனேயுடைக்கும் படைவீரரில்லாம ல்
தக்கநம்சேனைமுற்றுந் தயங்கிநிற்கலான்பார்த் து
அக்கணமேமம்புதல்வ னபிமன்னனைநோக் கி
வித்தகனேநீயினிப்போய் வெற்றிபெறுவையென் று
புத்திரனையானனுப்பப் பூரிப்புடனபிம ன்
பாவியென்வார்த்தைக்குப் பதில்வார்த்தைபேசாம ல்
மேவிச்சேனைப்பதியாம் விற்குருவாலமைத் த
மூன்றுயூகங்களுமே முறிந்தோடிடச்சிதைத் து
தேன்றருஞ்சொல்லுடைய செல்வனெனுமபிம ன்
கன்னன்துரோணர் கனஞ்சேர்கிருபரொ டு
மன்னரனைவரையும் வாட்டிச்செயங்காட் டி
கலக்கமிலாச்சல்லியன்றன் கண்மணியாயினு ம்
இலக்கணகுமாரன்முத லிளவரசர்யாவர்களு ம்
இந்நிலவாழ்வைமறந் தேமபுரமா ன
தெந்நிலம்போய்ச்சேரச் சேகரமாயனுப் பி
சூரியன்சேயாலுந் துரோணமுனியாலு ம்
தேரும்வில்லுமழிந்து தேர்ச்சக்கரமேந் தி
பூமிதனில்நின்றெதிர்த்த போர்வீரனைப்போக் கி
சோமதத்தன்விருதான் துச்சனிபுமேதானு ம்
நேர்ந்துகதாயுத்தம் நெடுநேரந்தான்புரிந் து
சார்ந்தவத்துச்சனியைச் சமனுலகேற்றிவிட் டு
மதிமயங்கிச்சோர்ந்து வாடிநிற்கும்போதவிட ம்
பதுங்கியிருந்தகொடும் பாவிசெயித்திரத ன்
சிகரதண்டமெனுமோர் திறல்கதையினாலடிக் க
மகனைவாளபிமன் மடிந்தான்மடிந்தான்கா ண்
சக்கரயூகமதைத் தக்கபுகழபிம ன்
சிக்கறவேயுடைக்கச் சென்றபொழுதினி லே
அரசர்முதல்நாங்கள் யாவருமங்கேபுகுந் ஆ
சரமாரிதான்றூவிச் சமர்செய்தோமவ்வே ளை

இந்துமுடியரனு ரிடத்தில்வரம்படைத் த
சிந்துமுடிவேந்தன் செயித்திரதன்றனெதிர்த் து
குதலைமொழியுடைய குழந்தையபிமன்னனுக் கு
உதவியாகப்போக வொட்டாமலேதடுக் ச
பார்த்தனேகாக்கள்மிகு பங்கமடைந்துண்டங் து
போர்ச்சிங்கமாகியநம் புத்திரனுக்கேயுத வி
செய்வதற்கில்லாமல் திரும்பிவந்துவிட்டோங்கா ண
செய்தவினைசெய்தவரைச் சேருமென்பாரதுபோ ல்
விதியின்பயனைதனை வெல்லவெவரால்முடியு ம்
மதிவேந்தனேவிதியின் படியேமுடிந்திருக் க
ஐயோபெரும்பாவ மரசரிவர்கள்தங்க ள்
மெய்யோதும்ராச்சியத்தை விட்டுவர்தேகமக் கு
படைத்துணைவராயிருக்கும் பார்வேந்தர்களிவரை ச்
சடைத்துநாம்பேசுவது சரியல்லவென்றுரைக் க
கேட்டவிஜயதரன் கிலேசக்கடல்படிந் அ
வாட்டமுடன்றனது மதிமயங்கித்தியங் இ
சிந்துதேசத்தலைவன் செயித்திரதனுக்ம து
மைந்தனைக்கொல்லுகின்ற வல்லமைசாலியை யோ
கல்லதிருக்கட்டுமினி நாமவனைப்பார்ப்போமென கி
கொல்லவரும்வேங்கைக் குட்டியைப்போற்சீ தி
புத்திரசோகமெனும் புனலாழியில்மூழ்கி ப்
புத்திகலங்கியிகப் புலம்பிநின்றானப்பொழு அ

## ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி புலம்பல்.

வஞ்சகமாயனந்த மணித்தேரைவிட்டிறங் இ
பஞ்சவர்களிற்பார்த்தன் படைகளையெலாஞ்சேர்த் அ
ஆயுதசாலைதனி லடக்கஞ்செய்தங்குவைத் அ
ஞாயவானைப்போலே ராஜமணிமண்டபம்போ ய்
போரர்விஜயதரன் பின்புறமதாகவின் அ
சீரார்தருமருமே செய்யபுகழ்வீமன்முத ல்
சகலருங்கூடியந்தத் தனஞ்சயனுரின்றெடுத் த
மகனைநினைத்துருகி மதியற்றார்போலேநிற் க
கண்டக்காரணனுங் கண்ணீர்திரண்டோ ட
அண்டர்பிரானேயு வரசர்குலவிளக் டே

நிதியேகுணக்கடலே நீதிநிறைபொக்கிஷ மே
பதிவேந்தர்கள்போற்றிப் பணியும்பதாம்புய னே
ஐயாவுனக்குமிவ்வா றமடுவருகுமென் றே
வையமதில்நான்பாவி மதிந்துமறியே னோ
போர்க்களத்தில்நீமுடிந்து போவாயெனவேதா ன்
தீர்க்கமுடன்நமக்குத் தெரிந்தாலுனைநாங்க ள்
விட்டுப்பிரிவோமா வேளிடஞ்செல்வோ மா
குட்டுநியாமலிந்தக் குறைவந்துநேர்ந்ததய் யோ
அர்ச்சுனியெலாம்புகழும்பிமன்னுநாக்கரு ணை
நம்பியிருந்ததற்கு நட்டாற்றில்விட்டா யே
கற்பகமேநீயுமினிக் கனகமணித்தேரே றி
விற்பாணமுமேந்தி வெஞ்சமர்நீசெய்துநிம் க
என்றைக்குநான்காண்பே னென்னுட்டுயர்தீர்வே ன்
நன்றைக்கருதுமந்த நரனீன்றபாக்கிய மே
செல்வத்துரையேயென் செய்வேனெனப்புலம் பி
கல்லுங்கரைந்துருகக் கடல்நீரெலாஞ்சுவ ற
விண்ணுமுருக விலங்கினமெல்லாமுரு க
மண்ணுமுருக மரமுருகவேயழு து
தன்னுல்ப்புலம்புமவர்தனைத்தேற்றுவார்களின்றி த்
தன்னாலேதான்தேறித் தனுமபிராணிடம்போ ய்
சாவும்பிழைப்புஞ் சமமாயிருக்குமென் று
பூவில்ச்சமர்தொடுக்கும் பொழுதேயானுங்களுக் கு
சொன்னதறிந்திருந்தும் துயரப்படலா மா
என்னசெய்வோம்தெய்வம்நமை யிவ்வாற்சோதித்ததம் கு
சிக்கிருவருந்துவதிற் றேர்வோமேதயாகுதில் லை
இந்தமட்டிலும்போது மினிவிசனம்வேண்டாங்கா ண்
எழுந்தமாயவனுரிசைத்துத்தருமமன்ன ன்
தன்றுயரத்தைப்போக்கித் தனைமதிக்கிம்சோர்ந் து
வீழ்ந்துமதிமயங்கி வெதும்பிக்கிடக்குமந் த
ஆழ்ந்தமதியூக னருச்சுனன்றன்பாலணு கி
பொருமியழுதருண்டு புகழ்தருமருந்தாங்க ள்
இருவரும்பழகுணனை யெடுத்துமார்போடணைத் து
மூர்ச்சைதெளிந்திடவே முகத்தினில்பன்னீர்தெளித் து

தேர்ச்சியுடனிவர்கள் தேற்றியுபசரிக் க
கனையாறியேவிஜய காண்டீபராஜனென்போ ன்
வனைசக்கதைப்பிடித்த மைத்துனனையுந்தன து
தமயன்றருமனையுந் தாகமுடனேபார்த்து க்
கமைசேரிருவரையுங் கட்டியழுதான்கா ண்
அழுதுமிகப்புலம்பு மருச்சுனனைத்தானமர்த் தி
பழுதிலாக்கீர்த்திபெற்ற பாண்டவர்களேகேளீ ர
தந்தைதாய்தாரந் தனயர்சகோதரரு ம்
வந்தைபந்துக்களுமே மாயாசம்பந்தமல்லா ல்
ஒருவர்க்கொருவ ருயிர்த்துணையாவதுண் டோ
அரிதாங்கடல்புவியி லழியாமல்யாரிருந்தா ர்
பிறப்பதுவும்புவியிற் பின்னுமிறப்பதுவு ம்
மறத்தல்நினைத்தலைப்போல் மாறுஞ்சகசமிதா ம்
ஆகலால்நீங்களிதை யறிந்துகொள்ளாமலே யோ
வாதைப்படுவதினால் வருகின்றலாபமென் ன
கன்றும்பசுவுங் காடேறியேமேய்ந்தா ல்
கன்றுவழிகன்றேதான் கருதும்பசுவின்வ ழி
பசுதானெனப்புவியிற் பழமொழிகள்சொல்லுமிந் த
நிசமானவாக்கியத்தை நீங்களறியீ ரோ
ஆனதாலுங்கள்பிள்ளை யபிமன்னராஜனென்போ ன்
தானந்தவம்விரதந் தக்கயாகாதிகளு ம்
செய்தும்பெறவரிதாஞ் செய்யபுகழுடைத் தி
கைதவறிவிட்டவனைக் கருதியினிநீக்க வ்
கவலைப்படுவதினாற் காரியமானதுண் டோ
அவரவர்கள்செய்தவினை யனுபவிக்கவேண்டுமென் றே
நவித்தான்விஜயதரன் சஞ்சலத்தைத்திருமா ல்
பவித்துறாய்மார்பணைத்துப் பார்த்தாமன்வாக்கியத்தா ல்

### அருச்சுனன் சபதங்கூறல்.

விஜயதரன்றேறி வெவ்விடத்தைப்போற்சீ றி
திசையாளும்வேந்தர்களே சிறந்தமுனிவர்க ளே
தங்களெதிராலுரைக்குஞ் சபதமதைக்கேளீ ர்
திங்கள்வதனமென்றன் செல்வனபிமன்னவ னை
கொன்றுமுடித்துவிட்ட கோமான்சயிந்தவனு ம்
நன்றிபிலாப்பாதகனை நாளைப்பொழுதினுக்கு ள்
கொல்வேனென்கையம்பாற் கொல்லாவிடில்யானு ம்
வில்வேந்தரேதீயில் வீழ்ந்துமடிந்திடுவே ன்
சத்தியவாய்மையிது தவறுவேனுமானா ல்
சத்திரங்கோவில்குளந் தன்னையழித்தவரு ம்

சோலைநந்தாவனம்நீர்த் துறையைக்கெடுத்தவரு ம்
கூலிமுதலியதைக் கொடாமலிருந்தவரு ம்
பாரபக்ஷம்பேசும் பஞ்சாயத்தாரவரு ம்
சோரமனைவியர்கள் சுகத்துக்கலைபவரு ம்
தாய்தந்தையர்பசியாற் றயங்கியிருக்கப்பார்த்து ம்
பேய்போலேதன்னுடலைப் பேணித்திரிபவரு ம்
தந்தைதாயாசான் றமையன்சொல்லைத்தடுத் து
நிந்தித்துப்பேசுமந்த நிர்மூடரானவரு ம்
பிறர்கள்பொருளுக்குப் போய்போற்பறப்பவரு ம்
அறந்தப்பிவாழ்பவரு மறத்தைக்கெடுப்பவரு ம்
கைம்பெண்களைக்கூடிக் களித்துத்திரிபவரு ம்
நம்பிக்கைமோசகரும் நஞ்சைக்கலந்தவரு ம்
துய்யகவிவாணர் சொல்லைத்தடுப்பவரு ம்
பொய்சொல்லிவாழ்பவரும் பொய்வேஷக்காரரு மே
கடந்துகிடந்தழுந்தும் நரகமதிலேநா னு ங்
கிடந்தழுந்தக்கடவேன் கேண்மினெனவுரைத் து
தேவதத்தமெடுத்துச் சிலைவிஜயன்வாயில்வைத் து
பூவுலகும்விண்ணுலகும் பொறிகலங்கியேதியங் க
முடிவேந்தருமொடுங்க முழக்கினனப்பொழு து
படியையளந்தவனும் பாஞ்சசன்யமெடுத் து
மேலிடிவீழ்ந்துலகு விரிந்திடிந்துபோவதைப்போ ல
மூலகாரணன்விரைவாய் முழக்கினனகாணம்மா னே
கண்டந்தவீமனுமே கனிஷ்டரிருவர்களு ம்
மண்டலவேந்தர்களு மற்றுமுள்ளயாவர்களு ம்
தரையேழுந்தானதிரத் தங்கள்தங்கள்சங்கம தை
முருகவிழ்வாயில்வைத்து முழக்கினாரப்பொழு து
முரசக்கொடிவேந்தன் முகுந்தன்றனைநோக் கி
கரியாகிமூலமெனக் காத்தருளாநிதி யே
முன்னாடிக்கக்காண்டவன் மொழிந்தசபதமெலா ம்
இன்னமுந்தான்முடியா திருக்கத்துரோபதையா ள்
விரித்ததலையையின்னம் விரித்துக்கொண்டிருக் க
கருத்திலேதனையெல்லாங் கருதியோசிக்காம ல்
முடியாச்சபதமிதை முடிப்பேனெனத்துணிந் து
அடியாற்படிமூன்றை யளந்தபதாம்புய னே
சொல்லிவிட்டானேயிவன் சொன்னபடிகா லை
எல்லைமறைந்திடுமுன் னேந்தல்சயிந்தவ னை
கொல்லாவிடில்விஜயன் கொதிக்கின்றதீக்குழியி ல்
வல்லாண்மையாய்வீழ்ந்து மடிந்துபோவானேஐ யோ
தனஞ்செயன்போனபின்பு தருமரென்னபேரோ து

மணஞ்சகித்துநாங்களித்த வையகத்தில்வாழ்வோ மோ
என்செய்வேனென்றுருகு மேந்தல்தருமர்த னை
அஞ்சவேண்டாமெனமா லன்புடனேதேற்றினன்கா ண்

## செயித்திரதன் வருந்துதல்.

சாற்றுமிவர்கள்செய்த சங்கத்தொனியத னை
நாற்றிசையுங்கொண்டாடும் நாகக்கொடிவேந்து ம்
மற்றவர்களுங்கேட்டு மதிமயங்கித்தான்றியங் கி
குற்றமிலாதசிங்கக் குட்டியெனும்விஜய ன்
மகனானவாளபிமன் மடிந்தகருத்தறிந் து
சகலரையும்போக்கிவிடத் தலைப்பட்டானென்றுரு கி
இருந்தாரவர்களிவ்வா றிருக்கின்றவேளைதனி ல்
பொருந்தாதகீர்த்திபெற்ற பூமன்செயித்திரத ன்
தூதர்சிலரவன்பாற் றுரிதமுடனோடிவந் து
மாதவத்தாலுயர்ந்த வாள்விஜயனன்றிரவி ல்
செய்திருக்குஞ்சபதச் செயலையுரைத்தார்க ள்
பொய்திகழ்சிந்துமன்னன் பொறிகலங்கித்தான்கேட் டு
கன்றிமனமுருகிக் காண்டீபன்புத்திரனை க்
கொன்றவன்நான்தானே குழந்தையபிமன்னனுட ன்
எதிர்த்துயான்சண்டைசெய்ய வில்லையேதொல்லை யோ
எதிர்த்தவருங்கொன்றவரு மிருக்கின்றார்நல்லவர்போ ல்
நானெங்குநின்றேனக்க நான்பாலனெங்கிருந்தா ன்
ஏனந்தமாதருமர்க் கிதுவுந்தெரியா தா
பண்டமோர்பக்கம் பழியொருபக்கமெனு ம்
மண்டலவாக்கியம்போல் வந்துவிளைந்தது வே
கதையிலுமேலோரடிநான் கடைசியினிலடிக் க
வதைத்தேனென்றுபழி வந்ததேயென்றுரு கி
துரிதமுடனேயந்தத் துரியோதனனிடம்போய் த்
தருமர்முதலோரைத் தடுத்துச்சமர்தொடுத் தா
வாளபிமன்றனையான் வதைசெய்தேனென்றறிந் து
நாளைப்பொழுதினுக்குள் நாணுகியவிஜய ன்
கொல்வேனென்னையெனவே கூறினனஞ்சபத ம்
நல்வேளையின்றிரவே நமக்குத்தெரிந்தத து

கடற்குள்ளொழிந்தாலுங் ககனத்திற்சென்றாலு ம்
அடர்ந்தமலேக்குகைசென் றடங்கியிருந்தாலு ம்
தாயின்கர்ப்பத்தினுட்போய்ச் சார்ந்தங்கிருந்தாலு ம்
தேயம்புகழ்விஜயன் திரள்கணைவிடாதறிவீ ர்
ஆனதினல்க்கேளு மரசேயினிமீ து
நானிங்கிருப்பதினல் லாபந்தானேதுமில் லே
நாளையொருபொழுது நானெங்கேயாகிலும்போ ய்
வாளேந்தும்பொற்கரனே மறைவாயிருந்துவ ர
சிலவினித்தாருமென்றே ஜெயித்திரதன்றான்கேள்க் க
தலையாலுங்கையாலுந் தானொருவனாவணங் கா
வேந்தனதைக்கேட்டு வெதும்பிமனமுரு கி
பாந்தமறவாதசிந்து பதிவேந்தேநீகேளா ய்
அந்தவிஜயனைப்போ லாயிரம்பேர்தானெதிர்த் து
வந்தாலுமுன்னுயிர்தான் மடியக்கொடுத்துவிடோ ம்
மயங்கவேண்டாமெனவே வணங்காமுடிவேந்த ன்
நயந்துசொல்லித்தேற்றினன்காண் ராஜரனைவர்களு ம்
வேதக்கொடியுடைய மேன்மைத்துரோணரு மே
ஈதிலோக்கர்னனுமே திறலசுவத்தாமாவு ம்
கிருபமுனியுடனே கேண்மைமிகுசல்லியனு ம்
பெருமைச்சகுனியுமே பெரும்படைவீரர்களு ம்
சிந்துதேசத்தரசன் ஜெயித்திரதனைநோக் கி
உந்தும்புகழ்வேந்தே யொன்றுக்குமஞ்சா தே
அரிதாம்புகழோங்கு மருச்சுனவேந்தனுக்கு த்
திரிமூர்த்திகளவருஞ் சேர்ந்துதவியாகவேதா ன்
இனிவந்தெதிர்த்தாலு மெளிதிலவனைப்போக் கி
உனதுயிரைநாம்காப்போ மூழ்வினைதானெப்படி யோ
வேதாவிதித்தவிதி வீணாகாதானாலு ம
ஏதேயினிநாங்க ளெங்களாலானமட்டு ம்
உண்மைமிகச்செலுத்தி யுனதுயிரைக்காப்போமெ ன
பண்புடனேயிவர்கள் பகர்ந்ததோர்வாக்கியந் தை
சிந்தரசன்றான்கேட்டுத் தேறியினிநா னே
எந்தவிதந்தப்புவோ மென்றிருந்தான்காணம்மா னே

**{ அருச்சுனன் தன்மகனைப்பார்க்கப் பார்க்களஞ் செல்லுதல். }**

இந்தவிதம்பேசி யிவர்களிங்கேயிருக் க
அந்தவிஜயதர னுயர்முகம்நோக் கி
யுத்தகளத்திலுயி ரொடுங்கிக்கிடக்குமெந்த ன்

புத்திரனைப்போய்ப்பார்த்து புண்ணியரோவாரோவென்று ன
கரியவண்ணனிடம் கேட்டுக் கதிரோன்மறைந்துவிட்டா ல்
இருந்தாப்பார்களுமங் கேகக்கூடாதென வே
ஞாயமிருப்பதினல் நாம்போகலாகாதெ ன்
ருயருவைத்திடக்கேட் டருச்சுனன்சொல்வானெ ன்
புத்திரன்றன்முகத்தைப் போய்ப்பார்க்கா திங்கிருந்தா ல்
உத்தமனேயென்கவலை யொழியாதென்றுரைத்துப்போ ல்
தருமன்கதைவீமன் முங்களிருவர்களு ம்
வருமன்சிலருடன் தீவர்த்தியுடனேபோ ய்
அருமையுடன்குழந்தை யபிமன்னனைப்பார்த் து
உருகியனமிடைந்து ஓவென்றழுதாருண் டு
கனியேகனிரசமே கண்ணேயபிமன்னனே நீ
தனியேரணகளத்திற் றுறங்கவந்தா யோ
உன்னையின்னங்காணும லோடிவந்தோம்நாம்தே டி
மன்னனேநீயெழுந்து வாடாநம்பாசறைக் கு
எங்கள்மீதிற்கோப மேதுமுண்டோவுனக் ரு
தங்கத்துரையேயென் சாமிநீசொல்வா யே
வாயைத்திறவாமல் மறுவார்த்தைபேசாம ல்
சேயேநீகண்ணுறங்குஞ் செய்தியறியே னே
ஓலச்சக்கடலமுதே யுன்னைவிட்டோமினி ம்
பாசறைக்குப்போவேனே பாவிநான்வாழ்வே னே
என்றழுதானவனோ டவர்களுந்தானழு று
வெற்றிவிஜயனுறும் விசனமதனைப்போக் கி
அவசரமாயிவர்க ளவ்விடத்தைவிட்டகன் று
நவமானபாசறையை நாடியேவந்தணு கி
அருகினில்நிற்குமந்த வரசர்முதலோ னா
கரியமாலங்கிவ்வண்ணன் கண்ணுறங்கப்போங்களென் று
விடைதந்தனுப்பிவிட்டு மேன்மைமிகுந்தரும ன்
அடர்ந்தகதைவீம னருச்சுனராஜமன்ன ன்
நகுலன்சகாதேவ ராஜரிருவரையு ம்
முகுந்தன்தனித்தழைத்து மொழிவான்காணவர்க ளே
நேர்ந்தகவலையிந்த நிலத்தின்மீதுங்களுக்கு த்
தீர்ந்துதீராதிருக்கச் செஞ்சிலைவீரனிவ ன்

தேவர்களாலுந் திசைவேந்தகளாலு ம்
மூவர்களாலு முடியாச்சபதமி தை
முடிப்பேனெனத்துணிந்து முன்பின்யோசிக்காம ல்
துடிதுடிப்பாகவேதான் சொல்லிவிட்டானுத்திரமா ய்
என்னசெய்வோமிதற்கென் றெம்பெருமாளன்றுரைக் க
நன்னிலைமைநீங்காத ராஜனெனுந்தரும ன்
பார்தாமனைநோக்கிப் பச்சைமாலச்சுத ரே
அரிதாமிதைமுடிப்ப தய்யனேநின்கட மை
எல்லாம்படைத்தமழித் திரட்சிக்கும்வல்லவ னே
எல்லாமுனதுசெய லில்லாமலாவதில் லை
காக்குங்கடவுளுன்றன் கருணையேதஞ்சமென் று
வாக்குரைத்துத்தவரு மன்னனுரைக்கக்கேட் டு
சரிதான்காணாமிதற்குத் தகுந்தமுயற்சியி னி
விரிஞாலமீதுசெய்ய வேண்டியிருப்பதினு ல்
நீங்களுஞ்செல்வியருள் நிறைந்தநம்பாசறைக்கு ப்
போங்களெனவேவிடை புகன்றவர்களையனுப் பி
மைத்துனனாகியதோர் வாள்விஜயனைப்பார்த் து
உத்தமனேநாமினிமீ துமதுமனைவியரு ம்
மற்றவருந்தானடையும் வருத்தமதையுந்தீர்த் து
உற்றபேரன்புடனே யுபசரித்துநாம்வருவோ ம்
வாருமெனத்திருமால் வாள்விஜயனையழைத்து ச்
சீராரந்தப்புறத்திற் சென்றார்காணம்மா னை

### சுபத்திரையாள்புலம்பல்.

தேவகினந்தனனுஞ் சிலைவிஜயனுனவனு ம்
மாவளஞ்சேரந்தப்புறம் வருகுஞ்சமயமதி ல்
கன்னிசுபத்திரையுங் கற்பார்பாஞ்சாலியு மே
மின்னிடையுத்தரையும் மேவுமற்றியாவர்களு ம்
காரோசையாலாலங் கடலோசையைப்போ லே
பேரோசையிட்டழுகும் பெண்களவர்களுக்கு ள்
அபிமன்னனனவனை யருந்தவத்திலீன் ற
சுபத்திரைநாயகியாள் சோம்பியேவீழ்ந்தெழுந் து
கனுவிலாச்செங்கரும்பே கல்விரசச்சுரும் பே
மணியேயெனதிருகண் மணியேமணியொளி வே

காளின்றநாயகமே ராஜருக்குத்தாயக மே
தேவீன்றவாக்கியனே தேடருந்திலாக்கிய னே
அருக்கனைநேர்சுதனே யழகியமன்மத னே
வெருட்டிவிலாச்செந்தேனே வேந்தர்பெருமா னே
வாசந்தருமருவே மதியாத்திருவுரு வே
மாசங்கரப்பேரே மருமன்னச்சிங்கே றே
விண்மெருமகனே விஜயன்றிருமக னே
அண்டர்மகிழ்கனமே ஐவர்தேடுந்தன மே
உன்றன்பெரியதந்தை யுரைத்தபடிபோர்க்களம்போ ய்
வென்றியுடனேசமர் விளைத்துப்பகையொழித் து
படைக்கொருவன்நீயெனவே பாருலகோர்சொல்லவெற் றி
படைத்தநின்வல்லமையைப் பாலனேயுன்றந்தையிட ம்
நீவந்துசொல்லவவர் நெஞ்சங்களிகூர ப்
பரவிநானுன்முகத்தைப் பார்த்துமுகமல ர
சிகாத்தேரேறிவந்து சேதிநீசொல்வதற் கு
பக்ஷேகுகனேயென் மதியேபதிகிதி யே
இக்கணித்தாமதந்தா னேதோவெவர்கு தோ
உத்தமனேநானறியே னுனைவிட்டினித்துநீயே ன்
மலைகள்கலங்கிடிலு முன்கலங்காத்திணைபுய னே
மலையேயுதிமேய்ந்தவரு மாசிலாக்கேசரி யே
இப்படிமோசந்தா னெனக்குச்செய்வா யா
எப்படியான்பிழைப்பே னென்றந்தமாவிணையா ள்
கண்டபடிபுலம்பிக் கதறிமனம்பத றி
அண்டமதிர்ந்திடவே யழுதனள்காண்மகா னே

## துரோபதை புலம்பல்.

பாஞ்சாலன்வேள்விதனிலெடுத்த பாஞ்சாலிநாயகியா ள்
தேஞ்சாரென்பேகளும் சிரமிமீனைக்குறித் து
முட்டியேவீழ்ந்தெழுந்து முகத்திலறைந்துகொண் டு
கட்டித்திரவியமே கனகமணிப்பொக்கிஷ மே
ஆருமற்றபாவியெனக் கருந்துணைநீதானென வே
காரிளையவ்நாளிருக்கக் கைதவறிவிட்டா யே
கடலைக்கடந்தெளிதாய்க் கரையேறப்போம்பொழு து
படகுடைந்தேயிறந்த பாவிபோலானே னே

என்கூந்தலைமுடிக்க வேந்தலாய்வந்தமைந் த
கண்கூர் தவமணியே நானுனைத்தானிழந்தே ன்
அழகும்பெருஞ்சிறப்பு மாண்மையும்நற்புகழு ம்
பழகுந்தவந்தானம் பத்திவிசுவாச ம்
சத்தியம்பூததயை தாட்சண்யம்நல்லறி வு
இத்தனையுமிருந்து பிறந்தாயோகண்மணி யே
அங்காடிக்கூடைதனை யதிரவிலைகூறின மோ
பங்காளியைப்பகைத்துப் பங்கில்லையென்றே மோ
வரியாற்குடிகளைநாம் வருத்தப்படுத்தின மோ
குருசொற்றடுத்தோமோ கொடுங்கோன்மைசெய்தோ மோ
தாலிகட்டுங்கல்யாணந் தன்னைத்தடுத்தோ மோ
வேலியிட்டவம்பயிரை மிதித்துக்கெடுத்தோ மோ
கோவிற்குளங்கள்தனைக் குலைத்துக்கெடுத்தோ மோ
காவிற்பூஞ்சோலைகளைக் கலைத்திங்கழித்தோ மோ
கடனுளியைவாசல் காத்திருக்கவைத்தோ மோ
உடன்பிறந்தோர்கள்தனை யோட்டியடித்தோ மோ
குடியருறவாடிக் கூடித்திரிந்தோ மோ
தடியாற்பசுவினங்கள் தன்னையடித்தோ மோ
தீயிட்டுமோசமிகச் செய்துநாம்வாழ்ந்தோ மோ
தாய்தந்தையர்வார்த்தை தன்னைத்தடுத்தோ மோ
வேதங்கள்பொய்யெனவே வெறுத்தோமோயின்னமென் ன
பாதகங்கள்செய்தோமோ பாவிநான்கண்மணியே ன்
வையமதிலெங்களுக்கு வந்ததேயிந்தவி னை
தெய்வமேயென்றுருகித் திகைத்தாள்காணம்மா னை

உத்தரை புலம்பல்.

பச்சைப்பசுங்கிளியைப் பறித்துப்புகைத்தசொல்லா ல்
மச்சவளநாடன் மகளாருமுத்தரையா ள்
திருமேவுதன்னுடலுஞ் செந்தாமரைமுகமு ம்
கருகிச்செயல்குறைந்து கண்ணீர்நதிபெரு க
அத்தாவேயன்னையேயென் றருச்சுனன்றன்பதத்தி ற்
பித்தேறும்பேயரைப்போற் பெண்கொடியாள்தாள்வீழ்ந் து
வாயிலறைந்துகொண்டு வயிற்றைப்பிசைந்தெழுந் து
பேய்போற்பாதவித்துப் பெருங்குறலிட்டல றி

யென்சாமியெந்துரையே யென்பிராணநாதனென்னு ம்
அஞ்சாதசிங்கமே யரசரணிமுடி யே
சல்லாபமாகவென்னைத் தழுவியசெந்தே னே
நல்லாண்மையிற்சிறந்த வித்வஜனர்நாயக மே
கருணைக்கடலேயென் கதியேயுமைப்பிரிந் து
பரதவித்துநிற்கவென்றோ பாவினன்பெண்பிறந்தே ன்
எதுக்குயான்பாவி யிருக்கின்றேன் பூமிதனி ல்
வாதுக்கோவென்னுடலை வளர்த்தேனெனப்புலம் பி
மாமன்முகம்நோக்கி மதிமயங்கித்தியங்கி க்
காமனுக்கொப்பாமென் கணவனையான்பிரிந் து
விதவையாய்நானிருக்க வேதன்விதித்தா னோ
வதுவையெனப்புவியோர் வாழ்த்தியபேர்போச் சே
எந்தன்வயிற்றினிலே யிந்தக்கருவதுதா ன்
தந்தையைக்கொல்வதற்கோ தரித்ததுகாணுறுதிங்க ள்
வீட்டினில்வந்தெனக்கு விந்தையுடனேதாங்க ள்
நாட்டியங்கற்றுவைக்க நானறிந்துவாழ்ந்தே னே
மாமாசரியாமா மாபாவியானிருந்தா ல்
காமாதருள்பெறுமென் நாயகனார்தன்னுட னே
நானுமிறந்திடுவேன் ஞாலந்தனிலெனவே வே
வானமும்பூமியும்மீன் மலையுமகினைத்துரு க
கல்லுமுருகக் கடலும்கசிந்துருகி ப்
புல்லுமுருகப் பூணடுகளெலாமுரு க
சோம்பிக்கணாயுளத் துக்கக்கண்ணீர்வடிந்து த்
தேம்பியழுதபுத்தி சிதறநின்றுளம்மா னை
விஜயனதையறிந்து விதிர்விதிர்த்துச்சோர்ந் து
அதைவற்றுநின்றான்கா ணூர்க்குமஞ்சாதகண ன்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தேற்றுதல்.

இந்தவிதமிவர்க ளேங்கிப்புலம்புவதை ச்
செந்திருமாலறிந்து தேற்றியுபசரித் து
அம்மணிநீங்களிவ்வா றழுதுபுலம்புவதா ற்
செம்மலெனுமபிமன் றிருமபிவருவதுண் டோ
வந்துங்களைப்பார்த்து வாய்திறந்துபேசுவ ரோ
இந்தப்பெருங்கதையா னிதுவரையுங்கேட்டதில் லை

செந்தாரிணிப்பிழைத்துத் திரும்பிவருவார்க்கொன் தே
இத்தாரணியிலெல்லன்றிகவர்களுக்குச்சொல்லவிவ் லே
வீரனையோசனையை விளைவித்தீர்க்கிங் யோ
காளுற்றக்கணட்டொருகணைதபோர்க்கலம்புதீர்க ன்
எங்களுக்கில்லை விறக்கமுஞ்சஞ்சலமும் ம்
உங்களுக்குற்றதென்ன வுருக்கமறியே னே
போர்க்களஞ்சென்றெதிர்த்த பேர்வேந்தரைத்தோர்க் இ
தீர்க்கமுடன்புவியிற் ஜெயநிலையைத்தானுட டி
என்றுமதியும் விருக்கும்பகவிபெற் ற
மன்றல்மிகுந்தபுய வாளபிமனைக்குறித் து
வருத்தப்படவேநிறும் வருகின்றவாபமென் ன
வரத்தாலுதித்தவுங்கள் மதலையைக்கொன்றவ னே
நாளைப்பொழுதினுக்குள் நமனுலகேற்றுகிறே ம
வாளைவென்றவன்னனோ சேர்வருத்தமினிவேண்டா ம்
ஆறுதலுங்கேளுநுமக் கருமைமருமகனா ம
மாரனிவந்தனையோர் மகிமையுங்கண்டறியா ன்
சொல்லாலவன்முதல் தாயரையவதீனாய ம
எல்லாமனுபவித்திங் கின்மைமனுபவிக் க
வேண்டியதின்முதலும் வித்துமுடையார்நீங்க ள
ளாண்டவர்களைக்குறித்து வருந்தக்கூடாததினு ல்
நீங்களிருவர்களும் சேரிளையாளுத்தனையை த்
தாங்கியுபசரித்துத் தையலவளையடு ம்
வெல்தனைமாற்றக் கடவீரெனவுரைத் து
இவர்களுமுத்தரையை இனிதசகவேதேற் றி
இங்குவிக்கிரதனி லெழுந்தவண்டிக்கரைத் து
தங்கவினைத்தாருந் தாங்களுமங்கேயிருந் து
உலகவழக்கமதை யொத்தந்தப்பாசறையி ற்
குலாவிக்கவர்ந்துக்கங் கொண்டாடியாவருக்கு ம்
தன்னமுதலியதோர் தன்மைகளுஞ்செய்துவைத் து
மாளிகையுத்தரையாள் மனககலக்கியப்போக் கி
தாங்கள் தாங்கள்வசிக்கத் தக்கவிடத்தைநாடி த்
நீங்காவேயாவரும்போய்ச் சேர்ந்திருந்தாரம்மா னை

### { ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனைப் பசியாறச்சொல்லுதல். }

இவ்வண்ணமாகவேதா னிவர்களிங்கேயிருக் க
...ன்னனாகியமால் வாள்விஜயனையழைத் து
தேனருஞ்சோலையினுட் சென்றுன்காணப்பொழு து

வாருட்டரசன்மகன் வாள்விஜயன்றன்சோர்ந் து
நடந்தவருவதனை நாரணனுர்தான்பார்த் து
படர்ந்ததிருப்புயனே பார்த்தனேநெஞ்சணர்ந் து
வாடிமுகஞ்சுழித்து வருகின்றாய்நீசோம் பி
நாடியோர்காரியத்தை நாமினிப்போவதினு ல்
காரியமானதனைக் கைக்கொண்டுவந்தோமென்று ல்
வீரியனேநாளை வெற்றியடைந்திடலா ம்
கைகொள்ளாவிட்டால்நாம் காரியமாவதில் லை
மெய்கொண்டவாசகனே விஜயனேயாகையினு ல்
உற்றதோர்வார்த்தையுளக் கொன்றுசொல்லநீகேளா ய்
நற்றவத்தோர்வாழுமிந்த நன்மலர்ச்சோலைகளி ல்
பண்டுபலாதியெங்கும் பரவியிருப்பதினு ல்
உண்டுபசியாறென் றுபசரித்தானப்பொழு து
விஜயதரனைத்து வெண்ணையுண்டமாயவ னே
திசையழிந்துபோனலுஞ் சின்னஞ்சிறியேன்யா ன்
மாசிலாமேருதனை வளைத்தமகாதேவ ர்
பூசைமுடிக்காமல் புசித்ததுண்டோநான்புவியி ல்
எல்லாந்தெரிந்திருந்து மௌனமோசெய்யவந்தி ர்
வல்லாயெனவுரைக்க மைவண்ணனன்றன்கேட் டு
மாற்றார்வெலமுடியா வாள்விஜயனேயுடல ஞ்
சோற்றாலடித்த சுவரான்றாமான ம்
கசிந்துறவுசெய்மோகங் கல்வியறிவுகுல ம்
பசிவந்தாமாறும் பறந்தோடுமென்பார்க ள்
பார்த்தனேயானதினும் பசிவருத்துமுன்னேயெ ன்
சீர்த்தியுடனுரைத்தேன் சிவபூசையிவ்விடத்தி ல்
செய்துபசியாருந் தேர்வேந்தேயென்றுரைக் க
மெய்தான்காண்டேவரீர் விளம்பியதெலாஞ்சரி யே
ஈசன்திருப்பூசை யென்வசமிப்பொழு து
வாசவனுர்க்கிறையே மறைமுடிவேயிலை யே
என்னநான்செய்வேனென் றிசைத்தான்விஜயதர ன்
அன்னவிஜயனைப்பார்த் தாயருமங்கேதுசொல்வா ர்
ஜெகமீதெனைநீயுஞ் சிவலிங்கமாயமைத்து ப்
புகழ்சேர்மலர்தூவிப் பூசைமுடிப்பையென்று ன்
மொழியுஞ்சிவலிங்க முகூர்த்தமாகத்தாங்க ள்
வழுவறவேயனையும் வகையெவ்வாறென்றுரைக் க
வல்வினைக்கேட்டென் மைத்துனபாரென வே
குலவிருகால்களையும் குத்துக்காலாகவைத் து
இசைந்திடுங்கால்களதை யிரண்டுகரத்தாலு ம்
பசையாகியயோக பட்டைபோற்கட்டியொளி ர்

பவளக்கரங்கள்விரல் பத்தையுந்தான்குவித்து ச
சிவலிங்கருபமதைச் செந்திருமால்காட்டினன்கா ண்
விஜயதரன்பார்த்து வில்வமுதலா ன
இசைந்தமலர்கள்சில தெடுத்துவந்துமாலைகட் டி
கட்டியமாலைதனைக் கபாலிதனக்கணிந் து
மட்டிலாதோங்குருத்ர மந்திரத்தையுச்சரித் து
பூசைமுடித்துப் போசனமுஞ்செய்தெழுந் து
ஆசையுடனவர்க ளவ்விடத்தைவிட்டகன் று

### அருச்சுனன் நித்திரைசெய்தல்.

சற்றுதூரம்நடந்து தனஞ்செயனைமால்நோக் கி
உற்றபுகழ்வேந்தே யுண்டவிளைப்பா ர
நீயிவ்விடத்தினிலே நித்திரைகொள்சற்றென வே
மாயனுரைத்திடவே வாள்விஜயன்றனிசைந் து
ஆயாசந்தீர்ந்திடவே யவ்விடத்தினிலினிதாய் ப்
பாயாகத்தர்ப்பைகளைப் பரப்பியதிலமர்ந் து
வண்ணத்திருமேனி மலர்க்கைதுலங்குமுகி ல்
வண்ணத்திருமால்தன் மடிமேற்றலையைவைத் து
சாம்பசிவனையெண்ணித் தனஞ்சயன்றான்படுத்து ச்
சோம்பலெல்லாமகலத் தூங்கினன்காணம்மா னே

### ஸ்ரீகிருஷ்ணமூர்த்திதன்சாரதி தாரகனை நினைத்தல்.

இந்தவிதமாக வெம்பெருமான்றுடையி ல்
அந்தவிஜயகர னயர்ந்தங்குகண்துயி லு
வானகரிந்திரனும் வானோர்முதலோரு ங்
தானங்குவந்தனந்த சயனனைப்போற்றிநிற் க
மாயனவர்தொடைக்கு வதிலாகவேமண லை
நேயமுடன்குவித்து நித்திரைசெய்யுமந் த
தனஞ்சயன்றன்னுடைய தலைக்குயரமாகவைத் து
நனிசேர்மலர்கள்தனை நான்குபுரமுந்தூ வி
படையாயுதங்கள்தனைப் பக்கத்தில்நட்டுவைத் து
அடர்வனதேவதைக ளனைத்தையுங்காவல்வைத் து
ஆகாயவாணியையு மரும்பூமிதேவியையு ம்
வாகாகத்தானேத்தி மாதருமர்தம்பியிவ ன்

பார்த்தனிவனுக்கோர் பயமென்பதில்லாம த்
காத்தலுமதுடைய கடமையெனவுரைத் து
தானவ்விடத்தைவிட்டுத் தனித்தோரிடமணு கி
வானவர்கோனிந்திரனை வாஞ்ஞரனைவரையு ம்
பார்த்துக்களித்தினிமேற் பயமில்லைக்காணமக்கு ச்
சித்திமிகுங்கயிலைச் சிவபெருமான்றன்னிடம்போ ய்
பேசரும்பாசுபதம் பெற்றுவருகப்போனூ ம்
பூசிதரேகைங்களினிப் போங்களெனவனுப் பி
பஞ்ருகந்தான்மேவும் பரமபதத்திருக்கு ங்
தன்சாரதியான தாரகனைத்தானினைந்தா ர்
நினைத்தவுடனேவந்து நின்றனடிவணங் கி
அனைத்துயிரையுங்காக்கு மாயரவனைப்பார்த் து
போற்றுநம்சாரதியே பூபாரந்தீர்ப்பதற்கு ச்
சாற்றும்பரமபதந் தன்னைவிட்டிங்குவந் து
ஜீவர்சகாயனென யானவர்களுக்குத வி
செய்தவரோடிணங்கிச் சீர்தூக்கியேவருங்கா ல்
காண்டீபன்பெற்றெடுத்த காளையபிமன்னென்போ ன்
மாண்டதினல்நாளை மாலைப்பொழுதினுக்கு ள்
பொல்லாதபாவிசிந்து பூபனைக்கொல்வமென்று ங்
கொல்லாவிடிற்றீயிற் குதித்திறந்துபோவமென்று ம்
கோவேந்தர்முன்சபதங் கூறியிருப்பதினா ல்
தேவேந்திரன்பாலன் தேவர்க்கனுகூல ன்
சொன்னபடிநாளைத் தொடுக்கின்றயுத்தமதி ல்
அன்னவிஜயன்வெற்றி யடைந்தால்நமக்குநல ம்
வெற்றியடையாமல் விஜயனிறந்துவிட்டா ல்
உற்றநமதுயிருக் குயிரானசாரதி யே
ஆயுதங்கையிலெடுத் தமர்செய்வதில்லையென் ற
ஞாயமிருந்தாலும் நாமதனைப்பாராம ல்
சக்கரத்தேரேறிச் சக்ராயுதமெடுத் து
மிக்கபடைபொருத வேண்டியதாயிருக்கு ம்
அந்தச்சமயமதில் யான்பாஞ்சசன்யம தை
உத்தும்படியெடுத்திங் கூதுவேன்பொழு தி
அவ்வோசைகேட்டவு டனழகுமணித்தேரு ங்

தெய்வோசையில்லாமற் ஜெயிக்குஞ்சக்ராயுதமு ம்
சங்குமும்வில்வாளுந் தண்டுமிவைகளுட ன்
மங்களமாகவேநீ வருவாயெனவுரைத் து
சாரதிதாரகனுந் தானுமன்மிராமுளுது ம்
பேரன்புடன்கலந்து பேசிவருகையினி ல்

## {ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அருச்சுனன்கனவிற் றோன்றுதல்.}

சொன்னசபதமதைச் சோர்வறவேநா ளை
என்னமாநாமுடிப்போ மென்றநினைப்பாலு ம்
மகனுனவாளபிமன் மடிந்ததுயராலு ம்
பகலோனைக்கண்டொடுங்கும் பனிபோலிடைடந்துரு கி
மயங்கியங்குநித்திரைசெய் வாள்விஜயன்சொற்பனத்தி ற்
கயந்தனைக்காத்தசெழுங் கண்ணபிரான்மே வி
நின்றுனெதிரிலந்த நிருபனவரைப்பார்த்து க்
குன்றாப்புகழ்படைத்த கோவேயெனவணங் கி
கண்கலங்கிநின்றான்காண் கண்ணனவனைப்பார்த் து
மண்புவியிற்கீர்த்திபெற்ற வாள்விஜயனேவுனக் கு
நேர்ந்தகவலையென்ன நீயெனக்குச்சொல்லென வே
சார்ந்தபுகழ்நெடுமால்தானவனைத்தான்கேள்க் க
வேதமுதலே வேதாந்தமெய்ப்பொரு ளே
மாதவமேயென் துயரை மாற்றவந்தநாயக மே
சமர்க்களத்திலேநாளைச் சயிந்தவனைக்கொல்லுவதா ய்
குமுனர்கள்முன்சபதங் கூறியிருப்பதினா ல்
நான்சொல்லியசபதம் நாரணரேமுடிய த்
தேன்சொல்லுடையவுன்றன் திருவாக்குவேண்டுமென்று ன்
மாயனதைக்கேட்டு வாள்விஜயனைநோக் கி
ஞாயங்காண்போர்விஜயா நானொன்றுசொல்லுகிறே ன்
தேகவருத்தமதைச் சிறிதும்நீபாராம ல்
வேகமுடனெழுந்து விஜயாயென்கூடவந்தா ல்
உன்காரியங்களெல்லா முறுதியுடன்முடியு ம்
பின்காரியங்கள்தனைப் பேசிக்கொண்டேபோவோ ம்
வாருமெனத்திருமால் வாள்விஜயனையழைக்க ப்
பேரும்பிரபலமும் பெருமையுமாண்மைகளு ம்

குறையாஜெயவிஜய் கோமானதற்கிசைந் த
இறையாஞ்சிவபெருமா னெழுந்தருளியாயிருக்கு ம்
கயிலைதனைநாடிக் கண்ணபிரானுட னே
தயிரியமாவிஜயன் றானடந்தானம்மா னே

{ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அருச்சுனராஜனும் பாசுபதாஸ் திரம்பெற்றுவர கைலையங்கிரிக்குப் போகுதல்}

மலையெடுத்தாயர்களின் மனத்துயர்தீர்த்தவனு ஞ்
சிலையெடுத்தண்டர்பகை தீர்த்தஜெயதரனு ம்
அண்டசராசரங்கள் யாவுக்குந்தாயா க
அண்டமுடிவுவரை யடர்ந்துவளர்ந்துநிற்கு ம்
சீரார்கயிலைமலை சென்றாங்குளசிறப் பை
ஏராரிருவர்களு மின்பமுடனேபார்த் து
சிந்தைமிகமகிழ்ந்து சிவபெருமான்றன்னிடம்போ ய்
எந்தையேயெப்பொருட்கு மிறையேமறைமுடி வே
பூரணபுராந்தகனே புகழ்சேர்பதயுக னே
காரணத்திருவுருவே கமழ்நன்மலர்மரு வே
திங்கட்சடையோனே திகழ்வெள்விடையோ னே
எங்குந்தானானவனே யெல்லாம்படைத்தவ னே
ஆதியேபோற்றியெம்மை யாண்டருள்போற் றி
சோதியேபோற்றியெங்கள் துயர்தீர்த்தருள்போற் றி
என்றவ்விருவர்களு மிறைஞ்சிநின்றார்களதை க்
குன்றவில்லிதான்பார்த்துக் குமுதவிதழ்திறந் து
நந்தலிலாப்புகழ்சேர் நாராணனெ ள்ளிங்க
இந்தவிருட்டினிலே யித்தனைதூரமிங் கு
வந்தவிபரமென்ன வழுத்துமெனக்கேள்க் க
நந்திக்கொடிபிடித்த நாரியொருபா கா
தேவர்குறைதீர்க்கத் தேவரீரெங்களுக் கு
ஆவலுடனேதந் தருளியுதவிசெய் த
பக்குவமாகியதோர் பாசுபதாஸ்திரமு ம்
முக்கியமந்திரமும் முஸ்டிகிலைதனையு ம்
பாரதயுத்தமினிப் பண்புடனேநாம்நடத்தி த்
தீரியமேர்துகையான் துரியோதனன்முதலா ம்
தாக்குமரசனையுஞ் சகலபடைவீரரையு ம்
போக்கிக்குறைவறவே பூமிபாரந்தீர்க் க
கந்தருளவேண்டுமின்று சங்கரசிவாயவெ ன
விந்தமெடுத்தவனும் வில்லெடுத்தோனுங்கேள்க் க
அம்மானைக்கூர்மழுவை யங்கைதனிற்பிடித் த

பெம்மானவர்கள்சொல்லைப் பெருமையுடனேகேட் டு
அருள்செய்வோமப்படியே யாமுங்களுக்குதவி ப்
பருமணிவில்லுமுயர் பாசுபதமுமிந் த
மருக்கமழுங்கயிலை வாயுவுமலைதனி ல்
இருக்குந்தடாகமதி லிருக்கின்றதானதினு ல்
ஆசாரவுத்தமர்க ளாகையால்நீங்களினி க்
கூசாமலவ்விடம்போய்க் கூறுமவைகள்த னை
எடுத்துவாருங்களென விசைத்துச்சிவபெருமா ன்
அடுத்துவந்தங்குநிற்கு மவர்களிருவருக்கு ம்
மெய்படியார்சிலரை விடுத்தான்வழிகாட் ட
துய்யமதிச்சடையோன் சொற்போலிருவர்களு ம்
சென்றந்தப்பாசுபதாஸ் திரங்கள்தனையிவர்க ள்
நன்றியுடனெடுக்க நாடுஞ்சமயமதி ல்
ஆயிரமாயிரமா யரவங்கள்தானெழும் பி
மாயனையும்போர்விஜய மன்னவனையுந்தடுத் து
நெருங்கியங்கேகுதற்கு நேர்மையில்லாதுசெய்ய க்
கருங்கடல்வண்ணனுமே காண்டீபனும்பயந் து
நெருங்கியிப்போதேயிந்த ஞாயஞ்செய்தாலினிமே ல்
அடங்கிநமக்குவச மாவதெவ்வாறென வே
திரும்பிவந்தார்களதைச் சிவனடியார்தானறிந் து
விரும்பியவரிடம்போய் வெருட்சிதனைத்தேற் றி
உத்தமர்களேயிவைக ளுயர்நாகசர்ப்பமல் ல
பித்தன்பிறைமௌலி பேராகுங்காணிதுதா ன்
பாசுபதாஸ்திரமாம் பாருலகிலெல்நீங்க ள்
ஆசாரமில்லாம லதனிடம்போனதினு ல்
வித்தகரேயுங்களுக்கு விபரீதந்தோற்றுதிவ்வா ர்
வித்தியகட்டளையை நீங்களினிமுடித் து
திருமேவுருத்ரசெபஞ் செபித்ததனைப்பத்தியுட ன்
கருதுவீராகிலுங்கள் கைவந்துசேருமென்று ர்
சிவனடியார்கள்சொன்ன செய்திதனைக்கேட்டு த்
தவவடிவாகவந்த தனஞ்சயனும்நாரணனு ம்
தான்முடித்துத் தபஜெபம்யாவுமுடித் து
மான்பராபரன்தனை மனதில்நினைத்தார்க ள்
மனதில்நினைத்தவுடன் வலிதாம்பாசுபதமு ங்
கனமிகுவில்லுமிவர் கைவந்துசேர்ந்ததுகா ண்
நரநாரணருமதனை நன்றியுடனெடுத்து ப்
பரமனெதிரில்வந்து பணிந்துநின்றார்கள தை
காமனைக்காய்ந்தசிவன் கண்குளிரவேபார்த் து
பூமியில்லையுமெனப் புகன்றங்கெதிரேநிற்கு ம்

ஜெயந்திதேவர்தனைச் சிவபெருமான்றனைத் து
ம்பலேறுபிந்தவில்லின் முஸ்டிநிலையமுடித் து
நரநாரணனுரிவற்கு நலமுடனேகாட்டிடன வே
அரவாபரணனென்போ னருள்வாக்கியப்படி யெ
நந்திபிரானுமந்த நனிவிற்றனைநிறுத் இ
விந்தையுடனிழுத்து விண்ணதிரநாண்பூட் டி
தக்ககரவேக சரவேகமுங்காட் ட
முக்கியமாகவந்த முஷ்டிநிலையாவு ம்
நருநாரணனுணர்ந்து நவிலிதன்மந்திரத் தை
அருளுமெனச்சிவனு ரடிபோற்றிநின்றிட வே
பித்தனந்தயறிந்து பிரணவமந்திரத் தை
பத்தியுடன்கேட்கும் பார்த்தன்றிருச்செவியி ல்
உண்மையுடனரனு ருபதேசித்தாரத ளை
மண்பாரொளம்புகழு மாலுந்தனஞ்சயனு ம்
விண்ரவாயநிந்தரனை வேண்டிவணங்கிநிற் க
சரிதான்காணீங்களிந்தத் தனுர்பாணத்தையெடுத் து
சார்ந்திங்கேமுன்னிருந்த தடாகத்தில்வைத்துவிட் டு
சேர்ந்தங்கிருவர்களுஞ் செம்நீர்களாமாகி ல்
கருணையுடனேயுங்கள் கைவந்துசேருமென் அ
அருள்வாக்குரைத்தான்கா ணந்தப்படியிவர்க ன்
மனமேவுவில்தனையும் வலியபாணத்தையு மே
குணமுடன்முன்னெடுத்த குளத்தினில்வைத்துவிட் டு
பரமசிவனடியிற் பணிந்துவிடைகள்பெற் று
நரனும்நாராயணனும் நலஞ்சேர்கயிலைவிட் டு
கேசரிமார்க்கமதாய்க் கிளம்பியிருவர்களு ந்
தேசமர்பாசறைபோய்ச் சேர்ந்தார்காணம்மா ளை

## அருச்சுனன்நித்திரைதெளிந் தெழுந்திரித்தல்.

தனிமலர்ச்சோலை தனில்தர்ப்பாசனமீ தா
பனியாலயார்துருகிப் படுத்திங்குநித்திரைசெ ய்
வீரியனும்விஜயன மேற்சொல்லிவந்தவிந்த க்
காரியமானதெல்லாங் கனவாகக்கண்டெழுங் கா
ஆச்சரியமிகவுண் டாகியந்தமாயவனை த்
காட்சியிலாப்புகழ்சேர் தனஞ்சயன்றனைத்தா ன்
விஜயனழைத்திடவே வெண்ணெயுண்டமாயவனு ர்
இசைந்துதன்சாரதியா மெழில்தாரகன்றனக் கு
விடைகொண்டனுப்பிவைத்து விரைவுடனேடிவந்; தா
தொடைகொண்டதிண்புயனே சுரேந்திரன்புத்திர னே
வன்காணருச்சுனா விருக்கின்றேனுனிதோ தி ன்

பாங்காருடல்மிகவும் பதரும்விபரமென் ன
சொல்லுமெனக்கேட்க சுவாமிநானென்னசொல்வே ன்
சொல்லற்கரிதான சொற்பனங்கண்டேனென் று
தான்கண்டசொற்பனத்தைச் சவிஸ்தாரமாகவேதா ன்
தேன்கண்டவினியசொல்லான் செஞ்சிலைப்போர்விஜய ன்
சொன்னதைக்கேட்டுத் துழாய்மாலிகாபரண ன்
புன்னகைகொண்டிதுவும் புதுமைகாண்மைத்துன னே
மகனுளவனிறந்த மயக்கத்தினாலேயும் நீ
தகமையுடன்மொழிந்த சபதச்செயலாலு ம்
புத்திகலங்கிப் பொரிகலங்கிநீயிவிட ம்
சித்திரைசெய்ததினால் நினைவுகனவென் வே
சொல்லுகின்றாயிதுவுஞ் சொர்பனமல்லவென்று ன்
கல்லைமிதித்தனைக்காய்க் காட்டியமாயனிவ்வா ற்
பரிகாசமாகவேதான் பகர்ந்தானதைக்கேட் டு
அரியபுகழோங்கு மருச்சுனனுமேதுசொல்வா ன்
வையந்தனையளந்த மாயரேயென்கன வு
பொய்யென்றுசொல்லவந்தீர் பொய்யல்லப்பாருமி தோ
பேசரும்பாசுபதப் பிரணவமந்திரமி லை
மாசறும்வில்லதற்கு வகுத்ததோர்மூஸ்டிகி லை
அருள்சாகசத்தினிலை யாவையுமென்றேயுரைக்கு ந்
தருணமதிம்பாணந் தனிவில்லும்வந்ததுகா ண
கண்டாரிருவர்களுங் களித்தார்மனக்கவ லை
விண்டாரினிநாளை வெற்றிநம்பக்ஷமென் று
மாலுமருச்சுனனும் வந்தோர்குளக்கரையி ற்
காலைக்கடன்முடித்துக் களித்தங்கிருந்தார்க ள்
இத்தன்மையாகவேதா னிவர்களிங்கேயிருக் க
சத்தியவாய்மையென்றுந் தவறாத்தருமமன்ன ன்
மைத்துனன்மாயவனும் வாள்விஜயனுமவனு ம்
எத்தலஞ்சென்றனரோ வேதாய்விளங்கிடு மோ
அறியோமெனத்தரும ரன்றிராத்திறமுருகு ம்
வெறிகொண்டவர்போலே விழிதுயிலில்லாம ல்
கலக்கமுடனிருந்து கதிரோனுதித்தபின் பு
துலக்குங்காலைக்கடனைச் சோர்வறவேதான்முடித் து
தம்பியர்கள்முதலாஞ் சகலபடைவேந்தரையு ம்

நம்பிவருந்தமது நால்வகைச்சேனையையும்
உற்றபேரன்புடனே யுத்தகோலப்படுத்தி
வெற்றிமிருந்தருமன் விளங்கினன்காணம்மானை
இந்தப்பெருங்கதையை யினியவம்மானையதாய்
விந்தையுடன்பாட வேணுமெனவேகம்மை
மதுரைநகர்வாசன் வாஞ்சைமறவாநேசன்
பதியெங்கணுங்கீர்த்தி பரவுக்குபேரசெல்வன்
தானந்தவங்கள்செய்து சடையப்பனீன்றமைந்தன்
ஞானகுருபரனை நாளுமறவாதான்
புத்தகவியாபார புனிதனினியபுகழ்
முத்தையபிள்ளையென்போன் முக்கியமாய்வேண்டினதால்
வித்வஜனநேசன் வீரபத்திரதாசன்
பத்தியுடன்விரித்துப் பாடினேனம்மானை
முத்தேவர்வாழியந்த மூவர்மனையார்வாழி
அத்தேவர்கள்வாழி யரசரெலாம்வாழி
மதிகதிர்தான்வாழி வானிந்திரன்வாழி
சதுர்மாமறைவாழி தரைதலமெலாம்வாழி
திங்கள்மும்மாரி செழித்திடப்பெய்முகிலும்
எங்குமுளமனுவு மின்பமுறவேவாழி
இக்கதையைப்படிப்போ ரின்பமுடனேகேட்போர்
மக்கள்கிளைசுற்றம் வளர்ந்தோங்கவாழியவே

வாழி விருத்தம்.

மாதமும்மழைபொழியுங்கொண்டல்வாழி
மதிவாழிகதிர்வாழி வானோர்வாழி
பூதலத்தையாளுமன்னர் செங்கோல்வாழி
புகல்நான்குமறைவாழி தருமம்வாழி
மாதவஞ்சேர் கவிவாணர் குலமும்வாழி
வையகமெலாம்வாழி மனுக்கள்வாழி
ஈதறயிக்கதையதனை படிப்போர்கேட்போர்
ஜெகமதனி லென்றென்றும் வாழிதானே.

அபிமன்னன் சண்டை

முற்றிற்று.